வருடாந்த அறிக்கை

2020





Great Life Deserves a Great Tea - Ceylon Tea

இலங்கை தேயிலை சபை

வருடாந்த அறிக்கை 2020

வருடாந்த அறிக்கை

2020

இலங்கை தேயிலை சபை

LEAF TO CUP

PLUCKING

Plucking is the process of manually harvesting the top two tea leaves and a bud. The coarse leaves are never harvested. A long tradition dictates that tea leaves are plucked, never picked. Almost all Ceylon Tea is hand-plucked by expert tea pluckers who select only the tender most bud and two leaves, carefully isolating and breaking them off so as not to damage the leaf and importantly, to minimise the length of stalk attached to the leaf.



WITHERING



On arrival at the factory, the leaf is spread on withering troughs to dry, usually on the upper floors of the factory, with air being forced gently through the bed of leaves for around eight hours.



GRADING AND SORTING



The final stage of manufacturing is sifting and sorting, separating tea into grades based on particle size. Most of the stalk and fibre are removed to give the tea its cleanest and purest fragrance, flavour and appearance. In turn, the stalk and fibre are used to make instant teas, tea extracts, flavours and fragrances.

ROLLING



Withered leaves are fed into rolling machines, where they are twisted, releasing enzymes that give the tea its characteristic flavour. The nature and degree of rolling is masterfully controlled by the tea-maker so as to obtain the exact character he wishes the finished product to have. This rolling process also determines the twisted shape of the particles of made tea.

FIRING



Next, the tea leaves are passed slowly through a hot-air chamber until they become the familiar black colour. The leaves reduce to about one-fourth of their original volume after firing.

FERMENTATION



The rolled leaves are then spread out on tables, left to absorb oxygen for approximately three hours, turning them a coppery brown colour. During this process the polyphenol oxidises into theaflavin and thearubigins which give black tea its distinct color and taste. Deciding when to stop 'fermentation' is a crucial demonstration of the tea maker's skill because the key features of the beverage (e.g. flavour, aroma, colour, and liquoring characteristics) are largely determined during this time.

CEYLON TEA
SYMBOL OF QUALITY

Ceylon Tea
Pure Enchantment in a Cup

Only genuine Ceylon Tea from Sri Lanka carries this quality mark

பொருளடக்கம்

தூரநோக்கு மற்றும் குறுநோக்கு- 04

இலங்கை தேயிலை சபையின் உறுப்பினர்கள் - 05

கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள்- 06

சிரேஷ்ட நிர்வாக அலுவலகர்கள் - 06

ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் உறுப்பினர்கள் - 07

தலைவரின் செய்தி - 08

முக்கிய சிறப்பம்சங்கள் - 11

பெருநிறுவனப் பின்னணி- 12

கட்டமைப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் - 13

- தேயிலை ஆணையாளரின் பிரிவு - 14
- தேயிலை ஏற்றுமதிப்பிரிவு- 25
- தேயிலை ஊக்குவித்தல் பிரிவு- 28
- தேயிலை சுவைத்தல் பிரிவு - 36
- பகுப்பாய்வு ஆய்வுகூடம் - 39
- நிர்வாகப்பிரிவு- 43
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு - 44
- தகவல் தொழில்நுட்பப் பிரிவு- 44

தொழிற்துறையின் சுயவிபரம்- 45

நிதி மீளாய்வு - 80

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 117

இலங்கை தேயிலை சபையின் அலுவலகங்கள் - 125

அஞ்சல் முகவரி : இலங்கை தேயிலை சபை,574, காலி வீதி,கொழும்பு 03, இலங்கை.

தொலைபேசி : +94-11-2587814/2582121/2583687

தொலைநகல் : +94 112587341/2589132

ஈ மெயில் : teaboard@pureceylontea.com

வலையமைப்பு : www.srilankateaboard.lk

www.pureceylontea.com

தூரநோக்கு

சிலோன் தேயிலையினை, உலகச் சந்தையில் “மிகவும் விரும்பத்தக்க பானமாக” நிலைநிறுத்துவதாகும்

குறுநோக்கு

நிலையான அபிவிருத்தியினூடாக, நாட்டில் வெளிநாட்டு அந்நிய செலவாணிப் பரிமாற்றத்தினை அதிகரித்தல் மற்றும் அதனூடாக தோட்டத்தொழிற் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதாகும்

இலங்கை தேயிலை சபையின் உறுப்பினர்கள் - 2020

தலைவர்

திரு. ஜெயம்பதி மல்லிகொட

இலங்கை தேயிலை சபை

உறுப்பினர்கள்

டபிள்யூ. எச்.எஸ். சமரசேன

அமைச்சரின் பிரதிநிதி

மஹிந்த விதானப்பத்திரன

13.2.2020 லிருந்து இன்று வரை

தலைவர்,

தேயிலை சிறு தோட்டங்கள் அபிவிருத்தி அதிகாரசபை

டீ. டீ. மதனாராய்ச்சி

ஆகஸ்ட் 2020 வரை

நிதி அமைச்சு

நரேன் தம்பாவின்ன

மே 2020 வரை

சமந்த தொடன்வெல

மே 2020 லிருந்து இன்று வரை

கொழும்பு தரகர்களின் சங்கம்

சமிந்த விக்கிரமசிங்க

இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம்

சஞ்ஜெய் ஹேரத்

தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம்

டபிள்யூ. எம். டீ.ரி. விக்கிரமசிங்க

தோட்டத்தொழிற்துறை அமைச்சு

சுனில் பொஹோலியத்த

ஆகஸ்ட் 2020 வரை

திரு. லலித் ஒபேசேகர

ஒக்டோபர் 2020 லிருந்து

சிலோன் நடுகையாளர்களின் சங்கம்

டீ. ஜீவானந்தன்

ஒக்டோபர் 2020 லிருந்து

ஜயந்த கருணாரத்ன

கொழும்பு தேயிலை வர்த்தகர்களின் சங்கம்

கே.எல். குணரத்ன

இலங்கை தேயிலை சிறுதொழில் அபிவிருத்தி சமூகங்களின் கூட்டமைப்பு

கண்காணிப்பாளர்கள்

அணில் அல்விஸ்

கண்காணிப்பாளர்

28.2.2020 லிருந்து இன்று வரை

வர்த்தக அமைச்சு

கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் - 2020

தலைவர்

திருமதி. டபிள்யூ. எம். டீ.ரி. விக்கிரமசிங்க,
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), தோட்டத்தொழிற்துறை அமைச்சு

உறுப்பினர்கள்

டீ. ஜீவானந்தன்,
மேலதிக செயலாளர், வர்த்தக அமைச்சு

திரு. சமிந்த விக்கிரமசிங்க,
தலைவர், இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம்

கண்காணிப்பாளர்கள்

திரு. கே.ஏ.சி. சமந்த,
பிரதம உள்ளக கணக்காய்வாளர்,
தோட்டத்தொழிற்துறை அமைச்சு

திரு. எஸ்.ஏ. சிறிவர்த்தன,
பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலை சபை

திருமதி.எஸ். டீ. கட்டுவால,
கணக்காய்வாளர்களின் மேற்பார்வையாளர்,
தேசிய கணக்காய்வு அலுவலகம்

சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் 2020

திரு. எஸ்.ஏ. சிறிவர்த்தன,
பணிப்பாளர் நாயகம்

திருமதி. பவித்திரி பீரிஸ்
பணிப்பாளர் (ஊக்குவித்தல்)

கலாநிதி. கே.ஆர்.டபிள்யூ. அபேவிக்கிரம
பதில். பணிப்பாளர் (பகுப்பாய்வு சேவைகள்)

எச்.டீ.கே. ஜயசிங்க
சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளர்

திரு. ஈ.ஏ.ஜே.கே. எதிரிசிங்க,
தேயிலை ஆணையாளர்

திரு. கிராஸ் ஜெயங்க
பணிப்பாளர் (நிதி)

திரு.எஸ்.ஐ.சி. பெரேரா
உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்)

ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் உறுப்பினர்கள் - 2020

தலைவர்

திரு. ஜெயம்பதி மல்லிகொட

இலங்கை தேயிலை சபை

உறுப்பினர்கள்

திரு. எஸ்.அனுர சிறிவர்த்தன,

பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலை சபை

திருமதி. தரங்கி விக்கிரமசிங்க

மேலதிக செயலாளர், தோட்டத்தொழிற்துறை அமைச்சு

திரு. சஞ்ஜெய் ஹேரத்

தலைவர், தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம்

திரு. சுரங்க ஹேரத்

பிரதம நிறைவேற்று அதிகாரி, அமசொன் வர்த்தக தனியார் நிறுவனம்

திரு. முபாதல் ஜெபர்ஜி

உறுப்பினர், தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம்

திருமதி. பவித்திரி பீரிஸ்

பணிப்பாளர் (ஊக்குவித்தல்) இலங்கை தேயிலை சபை

திரு. ஹசித்த டீ அல்விஸ்

நிபுணர், தோட்டத்தொழிற்துறை அமைச்சு

திரு. தில்ஹான் சீ. பொன்னாண்டோ

பிரதம நிறைவேற்று அதிகாரி, MJF குழுமம்

திரு. தயாப் அக்பர்அலி

பணிப்பாளர், அக்பர் பிரதர்ஸ்

திரு. விஸ் கோவிந்தசாமி

முகாமைத்துவ பணிப்பாளர், சன்சயின் ஹோல்டின்க் தனியார் நிறுவனம்

திரு. ஜயந்த கருணாரத்ன

தலைவர், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம்

கண்காணிப்பாளர்

திரு. அணில் கூக்

ஏசியா சியாக்கா கொமோடிட்டிஸ் தனியார் நிறுவனம்

தலைவரின் செய்தி



அறிமுகம்

சிலோன் தேயிலையை சர்வதேச ரீதியில் "மிகவும் விரும்பத்தக்க பானமாக நிலைநிறுத்துவதே இலங்கை தேயிலை சபையின் தூரநோக்காக அமையப்பெற்றுள்ளது. இதன் பிரகாரம், தொழிற்துறையின் நீண்டுநிலைபெறும் அபிவிருத்தியினூடாக நாட்டின் அந்நிய செலவாணி வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தோட்டத்தொழிற்துறை சமூகத்தினரின் சமூக - பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் வகையில் குறுநோக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

அரச கொள்கைக்கூற்றில் தேயிலைத் தொழிற்துறைக்கு வழங்கப்பட்டுள்ள இலக்குக்கள், "சிறப்பின் செழுமையின் காட்சிகள் எனும் தலைப்பின் கீழ் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன; (அ) இலங்கை தேயிலையின் தரத்தினை பாரமரித்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான முறைமைகளை அறிமுகம் செய்தல் (ஆ) எமது தேயிலையை தூய தேயிலையாக சர்வதேச சந்தைகளில் ஊக்குவித்தல் (இ) மொத்தத் தேயிலை ஏற்றுமதியை விடுத்து பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதியினை ஊக்குவித்தல் (ஈ) இழக்கப்பட்ட இலங்கையின் தேயிலைச் சந்தையை மீளக்கைப்பற்றும் வகையில் அரச மற்றும் தனியார்ப் பிரிவுகளுடன் இணைந்து, ஒருங்கிணைத்த முயற்சிகளை மேற்கொள்ளுதல் (உ) சேதன தேயிலைப் பயிர்ச்செய்கைக்கான அரச ஊக்குவிப்புக்களை முன்னெடுத்தல் (ஊ) தேயிலையின் உற்பத்தி மற்றும் தரம் தொடர்பான பிரச்சனைகளுக்கான தீர்வினை வழங்கும் வகையிலும், புதிய தொழிநுட்பங்களை அறிமுகம் செய்ய உதவும் வகையிலும் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் மீள்கட்டமைக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்படும்.

இலங்கை தேயிலைத் தொழிற்துறையானது, கோவிட் தொற்றுநோய்க்கு மத்தியிலும் மீட்சி கண்டுள்ளது. கடந்த 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டின் முற்பகுதிகளில், இலங்கை தேயிலை சபையானது அரச கொள்கையான "சிறப்பின் செழுமையின் காட்சிகள் மற்றும் தோட்டம் முதல் நுகர்வோர் வரையான சிலோன் தேயிலையின் தரத்தினை மேலும் தரமுயர்த்தல் எனும் அமைச்சரவை தீர்மானத்துடனான இலக்குகளுடன் பயணிக்க பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியது.

இலங்கை தேயிலை தொழிற்துறையின் செயற்திறன்

கடந்த 2020 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டின் ஜூன் வரையான காலப்பகுதியில், இலங்கை தேயிலை சபையினால் மிகவும் சிறப்பானதொரு செயற்திறன் வெளிக்கொணரப்பட்டதுடன், விசேடமாக "சிலோன் தேயிலை வர்த்தக ஊக்குவித்தல் நிகழ்வுகளில் போது, ஏற்றுமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஏனைய குறைவான செலவுள்ள தேயிலை உற்பத்தியாளர்களுடனான பாரியதொரு போட்டி, அதிகளவான சரக்குக் கட்டணங்கள், கோவிட்-19 தொற்றினால் மிக இறுக்கமான சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக கொண்டுசெல்வதிலான சிரமங்கள் உட்பட பாரிய சிக்கல்களை எதிர்நோக்கினர்.

இந்நிர்வாகம் கடமைகளை கையேற்க முன்னர், கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில், சிலோன் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையானது முறையே, கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 822 மற்றும் ரூபா 823 ஆக அமைந்திருந்தது. இது கடந்த 2020 ஆம் ஆண்டு, கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 867 ஆக அதிகரித்தது. இதன் விளைவாக கொழும்புச் சந்தையில் தேயிலையின் சராசரி விலை கிலோகிராம் ஒன்றுக்கு ரூபா 627 ஆக அதிகரித்தது (2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டு கிலோகிராமுக்கு ரூபா 82 அதிகரித்தது). எவ்வாறாயினும், கடந்த 2020 ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி குறைவடைந்ததுடன், 279 மில்லியன் கிலோகிராம்களை மாத்திரமே எட்ட முடிந்தது. இருந்தும், 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதியில் மொத்த தேயிலை உற்பத்தியானது 161 மில்லியன் கிலோகிராம்களை எட்டியுள்ளதுடன், இது கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25% மான அதிகரிப்பாகும். இலங்கை தேயிலை ஏற்றுமதி வருமானம் 2019 ஆம் ஆண்டு ரூபா 240 பில்லியனிலிருந்து 2020 ஆம் ஆண்டு 230 பில்லியங்களாகக் குறைவடைந்துள்ளது. இருந்தும் ஏற்றுமதி வருமானம் கிலோகிராமுக்கு ரூபா 43 ஆக அதிகரித்துள்ளது.

கோவிட்-19 தொற்றினால் மிக இறுக்கமான சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக, தனியார்த்துறை மற்றும் அரசதுறை ஆகிய இரண்டிற்கும் இடையூறுகள் ஏற்படாதவண்ணம் "நாளுக்கு நாள்" செயல்முறையை நெறிப்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் இலங்கை தேயிலை சபையினால் அமுல்படுத்தப்பட்டன.

- இலத்திரனியல் ஏலத்தளத்தினை ஆரம்பித்தமை - கோவிட்-19 தொற்றுக் காலப்பகுதியில் இலத்திரனியல் ஏலத்தளத்தினை ஆரம்பித்தமையானது தேயிலைத்தொழிற்துறைக்கான பாரிய வெற்றியாகும். இதன் காரணமாக தேயிலைத் தொழிற்துறையின் அனைத்து பங்குதாரர்களும், விசேடமாக தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் இலை வழங்குனர்கள்/ வளர்ப்பாளர்கள் பாரிய நன்மைகளைப் பெறுவார்.
- கோவிட்-19 தொற்றுக்களை தணிக்கும் வகையில் சில வெளிநாட்டு தூதரகங்களினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளை அடிப்படையாகக்கொண்டு, தேயிலை ஏற்றுமதியாளர்களின் ஆவணங்களைதூ தரகங்களினூடாக சட்டபூர்வமாக்கும் செயற்பாடுகள் இலங்கை தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்டன.
- இலங்கை தேயிலை சபையினால் ரூபா 500 மில்லியன் செயற்திட்டத்தின் கீழ், தேயிலைத் தொழிற்சாலைகளின் தொழில் மூலதன தேவைப்பாடுகளுக்கேற்ப மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் கொமர்ஷல் வங்கியினூடாக ஒவ்வொரு தொழிற்சாலைகளுக்கும் தவணைக் கடனாக தலா ரூபா 3 மில்லியன் வழங்கப்பட்டது.

சிலோன் தேயிலையின் தரத்தினை பராமரித்தல்

சிலோன் தேயிலையின் தரத்தினை சர்வதேச சந்தையில் போட்டியிடும் வகையில் பேணுதல் மிகமுக்கியமான விடயமாக விளங்குவதுடன், இலங்கை தேயிலையின் தரத்தினை மேலும் விருத்திசெய்து, பராமரிக்கும் முறைமைகளை அறிமுகம்செய்யும் வகையிலான புதிய கொள்கைகள் அரசினால் அறிமுகம் செய்யப்படுத்தல் அவசியமாகும். தேயிலையின் தரத்தினை உயர் மட்டத்தில் பேணுதல் மற்றும் சிலோன் தேயிலையை அடையாளங்காண்பதற்கு தடையாக அமையக்கூடிய காரணிகளை தணிக்கும் வகையிலான கோட்பாடுகளை பலப்படுத்தும்முகமாக தேயிலை வளர்ப்பாளர்கள், தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே பல்வேறு மானியத் திட்டங்கள் இலங்கை தேயிலை சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அ) தொழிற்சாலைத் தொழிற்சாலையின் தரமான உற்பத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில், 2020 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் நவீனமயமாக்கல் மானியத்திட்டத்தினூடாக, 30 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு ரூபா 18.9 மில்லியன் வழங்கப்பட்டது.

ஆ) தேயிலை மீள்நடுகை மானியத்திட்டத்தினூடாக 2020 ஆம் ஆண்டு 48 ஹெக்டயர்கள் மீள்நடுகைக்காக ரூபா 15.8 மில்லியன் வழங்கப்பட்டது. மேலும், தேயிலைக் கொழுந்துகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக, ஈரப்பதன் மானியை அறிமுகம்செய்யும் பொருட்டு 250 தேயிலைத்தொழிற்சாலைகளுக்கு ரூபா 25 மில்லியன் வழங்கப்பட்டது.

இ) தேயிலைகன்றுகளின் தரத்தினை பேணும் வகையில், மீள்நடுகை/ புதிய கன்றுகளை நடுதல் மற்றும் இடைநிரப்பும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யும் வகையில், தேயிலை சிறிய காணிகள் அபிவிருத்தி அதிகாரசபை (ரூபா 250 மில்லியன்) மற்றும் இலங்கை தேயிலை சபையின் கண்காணிப்புக்களுடன் (ரூபா 207 மில்லியன்) தரமான தேயிலை நாற்றுப்பண்ணைகளை நிறுவுவதற்காக ரூபா 457 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

ஈ) நவீன தொழிநுட்பங்களுடன் உயர் உற்பத்தி தேயிலைக்காணிகளை நிறுவும் வகையில், இலங்கை தேயிலை சபையினால் புதிய மாதிரி தேயிலைக் காணித் திட்டம் அறிமுகம்செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 2021 ஆம் ஆண்டளவில் ரூபா 40 மில்லியன் மானியத்தொகையினூடாக 40 மாதிரி தேயிலைக் காணிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

சர்வதேச சந்தையில் தூய சிலோன் தேயிலை தொடர்பான எமது அணியின் சந்தை ஊக்குவித்தல்

சர்வதேச சந்தையில் சிலோன் தேயிலையை தூய சிலோன் தேயிலையாக சந்தை ஊக்குவித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் எனும் அரசின் இலக்குகளுக்கு அமைவாக, இலங்கை தேயிலை சபையினால் சர்வதேச சந்தைகளில் பல்வேறு சந்தை ஊக்குவித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, சர்வதேச சந்தைகளில் சிலோன் தேயிலை தொடர்பிலான விழிப்புணர்வுகள் முன்னெடுக்கப்பட்டதுடன், ஏற்றுமதி விலைகளை அதிகரிக்க ஏற்றுமதியாளர்களுக்கு வசதிவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. ஏனைய செயற்பாடுகள் கீழே சாரம்சமாக தரப்பட்டுள்ளன;

- சிலோன் தேயிலையியின் பூர்வீகத்தினை அடையாளப்படுத்தும் வகையில், இலங்கை அணுசக்தி சபையுடன் இணைந்து சிலோன் தேயிலைக்கான புவியியல் அமைவிடத்தை சுட்டிக்காட்டல் (" திட்டம்)- சிலோன் தேயிலையினை EU GI விதிமுறைகளின் கீழ் பதிவுசெய்யும் பொருட்டு, ISOTOPE தொழிநுட்பத்தினை பயன்படுத்துவதற்கான தொழிநுட்ப உதவிகளை பெறும்பொருட்டு, AFD இன் நிதியுதவியுடன், UNIDO மற்றும் CIRAD களுடன் ஒன்றிணைந்து இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.
- சிங்க இலட்சணையைப் புதுப்பித்தல் மற்றும் புதிய சிங்க இலட்சணையை பதிவுசெய்தல், பாகிஸ்தானில் விதிமுறைகளை மீறும்வகையில் சிங்க இலட்சணையை பயன்படுத்தப்படுவதற்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்தல்; சர்வதேச சந்தைகளில் சட்டவிரோதமாக சிங்க இலட்சணை பயன்படுத்தப்படுவதைக் கட்டுப்படுத்தும் வகையில் உரிய சட்ட அமைப்புக்களுடன் இணைந்து சட்ட
- சீனாவில் நேரடியாக மற்றும் இணையவழி மூலமாக தூய சிலோன் தேயிலையை சந்தைப்படுத்துவதற்காக, சீனாவின் பூஜியான் சர்வதேச வர்த்தக நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை கையொப்பமிடுவதற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டது.
- ஈரானுடன் "எண்ணைக் கடனை தேயிலையினூடாக நிவர்த்திசெய்வதற்கான பொறிமுறைக்கான" இலக்குகள் தயாரிக்கப்பட்டதுடன், ஈரானுடன் கையொப்பமிடுவதற்கான அமைச்சரவை அனுமதி பெறப்பட்டது.

- கறுப்புத்தேயிலை சந்தைப்படுத்தல் நிகழ்வுகள் திசம்பர், 2020 தொடக்கம் ஏப்பிரல், 2021 வரை 12 நாடுகளில் (ரஷ்யா/ உக்கிரேன்/ அவுஸ்திரேலியா/ அமெரிக்கா/ சிலி/ ஜப்பான்/ சீனா/ ஜெர்மனி/ ஈரான்/ துருக்கி/ சவூதி அரேபியா/ ஐ.அ. இராட்சியம்) முன்னெடுக்கப்பட்டது. ரஷ்யா மற்றும் உக்கிரேனில் சர்வதேச விளம்பரப்படுத்தல் நிகழ்வுக்களுக்கான அமைச்சரவை அனுமதி மார்ச், 2021 கிடைக்கப்பெற்றதுடன், இவை செப்டம்பர், 2021 தொடக்கம் முன்னெடுக்கப்படும்.
- பரிசுத் தேயிலைகள் மற்றும் சந்தை ஊக்குவிப்பு பொருட்களை பகிர்ந்தளித்தல் (குவைத், கியுரியோசிட்டி விடுதியில் "இலங்கை இரவு"); மெல்போர்ன், இலங்கை உயர் ஸ்தானியர் அலுவகலத்தினால் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச தேயிலை களியாட்ட நிகழ்வு; ஏனைய அமைப்புக்களுடன் இணைந்த சந்தை ஊக்குவிப்பு நிகழ்வுகள் – 2020 ஆம் ஆண்டுக்கான NCE ஏற்றுமதியாளர் விருதுகள், சிலோன் தேயிலையின் சந்தை ஊக்குவிப்பு நிகழ்வுகளுக்கான தேயிலைத் தொகையினை அனுப்பிவைத்தல்.

இதன் பிரகாரம், தோட்டத்தொழிற்துறை அமைச்சு மற்றும் தனியார் பிரிவு பங்குதாரர்களுடன் இணைந்து, 2021 ஆம் ஆண்டளவில் 1.40 பில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமாத்தினைப் பெறும் வகையிலான செயற்திறன் இலக்கு நிறுவப்பட்டது.

பாரம்பரிய தோட்டப் பொருளாதாரத்திலிருந்து, பசுமையான சமூக - பொருளாதார வடிவத்துக்கு அரச கொள்கை மாற்றமடைதல்

பாரம்பரிய தோட்டப் பொருளாதாரத்திலிருந்து, பசுமையான சமூக – பொருளாதார வடிவத்துக்கு மாறுவதனூடாக, காலநிலை மாற்றத்துக்கான நீண்டு நிலைக்கக்கூடிய தீர்வினை வழங்குதல் மற்றும் மண்ணின் செழுமை மற்றும் உற்பத்தித்தரத்தினை அதிகரித்தல் எனும் அரச கொள்கை தீர்மானங்களுடன், தேயிலைக்குத் தேவையான N, P மற்றும் K ஆகிய கனியுப்புக்களை வழங்குவது மிகப்பெரிய சவாலாக விளங்குகின்றது. இது பங்குதாரர்களினால் மிக அதிகளவான இரசாயன உரங்களை பயன்படுத்தல், ஒருங்கிணைந்த நடுநிலையான கனிப்பொருள் முகாமைத்துவத் திட்டம் மற்றும் மண் செழுமை முகாமைத்துவ மூலோபாயங்களை பின்பற்றாமல் தேவையற்ற அதிகப்படியான இரசாயன உரங்களை பயன்படுத்தல் போன்ற காரணங்களினாலாகும்.

இதன் விளைவாக, பல ஆண்டு காலமாக மண்ணின் தரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தேயிலைப் பயிர்ச்செய்கை நிலத்தின் பரப்பு அதிகரிக்கப்பட்டு, இரசாயன உரப்பாவனைகள் பயன்படுத்தப்படினும், தேசிய தேயிலை உற்பத்தியானது படிப்படியாக குறைவடைந்துள்ளது. அசேதன உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடைசெய்தல் மற்றும் சேதன/ உயிரியல் உரங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் எனும் இலங்கை அரசின் தீர்மானத்துடன், எதிர்வரும், 2021 ஆம் ஆண்டில் இலங்கை போக்குவரத்து சபை தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

முடிவுரை

தோட்டத்தொழிற்துறை அமைச்சின் கௌரவ அமைச்சர், இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் மற்றும் அவரின் குழுவினர், சபையின் ஏனைய பணிப்பாளர்கள் மற்றும் இலங்கை தேயிலை சபையின் ஊழியர்கள் அனைவருக்கும், நிறைவெய்திய 2020 ஆம் ஆண்டு வெற்றிகரமான ஆண்டாக மாற்றியமையை குறித்து மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

தேயிலை பெறுமதி சேர் சக்கரத்தில் சர்வதேச பெறுமதிசேர் உறுப்பினர்களான, விவசாயிலிருந்து கொழுந்து பறிப்பாளர்கள் வரை, உற்பத்தியாளர்கள், தரகர்கள் மற்றும் அரச கட்டுப்பாட்டாளர்கள்/ அமைப்பாளர்களுடனான நேரடியான ஏற்றுமதியாளர்கள்/ வியாபாரக்குறியினை சந்தைப்படுத்துபவர்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படுதல் வேண்டும். தேயிலை பெறுமதிசேர் தொடரில், தேயிலைத் தொழிற்துறையினை முன்னோக்கி நகர்த்துதல் மற்றும் அதன் வெற்றிகளுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பானது பாராட்டத்தக்கதாகும். இவ் வெற்றிகரமான வருடத்தின் இறுதியில், தேயிலைத்தொழிற்துறையுடன் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களினதும் அபிமான பங்களுப்புக்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வருடங்களிலும், 'பேச்சு நடக்கவும் மற்றும் நிலையான சான்றுகளை நிரூபிக்கும் வண்ணம் வெற்றிக்காக எம்முடன் தொடர்ந்தும் கைகோர்ப்பீர்கள் என நம்புகின்றேன்.



திரு. ஜெயம்பதி மல்லிகொட
தலைவர்
இலங்கை தேயிலை சபை

பிரதான சிறப்பம்சங்கள்

வகை	அலகு	2018	2019	2020	மாற்றங்கள் (%) 2019Vs 2020
தேயிலை உற்பத்தி					
மொத்த தேயிலை உற்பத்தி (மில்.கி.கிராம்)	Mn Kg	303.94	300.12	278.85	(7.09)
உயரத்தின் வகைப்படுத்தல்					
உயர்	Mn Kg	64.97	63.05	62.24	(1.28)
நடுத்தரம்	Mn Kg	47.13	47.17	46.73	(0.93)
தாழ்நிலை	Mn Kg	191.84	189.90	169.88	(10.54)
செயலாக்க முறையினால் வகைப்படுத்தல்					
பழைமைவாத (உயிரியல் உள்ளடங்கலாக)	Mn Kg	277.33	273.89	252.72	(7.73)
சிதிசி	Mn Kg	24.02	23.59	24.10	2.16
பச்சை	Mn Kg	2.60	2.64	2.03	(23.19)
மேலே உள்ள உற்பத்தி புள்ளிவிவரங்கள் உடனடி தேநீரைத் தவிர**					
உடனடி தேயிலை உற்பத்தி	Mn Kg	3.08	4.3	3.1	(29.62)
தேயிலை விற்பனைகள் (பொது, நேரடி, தனியார்)					
மொத்த தேயிலை விற்பனை அளவு (மில்.கி.கிராம்)	Mn Kg	291.31	301.92	268.24	(11.16)
உயர்	Mn Kg	57.28	59.97	56.46	(5.85)
நடுத்தரம்	Mn Kg	48.68	52.14	48.05	(7.84)
தாழ்நிலை	Mn Kg	185.34	189.81	163.72	(13.74)
மொத்த தேயிலை விற்பனை விலைகள் (ரூபா/ கி.கிராம்)		581.93	545.02	628.21	15.26
உயர்	Rs/Kg	571.81	509.40	580.90	14.04
நடுத்தரம்	Rs/Kg	520.87	470.96	553.94	17.62
தாழ்நிலை	Rs/Kg	601.10	576.62	666.32	15.56
தேயிலை ஏற்றுமதி (மில்.கி.கிராம்)					
தேயிலை ஏற்றுமதிகள் கொள்ளளவு (மீள் ஏற்றுமதி தவிர்ந்த)	Mn Kg	271.80	283.00	256.58	(9.34)
வகைகளின் படி ஏற்றுமதியின் அளவு (மில்.கி.கிராம்)					
கறுப்பு	Mn Kg	266.90	277.53	251.78	(9.28)
பச்சை	Mn Kg	2.40	2.27	1.99	(12.47)
உடனடி	Mn Kg	2.50	3.04	2.81	(7.55)
தேயிலை ஏற்றுமதிகள் பெறுமதி (மீள் ஏற்றுமதி தவிர்ந்த)	Rs.Bn	220.25	227.00	218.80	(3.61)
வகைகளின் படி ஏற்றுமதி வருமானம் (ரூபா.பில்லியன்)					
கறுப்பு	Rs Bn	212.95	219.35	210.62	(3.98)
பச்சை	Rs Bn	4.03	4.41	4.11	(6.85)
உடனடி	Rs Bn	3.27	4.12	4.07	(1.30)
மொத்த தேயிலை ஏற்றுமதி கொள்ளளவு (மில். கி.கிராம்)	Mn Kg	282.40	292.66	265.57	(9.26)
மொத்த தேயிலை ஏற்றுமதிகள் பெறுமதி (ரூபா. பில்லியன்)	Rs Bn	231.80	241.00	230.17	(4.49)

ஆதாரம்: இலங்கை தேயிலை வாரியம் மற்றும் இலங்கை சுங்கம்

1.0 பெருநிறுவனப் பின்னணி

இலங்கை தேயிலை சபை, 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி, தேயிலை கட்டுப்படுத்தல் சபை – தேயிலை கட்டுப்படுத்தல் சட்டம் இல 51, 1976, தேயிலை ஏற்றுமதி ஆணையாளர் திணைக்களம் – தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தல்) சட்டம் இல 16, 1959, சிலோன் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் - தேயிலை ஆராய்ச்சி சட்டம் 1925 மற்றும் இலங்கை தேயிலை சபையின் சட்டம் இல 14,1975 மற்றும் அதன் திருத்தங்கள் இல 17, 1985, இல 44,1990, இல 29, 2003, இல 44, 2006 மற்றும் இல 13, 2018 போன்றவற்றின் கீழ் சிலோன் தேயிலை பரப்புரை சட்டம் ஆகியன ஒன்றிணைந்து நிறுவப்பட்டது. தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் 1993ஆம் ஆண்டு தேயிலை ஆராய்ச்சி சட்ட இல 52, 1993, முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இலங்கை தேயிலை சபையின் சட்டம் மற்றும் தேயிலை கட்டுப்பாட்டு சட்டத்திலான திருத்தங்கள், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய, தொழிற்துறைத் தேவைகளை அடிப்படையாகக்கொண்டு சர்வதேச தேவைகளைப் பூரணப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை தேயிலை சபையை நிறுவுவதற்கு முன்னர், இலங்கை தேயிலையின் (சிலோன் தேயிலை) சர்வதேச ரீதியிலான விற்பனையை ஊக்குவித்தல் செயற்பாடுகள், தேயிலை பரப்புரை சபையினால் கையாளப்பட்டதுடன், இது தனியார்த் துறையினால் முன்னெடுக்கப்பட்டது. தேயிலை பரப்புரையானது, பாராளுமன்றத்தில் வாக்களிக்கப்பட்டு, தேயிலை தொழிற்துறையின் சகல அதிகாரங்களுடனும், 1976 ஆம் ஆண்டு, இலங்கை தேயிலை சபையாக மாற்றியமைக்கப்பட்டது.


இலங்கை தேயிலை சபை, ஒழுங்குபடுத்தும் அமைப்பாக, தேயிலை தொழிற்துறையின், உற்பத்தி, பயிர்செய்தலை அதிகரித்தல், மீள்நடுகை, பழைய தோட்டங்களை மீளக்கட்டியெளுப்புதல், தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளை கண்காணித்தல் ஆகிய ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக செயற்படுகின்றது. அத்துடன், தேயிலைத்தோட்டங்களை நிர்வகிப்பதுடன் தொடர்புபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் கட்டுப்பாடுகள் மற்றும் இயக்கங்கள் ஒழுங்குபடுத்துவதுடன், தேயிலை உற்பத்தி, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான சந்தைப்படுத்தலையும் ஒழுங்குபடுத்துகின்றது. "சிலோன் தேயிலையின் தரத்தினைப் பேணும் வகையில், தொழிற்சாலையிலிருந்து, கப்பலில் ஏற்றும் வரைக்குமான அனைத்து செயன்முறைகளும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றது. மேலும், விற்பனை, கப்பலுக்கு முன்னர், தரகர்களின் சேமிப்பு இடங்கள், கலப்பிடங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் கட்டங்களில், தேயிலையின் தர நியமங்களுக்கான கண்காணிப்பைத் தீவிரப்படுத்த பல செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார முறையிலான கலப்பு மற்றும் சேமிப்பு செயற்பாடுகளுக்கான ஆலோசனை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

அபிவிருத்தி தொழிற்பாடுகளின் கீழ், தொழிற்சாலைகளை தரமுயர்த்தல் மற்றும் தேயிலை மீள்நடுகை, அறுவடையின் பின்னரான பாதிப்புக்களைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் போன்றவற்றுக்கான மானிய வசதிகள் இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படுகின்றது. மேலும், புலன்சார் மற்றும் இரசாயன பகுப்பாய்வுகள் மூலமாக, தேயிலையின் தரத்துக்கான சான்றுதழ்களை வழங்குவது, தேயிலை அபிவிருத்தியின் கீழான பிரதான பொறுப்பாக அமைந்துள்ளது.

சர்வதேச ரீதியில் சிலோன் தேயிலையை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல், தேயிலை தொடர்பான புள்ளிவிவரங்களை சேகரித்தல் மற்றும் விபரித்தல், நிலையான சந்தைகளில் போட்டியிட்டு, முன்னணி சந்தைகளில் சிலோன் தேயிலையின் வியாபாரத்தினை மேலும் விஸ்தரித்தல் போன்றவற்றினைக் கொண்டதாக ஊக்குவித்தல் செயற்பாடுகள் விளங்குகின்றன.

இலங்கை தேயிலை சபையின் தொழிற்பாடுகள், பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சினால் மேற்பார்வை செய்யப்பட்டு, அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். நிதித் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்கள் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படுவதுடன், விசேடமாக, திறைசேரி மானியங்களை பெறுவதற்கான பரிந்துரைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.

2.0 கட்டமைப்பு மற்றும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்



2.1 தேயிலை ஆணையாளரின் பிரிவு

தேயிலை ஆணையாளரின் பிரிவானது, இலங்கை தேயிலை சபையின் பிரதானமானதொரு பிரிவாக விளங்குவதுடன், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் இல 14, 1975 இன் கீழ், நியமிக்கட்ட "தேயிலை ஆணையாளரின்" தலைமையின் கீழ் வழிநடத்தப்படுகின்றது. இப்பிரிவினால் தேயிலைத்தொழிற்துறையின் அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் வெளியகற்றல்களுக்கான இலங்கை தேயிலை சபைச் சட்டம் இல. 14, 1975 மற்றும் தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம் இல. 51, 1957 களின் பிரகாரம் ஒழுங்கமைத்தல் மற்றும் மேற்பார்வையிடல் தொழிற்பாடுகளுடன் இணைந்த அனைத்து செயற்பாடுகளும் நிர்வகிக்கப்படுகின்றன.

தேயிலை ஆணையாளர் பிரிவின் தொழிற்பாட்டு அலகுகள், ஏழு பிராந்திய அலுவலகங்களாகப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவை கம்பளை, பண்டாரவளை, இரத்தினபுரி, மாத்தறை, பந்துரலிய, காலி மற்றும் நுவரேலியா ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ளன.

தேயிலைத் தொழிற்துறையின் விருத்திக்காக, தேயிலைப் பிரிவின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்குப் பொறுப்பாக தேயிலை ஆணையாளரின் பிரிவு தொழிற்படுகின்றது. தேயிலை ஆணையாளர் பிரிவின் அலகுகளின் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில், ஒழுங்குபடுத்தல், அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிப்பிரிவு ஆகிய மூன்று பிரதான பிரிவுகளின் கீழ் தொழிற்படுத்தப்படுகின்றந்து.

தேயிலைத் தொழிற்துறையின் நீண்டுநிலைக்கும் அபிவிருத்திக்காக தேயிலை ஆணையாளரின் பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான பதிவுகள்/ அனுமதிப்பத்திர புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- பச்சைத் தேயிலை கொழுந்து முகவர்களைப் பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்க மையங்களைப் பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்
- ஏலவிற்பனை உரிமைக்காக நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களைப் பதிவுசெய்தல்
- தேயிலை உற்பத்தி நடவடிக்கைகள், பச்சைத் தேயிலைக் கொழுந்து முகவர்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களை கண்காணித்தல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- பச்சைத் தேயிலை கொழுந்தின் தரத்தினை விருத்தி செய்வதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அறுவடைக்கு பின்னரான இழப்புக்களை தணித்தல்
- தொழிற்சாலை நவீனமயமாக்கல் மற்றும் மீள்மரநடுகை செயற்பாடுகளுக்கான மானியங்களை வழங்குதல் (நிரப்புதல் மற்றும் புதிய மரணடுகை உள்ளடங்களாக)
- தொழிற்சாலைகள் மற்றும் முகவர்கள் மட்டத்தில் பச்சை இலை வழங்குனர்களுக்கான நியாயமான விலைகள் வழங்கப்படுவதை கண்காணித்தல்
- சிறந்த உற்பத்தி செயற்பாடுகள் (GMP) குறித்து விசேட கண்காணிப்புக்களை முன்னெடுத்தல்
- தேயிலை உற்பத்தி மற்றும் தொடர்புடைய தொழிற்துறைகளுக்கு அவற்றினை பகிர்ந்தளித்தல் தொடர்பான புள்ளிவிவரங்களைச் சேகரித்தல்
- தேயிலைத் தொழிற்துறையில் நடந்தேறும் தவறான நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் வகையில், தேயிலைத் தொழிற்சாலைகள், தரகர் நிலையங்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்கல் மையங்கள் குறித்து விசேட ஆய்வுகளை மேற்கொள்ளுதல்
- இலங்கை தேயிலை சபை உத்தியோகத்தர்கள் அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தேயிலை மாதிரிகளை ஆய்வுக்காக அனுப்புதல்
- தேயிலை மாதிரி ஆய்வறிக்கைகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- நீதிமன்ற வழக்குகளுக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களின் அதிகாரங்களின் அடிப்படையில் கடிதங்களை அனுப்புதல்
- தேயிலைக் காணிகளை பதிவுசெய்தல் திட்டத்தின் கீழ் தகவல்களை மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல்
- "மாதிரி தேயிலைக் காணி திட்டத்தின் கீழ் தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான மானியங்களை வழங்குதல் (பத்து எக்கர்களுக்கு மேல்)
- தேயிலைக்காணிகளுக்கான கிளைப்போசைட் பாவனைக்குரிய அனுமதிகளை வழங்குதல்
- தேயிலைக்கன்று நாற்றுமேடை திட்டத்துக்கான மானியத்திட்டங்களை அமுல்படுத்தல்
- தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதியினை வழங்குதல்
- ஏற்றுமதித் தேயிலைகளுக்கான தரநியமங்களைக் கண்காணித்தல்

இலங்கை தேயிலை சபைச்சட்டம் இல. 14, 1975 பிரிவு 25 இன் கீழ், கீழ்வரும் அதிகாரங்களும் தேயிலை ஆணையாளரின் கீழே இணைக்கப்பட்டுள்ளன;

அ) இலங்கை தேயிலை சபை (தயாரிக்கப்பட்ட தேயிலைக்கான செயலாக்கம் மற்றும் சுகாதார தரநியமங்கள்) விதிமுறைகள், 1986

ஆ) இலங்கை தேயிலை சபையின் மீள்மரநடுகை மற்றும் தொழிற்சாலை நவீனத்துவத்துக்கான மானியத் திட்டம்

2.1.1 பிரதான சாதனைகள்

- மீள்மரநடுகைக்காக 140.25 ஹெக்டயர்களுக்கான மானியமாக ரூபா 25.18 மில்லியன் வழங்கப்பட்டது.
- தேயிலைத்தோட்ட நவீனமயமாக்கல் மானியத் திட்டத்துக்காக 25 தொழிற்சாலைகளுக்கு ரூபா. 14.24 மில்லியன் வழங்கப்பட்டது.
- தேயிலை வளர்ப்பாளர்களுக்கான மானியத்தினை வழங்குவதற்காக மாதிரி தேயிலைக்காணி திட்டமானது ஆரம்பிக்கப்பட்டதுடன் (10 ஏக்கர்களுக்கு மேல்), இதன் கீழ் 24 காணிகளுக்கு (நபர்கள்) ரூபா. 9.1 மில்லியன் வழங்கப்பட்டது.
- தேயிலைத் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்யும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன (தரவுகளை புதுப்பித்தல்).
- தேயிலைக் காணிகளுக்கான கிளைப்போசைட்டுக்களை அனுமத்தல்
- "தேயிலை நாற்றுப்பண்ணை" மானியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 27 நாற்றுப்பண்ணைகளுக்காக ரூபா 13.85 மில்லியன் வழங்கப்பட்டது.

2.1.2 உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் இல 51, 1957 இன் கீழ், தேயிலை உற்பத்தியுடன் தொடர்புடைய, தேயிலை உற்பத்தியாளர்களின் பதிவேடொன்று தேயிலை ஆணையாளர் பிரிவினால் பேணப்படுவதுடன், தேயிலைத் தொழிற்சாலை மற்றும் உற்பத்தியாளர்களுடன் தொடர்புடைய விடயங்களும் பதியப்படுதல் வேண்டும். சட்டத்தின் பிரகாரம், எவராவது உற்பத்தியாளராக பதியப்பட தகுதியானவர் அல்லது தகுதியற்றவர் எனத் தீர்மானிக்கும் அதிகாரம் தேயிலை ஆணையாளருக்கு உள்ளது. அனைத்து தேயிலை உற்பத்தியாளர்களும், தேயிலையை உற்பத்தி செய்தல் மற்றும் கொழும்பு ஏலத்தினூடாக தேயிலையை விற்பனை செய்தல் போன்ற நடவடிகைக்களுக்காக இலங்கை தேயிலை சபையின் கீழ், பதிவுசெய்யப்படுதல் அவசியமாகும்.

தேயிலையை உற்பத்திசெய்யும் அனைத்து தொழிற்சாலைகளும், அவற்றின் கட்டடங்கள், கருவிகள் மற்றும் தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் வகையிலான தொழிற்சாலையின் தொழிற்பாடுகள், தொழிற்சாலையில் தரமான தேயிலை உற்பத்தி செய்யப்படுவதை கண்காணிப்பதற்கான உதவிகளை முன்னெடுத்தல், நிராகரிக்கப்பட்ட தேயிலையை அகற்றுவதைக் கட்டுப்படுத்தக்கூடிய தன்மை மற்றும் நியாயமான விலைச் சமன்பாட்டினை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை தேயிலை சபையின் கீழ் பதிவு செய்யப்படுதல் அவசியாமாகும்.

பதியுசெயயப்பட்ட தேயிலைத் தொழிற்சாலைகள், உற்பத்தி பொறிமுறைகள், பாரம்பரியம், CTC, பச்சை மற்றும் ஆட்டிஸ்னல் தேயிலை (கைகளினால் தாரிக்கப்பட்டவை) என நான்கு வகைகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளரும், தேயிலை ஆணையாளரினால் உருவாக்கப்பட்ட "TC05" படிவத்தினைப் பயன்படுத்தி, தங்களது உற்பத்தித்தரவுகளை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் தேயிலை ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் அவசியமாகும். சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் தேயிலை கட்டுப்பாட்டு சட்டம் இல 51,1957 இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அட்டவணை 2.1.1 தொழிற்பாடுகளின் அடிப்படையில் தேயிலைத் தொழிற்சாலைகளை வகைபிரித்தல்

நிலைமை	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை			
	அதிகம்	நடுத்தரம்	குறைவு	மொத்தம்
சொந்தக் கொழுந்துகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை	65	18	11	94
சொந்த மற்றும் கொள்வனவு செய்யப்படும் கொழுந்துகள்:				
அ) மொத்த உற்பத்தியில் 50% க்கு குறைவான சொந்தக் கொழுந்து	14	25	98	137
ஆ) மொத்த உற்பத்தியில் 50% க்கு அதிகமான சொந்தக் கொழுந்து	57	31	11	99
கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்துகள் மாத்திரம்	08	39	260	307
பதியப்பட்ட தொழிற்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள்	170	40	427	637
பதியப்பட்ட தொழிற்பாடற்ற நிலையிலுள்ள தொழிற்சாலைகள்	24	58	97	179
பதியப்பட்ட மொத்த தேயிலைத் தொழிற்சாலைகள்	194	98	524	816

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.1.3 கொள்வனவு செய்யப்படும் இலைகளுக்கு செலுத்தத்தக்க நியாயமான விலைகள்

தேயிலைக் கட்டுபாட்டு சட்டத்தின் பிரிவுகளை அடிப்படையாகக்கொண்டு , உற்பத்தி செயற்பாடுகளுக்காக தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு தொழிற்சாலைகள், தேயிலை ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கமைவாக, அத்தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட தேயிலைகளை அடிப்படையாகக்கொண்டு நியாயமான கட்டணத்தை வழங்கக் கடமைப்பட்டுள்ளன. பச்சை இலை வழங்குனர்களுக்கான நியாயமான விலையினை வழங்குவது அத்தொழிற்சாலைகளின் மாதாந்த தேறிய சராசரி விற்பனையில் தங்கியுள்ளது.

தயாரிக்கப்பட்ட தேயிலை, தேயிலைக் கொழுந்து வழங்குனர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கிடையிலான விகிதம் 68:32 ஆகப் பிரிக்கப்படும். தொழிற்சாலையின் சராசரி விற்பனைகள், மாதாந்த உயர்வுச் சராசரியை விட அதிகமாயின், அதிகரிக்கும் வருவாய் 50:50 எனும் விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும். இச்சமன்பாடு, பச்சைத் இலையிலிருந்து, தயாரிக்கப்பட்ட தேயிலையின் 21.5% உற்பத்தி விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

2.1.3.1 நிலுவையிலுள்ள கட்டணங்கள்

நிறைவுற்ற மீளாய்வு ஆண்டு 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும், பச்சை இலை வழங்குனர்களுக்கான நிலுவையில் மீதமாகவுள்ள கட்டணம் ரூபா 541 மில்லியன்களாகும். நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், ரூபா 56 மில்லியன் மீளப்பெறப்பட்டு, தேயிலை ஆணையாளர் பிரிவின் தலையீட்டுடன் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும், பதிவுகளை இடைநிறுத்துவதனூடாக நிலுவைக்கட்டணங்கள் ஒன்றுதிரள்வது தடுக்கப்படும். ஏதாவது தொழிற்சாலைகள், பச்சைத் தேயிலைகளுக்குரிய நியாயமான விலைகளில் குறைகள் அவதானிக்கப்படும் பட்சத்தில், அத்தொழிற்சாலை எச்சரிக்கப்பட்டு, நிலுவையாகவுள்ள கட்டணத்தை செலுத்தத்தவறும் பட்சத்தில் தொழிற்சாலையின் பதிவுகள் இடைநிறுத்தப்படும் அல்லது நீக்கப்படும் அல்லது 1993 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தேயிலை சபைச் சட்டத்துக்கமைய தரகர்களிடமிருந்து அறவிடப்படும். நிலுவையிலுள்ள அனைத்துக் கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்ட பின்னரே, அத்தொழிற்சாலைகளின் பதிவுகள் மீளமைக்கப்படும்.

அட்டவணை 2.1.2: நிலுவையிலுள்ள கட்டணங்களின் நிலைமை (ரூபா)

பிராந்தியம்	தொகை (ரூபா)			சிறுதொழிலாளர் காரணமாக 31.12.2020 அன்று மிகுதித் தொகை	செலுத்தவேண்டிய தொகை (ரூபா)	
	2020.01.01 லான தொகை	2020 இல் சேர்க்கப்பட்ட தொகை	மீட்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகை (ரூபா)		தொழிற்பாட்டிலுள்ள தொழிற்சாலைகள்	மூடப்பட்ட தொழிற்சாலைகள்
பந்துரலிய	47,868,679.5	-	-	47,868,679.5	4,919,055.0	42,949,625.5
பண்டாரவளை	1,003,982.4	22,018,428.1	-	23,022,410.5	18,485,078.5	4,537,332.0
காலி	103,865,461.0	54,850,980.1	20,065,458.2	138,650,982.9	89,220,196.3	49,430,786.6
கம்பளை	86,820,951.1	30,350,426.6	1,807,800.9	115,363,576.8	100,621,212.1	14,742,364.7
மாத்தறை	18,037,735.0	41,082,192.3	6,322,808.4	52,797,118.6	50,264,477.0	2,532,641.6
நுவரெலியா	28,454,288.7	245,969.5	658,860.0	28,041,398.1	5,502,590.6	22,538,807.5
இரத்தினபுரி	255,250,277.7	126,350,400.3	27,072,491.8	354,528,185.2	182,352,912.1	172,175,273.1
மொத்தம்	541,301,374.9	274,898,396.8	55,927,419.0	760,272,352.5	451,365,521.4	308,906,831.0

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.1.4 பச்சை தேயிலைக் கொழுந்துகளின் தரக்கட்டுப்பாடு

பச்சைத் தேயிலைக் கொழுந்துகள் தேயிலை உற்பத்திக்கான மூலப்பொருளாகக் காணப்படுகின்றமையினால் கொள்வனவு செய்யப்படும் இலைகளினூடாக முன்னெடுக்கப்படும் உற்பத்தித்தொழிற்பாடுகளில் அவற்றின் தரக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மிகமுக்கியமான பங்கினை வகிக்கின்றன. சிறந்த தரமான பச்சைத் தேயிலைக் கொழுந்துகள் உற்பத்தித் தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுமாயின், இறுதியில் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரமும் அதிகரிக்கக்கூடும். இது தேயிலை சிறுதொழில் முயற்சியாளர்கள் மற்றும் தேயிலை உற்பத்தியாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மைபயற்பதாக அமையும். பச்சைத்

தேயிலைக் கொழுந்துகளுக்குரிய தர நியமங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 2010 ஆம் ஆண்டு திசம்பர் 14 ஆம் திகதி இலங்கை தேயிலை சபையினால் பிரசுரிக்கப்பட்டது. தேயிலை உற்பத்திக்கான மூலப்பொருளான பச்சைத் தேயிலைக் கொழுந்துகளின் தரத்தினை மேலும் விருத்திசெய்யும் நோக்குடன் பின்வரும் செயற்பாடுகள் தேயிலை ஆணையாளரின் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றன.

அ) பச்சைத் தேயிலை இலை விநியோகிஸ்தர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்

ஆ) பச்சை இலையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான "பீ இலை 60 " திட்டம்

இ) களியாட்டக் காலங்களில், அவசர பயிர் முகாமைத்துவத் திட்டம்

ஈ) "மாதிரி தேயிலைக் காணி திட்டம்

உ) மீள்நடுகைக்கான மானியத்திட்டம்

ஊ) தேயிலைக்காணிகளை பதிவுசெய்வதற்கான திட்டம்

எ) தேயிலை நாற்றுப்பண்ணை மானியத்திட்டம்

அ) பச்சைத் தேயிலை இலை விநியோகிஸ்தர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி, பச்சைத் தேயிலை இலைகளுடன் தொடர்புடைய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க, தேயிலை ஆணையாளரின் பிரிவினால் வழங்கப்படும் வருடாந்த அனுமதிப்பத்திரத்தினை பெறுதல் அவசியமாகும். பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு பச்சைத் தேயிலை விநியோகிஸ்தர்களும் தேயிலை ஆணையாளரின் பிரிவினால் கண்காணிக்கப்படுவர்.

அட்டவணை 2.1.3: கடந்த 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பச்சைத் தேயிலைக்கான அனுமதிப்பத்திரங்கள்

ஏதிசி – பிராந்தியம்	01.01.2020 லான அனுமதிப்பத்திர விநியோகிஸ்தர்கள்	அனுமதிப்பத் பத்திரங்களை புதுப்பித்தல்	புதிதாக வழங்கப்பட்ட அனுமதிப்பத் பத்திரங்கள்	31.12.2020 இல் பச்சைத்தேயிலையை கையாள்வதற்கான அனுமதிப்பத்திரம்
பந்துரலிய	243	223	31	254
பண்டாரவளை	163	160	16	176
காலி	275	252	15	267
கம்பளை	181	165	05	170
மாத்தறை	275	252	20	272
நுவரெலியா	100	88	06	94
இரத்தினபுரி	498	436	62	498
மொத்தம்	1735	1576	155	1731

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஆ) பச்சைத் தேயிலை இலையின் தரத்தினை மேம்படுத்துவதற்கான "பீb இலை 60" திட்டம்

இத்திட்டமானது, கொழுந்து பறிக்கும் தரநியமங்கள் மற்றும் போக்குவரத்து நியமங்களை விருத்திசெய்வதனூடாக, அறுவடைக்குப் பின்னரான பாதிப்பினைக் குறைப்பதன் மூலமாக தேயிலைக் கொழுந்துகளின் தரத்தினை விருத்திசெய்யும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆரம்பகாலத்தில் காணப்பட்ட பச்சை இலைகளின் தரங்களுக்கமைய, சிறந்த இலைகள் 33 சதவீதமும், அதற்குக் குறைவானவை 32 சதவீதமும் மற்றும் மோசமான நிலையில் 35 சதவீதமான இலைகளும் காணப்பட்டன. ஆனால் தற்போதைய நிலையில், சிறந்த இலைகள் 34 சதவீதமும், அதற்குக் குறைவானவை 20% சதவீதமும் மற்றும் மோசமான நிலையில் 56% சதவீதமான இலைகளும் அவதானிக்கப்பட்டன. சிறப்பான பச்சை இலைகளின் தரத்தினை (சிறந்த இலையின் தரம்) குறைந்தது 60 சதவீதமாகப் பேணும் நோக்குடனேயே "பீ இலை 60" திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் இலக்குகளை அடையும் பொருட்டு, பச்சை இலைகளை கையாளுதல் மற்றும் கொண்டுசெல்வதற்கான விதிமுறைகளை வகுத்தல் மற்றும் பங்குதாரர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகள் ஆகியன ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 2.1.4: பிராந்திய ரீதியிலான பச்சை இலை தரநியமங்கள்

பிராந்தியம்	2020		
	சிறப்பானது	சிறப்பைவிட குறைவு	குறைவு
பந்துரலிய	42	24	34
பண்டாரவளை	24	19	57
காலி	42	20	38
கம்பளை	28	21	51
மாத்தறை	41	15	44
நுவரெலியா	27	20	53
இரத்தினபுரி	36	24	40

மூலம்: இலங்கை தேயிலை சபை

இ) களியாட்டக் காலங்களில், அவசர பயிர் முகாமைத்துவத் திட்டம்

களியாட்டக் காலங்களில் தேயிலைத் தொழிற்சாலைகள் நீண்ட காலத்துக்கு மூடப்படுவதனால், அக்காலத்தில் அறுவடையில் ஏற்படும் இழப்பினைக் குறைக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டமானது கடந்த 2005 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டதுடன், இத்திட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகம் செய்ததன் காரணமாக தேயிலை ஆணையாளரின் பிரிவினால் அறுவடை இழப்பினை முற்றாக கட்டுப்படுத்தக்கூடியதாக அமைந்தது.

ஈ) "மாதிரி தேயிலைக் காணி திட்டம்"

இத்திட்டத்துக்கான நிதி, இலங்கை தேயிலை சபையின் கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக திறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது இவ்வருடத்தில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதுடன், இதன் கீழ் 24 காணிகள் மற்றும் ரூபா 9 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, பின்வரும் நோக்கங்களை அடையும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இலங்கையின் தேயிலைத் தொழிற்துறையில், பகுதியளவில் பொறியியல்மயமாக்கப்பட்ட நீண்டு நிலைபெறும் தேயிலைத் தோட்டத்தொழிற்துறையை ஊக்குவித்தல் (இது திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது)
- தேயிலைத்தொழிற்துறையில் தேயிலைக்காணிகள் மற்றும் ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- வருடம் முழுவதுமாக நிலையான மற்றும் சீரான அறுவடையினை முன்னெடுத்தல்
- தேயிலைத்தோட்ட தொழிற்துறையின் அதியுச்ச பொருளாதார வாழ்வுக்காலத்தினை அதிகரித்தல்
- உற்பத்திச்செலவைக் குறைத்தல் (தேயிலைக்கொழுந்து பறித்தலுக்கான செலவை 60% ஆல் குறைக்க எதிர்பார்க்கப்படுகின்றது)
- இலைகளின் தரத்தினை நடுத்தரமான மட்டத்தில் பேணுதல்
- சன்றுதழ்களை பெறும்பொருட்டு, தேயிலை தொழிற்துறைக்கான குறைபாட்டு தரநிலைகளை அறிமுகம் செய்தல்

உ+ம்: அயனமண்டல மழைக்காட்டு உடன்பாட்டு சான்றுதழ்

அட்டவணை 2.1.5: மாதிரி தேயிலைக் காணிகளுக்கான மானியக் கொடுப்பனவுகள்

பிராந்தியம்	மாதிரி தேயிலைக் காணிகளுக்கான மானியத்திட்டம்			
	கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எ+கை	செலுத்தப்பட்ட காணிகளின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா)	நிறைவேற்றப்பட்ட ஆய்வுகளின் எ+கை
பந்துரலிய	03	02	600,000	03
பண்டாரவளை	03	-	-	03
காலி	04	-	-	65
கம்பளை	05	04	1,800,000	14
மாத்தறை	05	04	1,250,000	73
நுவரெலியா	05	12	4,550,000	15
இரத்தினபுரி	06	02	900,000	12
மொத்தம்	30	24	9,100,000	185

மூலம்: இலங்கை தேயிலை சபை

உ) மீள்நடுகைக்கான மானியத்திட்டம்

இலங்கை தேயிலை சபையின் கீழான தேயிலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக, உள்நாட்டு நிதிகளின் கீழ் திறைசேரியினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியானது, இவ்வருடத்தின் மானியத்திட்டத்தின் கீழான தேயிலை மீள்நடுகை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதனடிப்படையில், இம்மானியங்கள் கூட்டுறவுப்பிரிவு எஸ்டேட்டுகள் மற்றும் பத்து ஏக்கர்களுக்கு அதிகமான காணிகளைக் கொண்ட எஸ்டேட்டுகளுக்கு வழங்கப்பட்டன. தேயிலை மீள்நடுகை, புதிய நடுகைகள் மற்றும் மீள்நிரப்பல் செயற்பாடுகளை முன்னெடுப்பதே மானியத் திட்டங்களை வழங்குவதற்கான நோக்கமாகும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன;

I. தேயிலை உற்பத்திகளை அதிகரித்தல்
II. தேயிலைக் காணிகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
III. தேசிய தேயிலை மீள்நடுகை வீதத்தினை 3 சதவீதமாகப் பேணுதல்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டின் மீள்நடுகை நடவடிக்கைகளுக்காக, கூட்டுறவு மற்றும் தனியார்த் துறையினருக்கான நிதிகள் காணப்பட்டன.

அட்டவணை 2.1.6: மர மீள்நடுகை/ மீள்நிரப்பல் செயற்பாடுகளுக்கான மானியக்கொடுப்பனவுகள்

பிராந்தியம்	மீள்நடுகை மானியத்திட்டம்			
	கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எ+கை	செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா)	விஸ்தீரம் (ஹெக்.)	நிறைவேற்றப்பட்ட ஆய்வுகளின் எ+கை
பதுரலிய	28	1,540,975	8.2	62
பண்டாரவளை	33	-	-	45
காலி	03	3,182,200	14.8	265
கம்பளை	48	6,383,900	37.1	197
மாத்தறை	04	7,092,050	41.1	35
நுவெரெலியா	29	5,642,500	28.7	87
இரத்தினபுரி	55	1,335,950	10.3	102
மொத்தம்	200	25,177,575	140.3	793

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஊ) தேயிலைக்காணிகளை பதிவுசெய்வதற்கான திட்டம்

இத்திட்டத்தின் கீழ், நாட்டிலுள்ள அனைத்து தேயிலைக் காணிகளும் பதிவுசெய்யப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள தேயிலைக் காணிகள் தொடர்பான அனைத்துத் தகவல்களும், சீரான முறையில் கணணிமயப்படுத்தப்பட்டுள்ளன.

எ) தேயிலை நாற்றுப்பண்ணை மானியத்திட்டம்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டுக்கான தேயிலை சபைக்குரிய நிதி ஒதுக்கீடுகளில், கூட்டுறவுப் பிரிவுகள் மற்றும் நாற்றுப்பண்ணைகளை அமைக்க 10 ஏக்கர்களுக்கு அதிகமான தேயிலைக் காணிகளை கொண்டுள்ளவர்கள்களுக்கான ஒதுக்கீடுகள் மானியக் கொடுப்பனவுகளுக்காக நுகரப்படும். இம்மானியத் திட்டமானது ஒரே நேரத்தில் குறைந்தது 100,000 தேயிலைக்கன்றுகளைக் கொண்ட, நிலையான நிழற்குடையமைப்பு மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களைக் கொண்ட நாற்றுப்பண்ணைகளுக்கு மாத்திரம் பொருத்தமானதாகும். மேலும், குறைந்தது 100,000 தேயிலைக்கன்றுகளைக் கொண்ட நாற்றுப்பண்ணைகளுக்கு ரூபா 1,500,000.00 மானியத்தொகையாக வழங்கப்படும். உத்தரவளிக்கப்பட்ட நாற்றுப்பண்ணைகள் குறைந்தது மூன்று வருடங்களுக்கு தொடரவேண்டுமென்பதுடன், மானியத்தொகையை விடுவிக்க முன்னர் எஸ்டேட் உரிமையாளர் அல்லது தோட்டத்தொழிற்துறை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி, இலங்கை தேயிலை சபையின் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுதல் அவசியமாகும். அனைத்து நாற்றுப்பண்ணை செயற்பாடுகளும் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டல்களுக்கமைவாக முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை 2.1.7: தேயிலை நாற்றுப்பண்ணை மானியத்திட்டம்

பிராந்தியம்	தேயிலை நாற்றுப்பண்ணை மானியத்திட்டம்	
	கொடுப்பனவு செலுத்தப்பட்ட நாற்றுப்பண்ணைகளின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட கொடுப்பனவு (ரூபா)
பதுரலிய	-	-
பண்டாரவளை	01	600,000
காலி	03	1,550,000
கம்பளை	-	-
மாத்தறை	13	4,200,000
நுவெரெலியா	-	-
இரத்தினபுரி	10	7500,000
மொத்தம்	27	13,850,000

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.1.5 தரத்தினை விருத்திசெய்யும் செயற்பாடுகள்

சிறந்த தரத்தினை பேணும்பொருட்டு, கட்டடங்கள், கருவிகள், இயந்திரங்கள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மைகள் ஆகியன பொருத்தமான நிலைமைகளில் பேணப்படுவது அவசியமாகும். ஆகவே, சிறந்த தரமான தயாரிக்கப்பட்ட தேயிலையினை உற்பத்திசெய்யும் போது, மேற்குறிப்பிட்ட நடைமுறைகள் முன்னெடுக்கப்படாவிடின், தேயிலைக் கட்டுப்பாடுச் சட்டம் 5, 1957 க்கமைய தேயிலைத் தொழிற்சாலை அனுமதிப்பத்திரத்தினை நிறுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கான அதிகாரம் தேயிலை ஆணையாளருக்குள்ளது. தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் படி, தேயிலை உற்பத்தியியைக் கண்காணித்து, அதன் தரத்தினை விருத்திசெய்வதற்கான அதிகாரம் தேயிலை ஆணையாளரின் பிரிவுக்குள்ளதுடன், தயாரிக்கப்பட்ட தேயிலையின் விருத்திக்காக பின்வரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அ) தொழிற்சாலைகள் நாவீனமயப்படுத்தல் மானியத்திட்டம்

ஆ) தேயிலைத்தொழிற்சாலைகள் மற்றும் களஞ்சியசாலைகளுக்கு GMPS ஐ நிறுவுதல்

இ) முன்னறிவிப்பின்றிய மதிப்பாய்வுகள் (செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் - TTO)

ஈ) குறைவான NSA மூலோபாயம்

உ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டு மையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன், அவற்றுக்கான சிறந்த உற்பத்தி செயற்பாடுகளை (GMP) விருத்திசெய்தல்

ஊ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குதல்

அ) தொழிற்சாலைகள் நாவீனமயப்படுத்தல் மானியத்திட்டம்

இலங்கை தேயிலை சபையின் கீழான தேயிலை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக, உள்நாட்டு நிதிகளின் கீழ் திறைசேரியினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியானது, கூட்டுறவுப் பிரிவு மற்றும் தனியார் பிரிவுகளுக்குரிய தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மானியத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் நோக்கங்களாக;

I. தேயிலை உற்பத்தியை அதிகரித்தல்
II. தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை அதிகரித்தல்
III. தேயிலைத்தொழிற்துறைக்கு புதிய தொழிநுட்பத்தை அறிமுகம் செய்தல்
IV. தேயிலைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல்

அட்டவணை 2.1.8: தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனமயப்படுத்தலுக்கான மானியக் கொடுப்பனவுகள்

பிராந்தியம்	கிடைக்கபெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட தொழிற்சாலைகள்	செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா)	முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை
பதுரலிய	03	04	2,593,333.3	17
பண்டாரவளை	07	-	-	19
காலி	01	04	1,548,333.0	08
கம்பளை	03	03	1,413,739.0	10
இரத்தினபுரி	12	05	2,508,333.0	16
மாத்தறை	02	09	6,176,705.0	02
நுவரேலியா	-	-	-	-
மொத்தம்	28	25	14,240,443.3	72

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஆ) தேயிலைத்தொழிற்சாலைகள் மற்றும் களஞ்சியசாலைகளுக்கு GMPS ஐ நிறுவுதல்

இத்திட்டமானது, தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் தொழிற்பாடுகளின் தரத்தினை விருத்திசெய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டிகளை வழங்குவதற்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 187 மதிப்பாய்வுத் தெரிவுகளை உள்ளடக்கிய வினாத்தாளுடன் 611 தேயிலைத் தொழிற்சாலைகள் மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், உற்பத்தித் தொழிற்பாட்டின் தரத்தினை மேம்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

அட்டவணை 2.1.9: பிராந்திய அடிப்படையிலான GMP மதிப்பாய்வுகள்

பிராந்தியம்	GMP களை மதிப்பாய்வு செய்தல்	தரநிலையிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை			
		மிகச்சிறந்தது	சிறந்தது	சராசரி	குறைவு
பதுரலிய	108	27	20	2	0
பண்டாரவளை	96	23	35	1	0
காலி	147	51	31	1	0
கம்பளை	84	46	34	4	0
மாத்தறை	35	42	50	3	0
நுவெரெலியா	52	21	16	15	0
இரத்தினபுரி	89	38	40	11	0
மொத்தம்	611	248	226	37	0

மூலம்: இலங்கை தேயிலை சபை

நிறைவுற்ற 2019 ஆம் ஆண்டிலிருந்து, மிகவும் குறைவான தரத்திலிலுள்ள தொழிற்சாலைகளுக்கான பதிவுகளை புதுப்பிப்பதில்லையென தேயிலை ஆணையாளரின் பிரிவினால் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இ) முன்னறிவிப்பின்றிய மதிப்பாய்வுகள் (செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் - TTO)

தேயிலைத்தொழிற்துறையிலான பிழையான நடவடிக்கைகளை தணிக்கும் பொருட்டு செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், ATC யினால் தலைமைதாங்கப்படும் அணியினால் தொழிற்பாடுகள் கையாளப்படுகின்றன. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், தேயிலை ஆணையாளரின் பிரிவின் கள உத்தியோகத்தர்களினால், தேயிலைத் தொழிற்சாலைகளில் 264 அவசரநிலைமை மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டன

அட்டவணை 2.1.10: செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள்

பிராந்தியம்	நடாத்தப்பட்ட மதிப்பாய்வுகளின் எண்ணிக்கை
பதுரலிய	50
பண்டாரவளை	52
காலி	39
கம்பளை	17
மாத்தறை	41
நுவெரெலியா	29
இரத்தினபுரி	36
மொத்தம்	264

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஈ) குறைவான NSA மூலோபாயம்

இத்திட்டமானது, NSA படிநிலையில் கீழ் மட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உருவாக்கப்பட்டதாகும். பச்சைத் தேயிலை இலைகளின் தரம் மற்றும் உற்பத்தித்தரத்தினை விருத்திசெய்வதனூடாக இத்தொழிற்சாலைகளின் NSA ஐ உயர் மட்டங்களுக்கு உயர்த்துவதே திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், தேயிலைத் தொழிற்சாலைகள், குறைவானவை, சிறந்தவை மற்றும் மிகவும் சிறந்தவை என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நிறுவப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில், நிறைவுற்ற 2019 ஆம் ஆண்டிலிருந்து, மிகவும் குறைவான தொழிற்சாலைகளைப் பட்டியலிலிருந்து நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

உ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டு மையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன், அவற்றுக்கான சிறந்த உற்பத்தி செயற்பாடுகளை (GMP) விருத்திசெய்தல்

அழிக்கப்படாத நிராகரிக்கப்பட்ட தேயிலையிலிருந்து நுகரக்கூடிய தேயிலைகளை பிரித்தேடுப்பதே நிராகரிக்கப்பட்ட தேயிலையின் செயற்படுத்தலாகும். ஒவ்வொரு நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளரும், இலங்கை தேயிலை சபையின் நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர் பட்டியலில் பதிவு செய்தல் அவசியமாகும். நிராகரிக்கப்பட்ட தேயிலையின் செயற்படுத்தல் மையங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் திட்டமானது, 1957 ஆம் ஆண்டு தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்ட இலக்கம் 51 இன் கீழ் நிறுவப்பட்டது. நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களின் தரத்தினை விருத்திசெய்யும் வகையில் தேவையான வழிநடத்தல்களை வழங்கும்பொருட்டு GMP திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அட்டவணை 2.1.11: நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்க நிலையங்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள்

பிராந்தியம்	01.01.2020 இல் பதிவுசெய்யப்பட்ட செயற்பாட்டாளர்கள்	வருடத்திலான புதுப்பித்தல்கள்	வருடத்தில் புதிதாக விநியோகிக்கப்பட்டவை	31.12.2020 லான செயலாக்க நிலையங்களின் எண்ணிக்கை	31.12.2020 அன்று விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள்	அனுமதிப்பத்திரத்தினூடாக விநியோகிஸ்தர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட நிராகரிக்கப்பட்ட அளவுகள் (Kg)
பதுரலிய	9	10	01	11	675	3,306,724
பண்டாரவளை	1	01	0	01	1,116	4,504,089
காலி	21	01	15	16	640	2,094,912
கம்பளை	262	176	08	184	2,014	9,730,564
மாத்தறை	9	01	08	09	528	1,823,403
நுவெரெலியா	1	05	-	05	1,682	10624972
இரத்தினபுரி	2	03	0	03	1,096	4,769,463
மொத்தம்	305	197	32	229	7,751	36,854,127

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஊ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குதல்

நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குவது தொடர்பிலான கட்டமைப்பொன்று அமைப்பினால் திட்டமிடப்பட்டது. நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்கள் ஏல உரிமைக்காக விண்ணப்பிக்கையில், GMP தரத்தின் 80% ஐக் கொண்டிருத்தல் அவசியமாகும். நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டு மையங்களுக்கான ஏல உரிமைகள் வழங்கப்பட்டன. நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கு ஏலத்துக்கான உரிமையை வழங்குவதற்கான நோக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- நிராகரிக்கப்பட்ட தேயிலைக்கான சந்தையினை வழங்குதல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை விருத்தி செய்தல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினைக் கண்காணித்தல்
- நிராகரிக்கப்பட்ட தேயிலையிலான சட்டவிரோதமான செயற்பாடுகளை தடுத்து, சட்டபூர்வமான நடைமுறைகளை ஒழுங்குசெய்தல்
- உண்மையாகவே நிராகரிக்கப்பட்ட தேயிலைகளை வெளியகற்றுவதற்கான வினைத்திறனான செயற்பாட்டு முறைமைகளை ஒழுங்குபடுத்தல்.

அட்டவணை 2.1.12: தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான சர்வதேச சான்றுதழ்கள்

பிராந்தியம்	தொழிற்சாலைகளின் எண்ணிக்கை		
	HACCP	ISO 22000	ஏனைய சர்வதேச சான்றுதழ்கள் (RA/CQC)
பதுரலிய	09	09	06
பண்டாரவளை	46	20	10
காலி	19	19	07
கம்பளை	36	36	83
மாத்தறை	07	21	07
நுவெரெலியா	98	98	36
இரத்தினபுரி	23	23	07
மொத்தம்	238	226	156

மூலம்: இலங்கை தேயிலை சபை

தேயிலை நர்சரி திட்டம்-சிறப்பம்சங்கள்






மாதிரி தேயிலை தோட்டம்-சிறப்பம்சங்கள்







2.2 தேயிலை ஏற்றுமதிகள் பிரிவு

தேயிலைச் சட்டம் இல 16, 1959 (வரி மற்றும் ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தல்) மற்றும் இலங்கை தேயிலை சபைச் சட்டம் இல 14, 1975 போன்றவற்றிலான அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் ஆகியன, இலங்கை தேயிலை சபையின், தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் நிர்வகிக்கப்படுகின்றன.தேயிலை ஏற்றுமதியாளர்கள், தேயிலைப் பொதியாளர்கள், சேமிப்பிடங்கள், இறக்குமதியாளர்கள், தேயிலைப் பொதிகளின் வகை, தேயிலையை மீளமைத்தல், தேயிலைக்கான மிகக்குறைந்த தரநிர்ணயத்தினை கண்காணித்தல், தேயிலை ஏற்றுமதிக்கான அங்கீகாரத்தினை வழங்குதல், தேயிலை ஏற்றுமதியின் புள்ளிவிபரங்களை தொகுத்தல் மற்றும் இலங்கையின் இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் (FTAs) கீழ், தேயிலை ஏற்றுமதியினைக் கண்காணித்தல் போன்றவற்றினைப் பதிவு செய்தலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் முன்னெடுக்கப்படும். மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பிரதான தொழிற்பாடுகளும் 2020 முழுவதுமாக முன்னெடுக்கப்பட்டன.

பின்வரும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் 2020 ஆம் வருடத்திலும், இலங்கையின் தேயிலை ஏற்றுமதியில் தொடர்ச்சியான பயனுள்ள மற்றும் வினைத்திறனான விருத்தியை ஏற்படுத்துவது தொடர்பில் தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

1. ஈரான் தேயிலை ஏற்றுமதிக்கான ஜிஎம்பி சான்றுதழ்.

2. தேயிலை ஏற்றுமதியின் மேன்மைத்தன்மையினை நிலைபெறச்செய்யும் வகையில், இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஏற்றுமதிப் பிரிவானத்து கிழமையில் ஏழு நாட்களும் 24 மணிநேரம் தொழிற்படுதல் – இலங்கை சுங்கத்திணைக்களத்தின் ஏற்றுமதி வசதிகள் மையத்தில் (EFC) அனுப்பப்பட தயார் நிலையிலுள்ள பொதிகளை இலங்கை சுங்கத்திணைக்களத்துடன் இணைந்து ஆய்வுக்குட்படுத்தல்.

இதற்கு மேலதிகமாக, தேயிலை பதப்படுத்தலின் தரத்தினை பாதுகாத்து, அதனை விருத்தி செய்யும் வகையில் அனைத்து தேயிலை ஏற்றுமதி பண்டகசாலைகளுக்கும் HACCP தரச்சான்றுதழ் கட்டாயமாக்கப்பட்டது. அத்துடன், அனைத்து தேயிலை ஏற்றுமதி பண்டகசாலைகளிலும், சிறந்த உற்பத்தி செயற்பாடுகளுக்கான (GMP) ஆய்வுக்கற்கைகள் கடந்தn 2018 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டதுடன், இது ஒவ்வொரு வருடமும் மீளப்பெறப்படும். தேயிலை ஆய்வாளர்களுக்கான வேலைகளைப் பகிர்ந்தளிக்கும் வகையில், பதிவுசெய்யப்பட்ட அனைத்து பண்டகசாலைகளும் வரைபடத்தில் குறிக்கப்படுவதுடன், வலயங்களாகவும் பிரிக்கப்பட்டன. தரப்படுத்தல் கட்டமைப்பானது மிகச்சிறப்பானதிலிருந்து மந்தமானது வரை நிறுவப்பட்டது. நாங்கள், மிகச்சிறந்த மற்றும் நன்று வகைகளுக்குரிய களஞ்சியசாலை பதிவுகளை மாத்திரம் வழங்குவோம்.

2.2.1 பதிவுகள்

பதிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஏற்றுமதியாளர்கள், பொதியாளர்கள், சேமிப்பிடங்கள் மற்றும் இறக்குமதியாளர்களை புதுப்பித்தல் ஆகியன தேயிலை ஏற்றுமதிப் பிரிவின் பிரதான பணிகளாக விளங்குவதுடன், தேயிலை ஏற்றுமதியாளராக பதிவுசெய்துகொள்வதற்கு, செல்லுபடியாகும் வியாபாரப்பதிவு, பதிவுசெய்யப்பட்ட தேயிலை சேமிப்பிடம் (சேமித்தல், அரைத்தல் மற்றும் பொதியிடல்), தேயிலை சுவைத்தல் வசதிகளுடனான தேயிலை சுவையாளர் மற்றும் மிகக்குறைந்த மூலதனமாக ரூபா. ஒரு மில்லியன் (மூலதனமாக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட) ஆகியன காணப்படின் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார்.

இலங்கை தேயிலை சபை விதிமுறைகளுக்கமைய (தேயிலைப் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்) 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 386/13 ஆம் இலக்க விசேட அரச வர்த்தமானின் படி, எவராவது உள்ளூர்ப் பாவனைக்கான வியாபார செயற்பாடுகளுக்காக தேயிலைப் பொதியிடல் நடவடிக்கைகளில் அல்லது ஏதாவது பொதியிடல் செயற்பாடுகளில் ஈடுபடுவாராயின், இலங்கைத் தேயிலை சபையில் பதிவுசெய்தல் அவசியமாகும். ஒவ்வொரு பதிவும் ஒரு வருடத்துக்கு மாத்திரம் செல்லுபடியாவதுடன், வருடாந்தம் புதுப்பிக்கப்படுதல் அவசியமாகும்.

தேயிலை சட்டத்தின் (வரி மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாடு) சட்டம் இல 16, 1959 இன் கீழே ஏற்றுமதியாளராக பதியப்பட்ட எந்த நிறுவனமும் தேயிலை இறக்குமதியாளராகவும் பதிவு செய்யப்பட தகுதியுடையவர் ஆவர்.

அட்டவணை 2.2.1 ஏற்றுமதியாளர்கள், பொதியாளர்கள், சேமிப்பிடங்கள், உருவாக்கும் தரகர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் பதிவுசெய்யும் புள்ளிவிபரவியல் (2020)

பதிவுகள்	01.01.2020 க்கமையை	2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் (புதிய பதிவுகள் மற்றும் அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாத நிறுவனங்கள்)	01.01.2020 க்கமைய மொத்தம்
ஏற்றுமதியாளர்கள்	354	புதிய பதிவுகள் : 33 அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 1277	357
பொதியாளர்கள்	674	ஏற்றுமதியாளர்/ உள்ளூர் பொதியாளர் புதிய பதிவுகள் : 33 உள்ளூர் பேக்கர் புதிய பதிவு: 196 அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 1727	803
களஞ்சியசாலை	168	களஞ்சியசாலை புதிய பதிவுகள் : 26 அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 535	194
இறக்குமதியாளர்கள்	113	இறக்குமதியாளர் புதிய பதிவுகள் : 4 அவ்வாண்டில் புதுப்பிக்கப்படாதவை : 79	113
உருவாக்கப்பட்ட தரகர்கள்	08		08

மூலம்: இலங்கை தேயிலை சபை

விசேட அரச வர்த்தமானி, 326/17, 1984 ஆம்ஆண்டு, டிசம்பர் 5 இல் பிரசுரிக்கப்பட்டு, 1986 ஆம்ஆண்டு, செப்டம்பர் 10 இல் திருத்தியமைக்கப்பட்ட இல 410/11 மற்றும் 2003 ஆம் ஆண்டு, மார்ச் 20 இல் திருத்தியமைக்கப்பட்ட இல 1280/8, அரச வர்த்தமானிகளின், இலங்கை தேயிலை சபை விதிமுறைகளுக்கமைய, (தேயிலையை சேமித்து வைத்தல்) குறிப்பிட்ட நேரத்தில், 1000 கிலோகிராம்களுக்கு அதிகமான தேயிலை சேமிக்கப்படுவதாயின், இலங்கை தேயிலை சபையின் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளின் பிரிவுகளுக்கமைய, அவற்றுக்கான நோக்கம் திருப்திகரமானதாக அமைதல் வேண்டும்.

இலங்கை தேயிலை சபை விதிமுறைகளின் (இறக்குமதி மற்றும் ஏற்றுமதி) 1981 இன் கீழ், இலங்கை தேயிலையுடன், ஏனைய விசேட உற்பத்தித் தேயிலைகளைக் கலந்து, சில்லறைக் கொள்கலன்களின், ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இக் கொள்கலன்கள் அல்லது பொதிகள் "இலங்கையில் பொதியிடப்படும் சிலோன் மற்றும் ஏனைய உற்பத்தித் தேயிலைகளின் கலப்பு அல்லது இலங்கையில் பொதியிடப்படும் ஏனைய உற்பத்தித் தேயிலைகள் எனும் குறிப்பினைத் தாங்கி நிற்பதுடன், அனைத்துக் கொள்கலன்களும் இலங்கைத் தேயிலை சபையில் பதிவு செய்யப்படும்.

பதியப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களும், தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதியினைப்பெறும்பொருட்டு, தேவையான அறிக்கைகளுடன், ASYCUDA அமைப்பினூடாக, CUSDEC க்களை தேயிலை ஏற்றுமதிப் பிரிவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்றுமதிக்காக தயார் நிலையிலுள்ள தேயிலைப் பொருட்கள், அவற்றுக்குரிய நியாயமான தரநிர்ணயத்துடன் ஒத்துப்போகும் தன்மைகள் தொடர்பில் இலங்கை தேயிலை சபை உத்தியோகத்தர்களினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

பதிவுசெய்யப்பட்ட அனைத்து தேயிலை ஏற்றுமதியாளர்களும், தங்களது ஆவணப்படுத்தல் தேவைகளின் நிமித்தம் சான்றுதல்களைப் புதுப்பித்தல் தொடர்பிலான முக்கியத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தல் மிகஅவசியமாகும். இதற்கமைய, 2020 ஆம் ஆண்டுக்கான சான்றுதழ் புத்துப்பித்தலுக்காக ஒரு நாள் சேவைகளை வழங்கினோம்.

2.2.2 தேயிலையை இறக்குமதி செய்தல்

இலங்கை தேயிலை சபையினால் 5,296,751.80 கிலோகிராம் தேயிலையை இறக்குமதி செய்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், குறிப்பிட்ட காலப்பகுதியில் உண்மையாக இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 4,668,230kgs ஆக அமைந்ததாக மீளாய்விலிருந்து அறியமுடிகின்றது.

அட்டவணை 2.2.2: உண்மையான இறக்குமதிகள் - ஜனவரி - டிசம்பர் 2020

நாடு	வகை	இறக்குமதியின் அளவு (கி.கிராம்)	சீஇப் பெறுமதி (ரூபா)	பெறுமதி (ரூபா)
சீனா	பச்சைத் தேயிலை	1,794,705	517.80	929,303,197
	விசேட வகை	101,484	556.42	56,467,568
	வெள்ளைத் தேயிலை	6,353	1,079.39	6,857,388
	CTC வகை	1,100	1,957.86	2,153,646
பகுதி மொத்தம்		1,903,642	522.57	994,781,800
இந்தியா	CTC வகை	996,477	304.10	303,029,463
	விசேட வகை (கறுப்புத்தேயிலை)	614,458	711.67	437,289,570
	வெள்ளைத் தேயிலை	50	7,252.00	362,600
	கபினேற்றப்படாத தேயிலை	150	1,439.90	215,985
பகுதி மொத்தம்		1,611,135	459.86	740,897,618
ஜேர்மனி	விசேட வகை	60	2,320.68	139,241
	பச்சைத் தேயிலை	110	2,755.67	303,124
பகுதி மொத்தம்		170	2,602.15	442,365
ஜப்பான்	விசேட வகை	4,100	2,543.62	10,428,860
	பச்சைத் தேயிலை	3,240	4,030.30	13,058,180
பகுதி மொத்தம்		7,340	3,199.87	23,487,040
கனெனியா	CTC வகை	1,144,661	497.68	569,674,809
	கபினேற்றப்படாத தேயிலை	700	1,927.73	1,349,411
பகுதி மொத்தம்		1,145,361	498.55	571,024,220
நபோளம்	CTC வகை	186	7,850.41	1,460,176
	பகுதி மொத்தம்	186	7,850.41	1,460,176
ஐக்கிய இராட்சியம்	பச்சைத் தேயிலை	397	1,822.20	723,412
பகுதி மொத்தம்		397	1,822.20	723,412
முழு மொத்தம்		4,668,230	499.72	2,332,816,631

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.2.3 மிகக்குறைந்த தரநியமத்தினை பேணுதல்

வழங்கப்பட்ட அனைத்து தேயிலை மாதிரிகள் மற்றும் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்ட மாதிரிகள், இறக்குமதிகளின் பின்னரான தொகைகள், இறக்குமதியாகிய தேயிலைத் தொகைகள், ஏற்றுமதிகளுக்கு தயார் நிலையிலுள்ள தேயிலைத் தொகைகள் ஆகியன உத்தரவு வழங்கப்பட்ட வகைப்பிரிவுகளுக்குள் காணப்படுகின்றமை, ISO 3720 தரநிர்ணயத்தினை ஒத்திருத்தல் மற்றும் மாசுற்றிருத்தல் குறித்து, இலங்கை தேயிலை சபையினால் நியமிக்கப்பட்ட தேயிலை சுவையாளர் நிபுணர் குழாமினால் ஆய்வுகள் மேற்கொண்டு பொருத்தமான தயாரிக்கப்பட்ட தேயிலைகளுக்கு மாத்திரம் ஏற்றுமதிகளுக்கான அனுமதி வழங்கப்படும்.

அட்டவணை 2.2.3: ஒவ்வொரு மாதிரியாக்கல் மட்டங்களிலுமான தரக் குறைபாடுகளின் எண்ணிக்கைகள் (2020)

மாதிரிகளின் வகைகள்	பறெப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	ISO தரநிர்ணயத்துக்கு கீழான மற்றும் மாசுற்றவற்றின் எண்ணிக்கை
ஏற்றுமதிப் பிரிவிலிருந்து எடுக்கப்பட்ட ஏலத்துக்கு முன்னரான மாதிரிகள்	6211	3950
ஏலத்துக்கு முன்னரான பின்வாங்கல்கள் (வாரியத்தினால்)	2270	
ஏலத்துக்கு பின்னர்	6119	12

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.2.4 நுகர்வுக்கு பொருத்தமில்லாத தேயிலைகளை அழித்தல்

ஏலத்துக்கு முன்னர், கப்பலுக்கு ஏற்ற முன்னர் மற்றும் விசேட ஆய்வுகளின்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற தயாரிக்கப்பட்ட தேயிலைகளை, ஏற்றுமதிப் பிரிவின் விசேட கண்காணிபின் கீழ் அழிக்கப்படும். நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், இப்பிரிவினால் அனைத்து மட்டங்களிலும் அடையாளங்காணப்பட்ட மொத்தமாக 98,290 கிலோகிராம் தராரிக்கப்பட்ட தேயிலைகள் அழிக்கப்பட்டன.

2.2.5 FTA க்களின் கீழ் ஏற்றுமதிகளின் செயற்திறன்

இலங்கை, இந்தோ- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) மற்றும் பாகிஸ்தான் – இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் (PSFTA) கீழ் தேயிலைக்கான விசேட கட்டண விகிதப் பங்கினை (TRQ) அனுபவிக்கின்றது. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டுக்கான TRQ இன் குறிப்பிடத்தக்க நுகர்வுகள் பதியப்படவில்லை.

அட்டவணை 2.2.4: FTA இன் கீழான TRQ இன் நுகர்வு (2020)

FTA	வருடத்துக்கான பங்கு (கிலோகிராம்)	தேயிலை ஏற்றுமதிகள் (கிலோகிராம்)
இந்தியா- இலங்கை	15,000,000.00	49,108.24
பாகிஸ்தான் – இலங்கை	10,000,000.00	45,510.00

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.2.6 மீட்டெடுக்கப்பட்ட தேயிலை

தேயிலைப் பொதிகள் சர்வதேச கொள்வனவாளரினால் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், இலங்கை தேயிலை சபையின் அனுமதியுடன், அவை உள்ளூர் ஏற்றுமதியாளர்களினால் மீட்டெடுக்கப்படும். அத்தேயிலைகளை மீள் ஏற்றுமதி செய்ய அல்லது மீள்பாவனைக்குட்படுத்த முன்னர், இலங்கை தேயிலை சபையினால் தேயிலைப் பொதிகள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

2.3 தேயிலை ஊக்குவித்தல் பிரிவு

2.3.1 பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவானது, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில், சிலோன் தேயிலை தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நோக்குடன் தொழிற்படுவதுடன், இது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பிரிவுகளினுள் வகைபிரிக்கப்பட்டுள்ளது;

I. சிலோன் தேயிலையின் ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு
II. தேயிலைக்கான பொதுவான ஊக்குவிப்பு நிகழ்வுகள்
III. இலங்கைக்கே உரித்தான சிங்க இலட்சனையின் தர அடையாளத்துக்குரிய ஊக்குவிப்புக்களை முன்னெடுத்தல்
IV. சர்வதேச உணவு மற்றும் பானங்களுக்கான வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகளில் பங்குபற்றுதல்
V. அனைத்து முக்கியமான தேயிலை நுகரும் நாடுகளுக்கும், மூலோபாய சந்தைத் தோற்றமைப்பினை தொகுத்தலும், பரவச்செய்தலும்
VI. தேயிலைப் பகுதிக்கான கொள்கை உருவாக்கத்துக்காக பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சுக்கு உதவுதல்
VII. போட்டியாளர்களின் செயற்பாடுகளை ஆராய்தல்
VIII. சிங்க இலட்சனையை பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தலுடன், தனியார்த்துறை பொதியாளர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்
IX. சிலோன் தேயிலை மற்றும் ஏனைய பிராந்திய தேயிலை வளர்ப்புப் பெயர்கள்/ இலட்சனைகளை புவியியலுக்குரிய குறிகாட்டிகளாகப் பாதுகாத்தல்
X. ஓசோன் நட்புடைய தூய தேயிலையின் இலட்சணையை பதிவுசெய்தலும், தனியார்த்துறை பொதியாளர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதலும்
XI. உள்ளூர் தேயிலை ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

2.3.2 சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலுவலகங்கள் மற்றும் சந்தை நிலைமைகள்

தற்போதைய நிலையில், இலங்கை தேயிலை சபையினால், ஐக்கிய அரபு இராட்சியம், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலுள்ள, இலங்கைப் பணியகங்களுக்கான மூன்று பிராந்திய சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலகுகள் முகாமை செய்யப்படுகின்றன. மத்திய கிழக்கு/ வளைகுடா/ வட ஆபிரிக்கா போன்ற நாடுகளில் தேயிலை ஊக்குவிப்புக்கான அலுவலகம் துபாயில் அமையப்பெற்றுள்ளதுடன், ரஷ்யக் கூட்டமைப்பு மற்றும் சீஐஎஸ் சந்தைகளுக்கான தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகள் மொஸ்கோவினால் கையாளப்படுகின்றன. இலங்கைத் தேயிலையை ஊக்குவித்து அதன் சந்தைப் பங்குகளை அதிகரிக்கும் வகையில், இலங்கைத் தேயிலையை பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலகமானது வளர்ச்சியடையும் சந்தையாக அடையாளங்காணப்பட்டுள்ள சீனாவில், பீஜிங் நகரத்தில் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறுவப்பட்டது. கொழும்பிலுள்ள தேயிலை ஊக்குவித்தல் பிரிவானது, சர்வதேசத்திலுள்ள ஏனைய உரிய இலங்கைப் பணியகங்களுடன் இணைந்து, ஏனைய சந்தைகளுக்கான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

2.3.3 வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுதல்

சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில், தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் "சிலோன் தேயிலையை தேசிய வியாபாரக்குறியாகவும், பங்குபெறும் நிறுவனங்களின் தனிப்பட்ட வியாபாரக்குறியாகவும் ஊக்குவிக்கும் வகையில், இலங்கையில் தேயிலை ஏற்றுமதிசெய்யும் நிறுவனங்களின் பங்களிப்பினை உள்வாங்குதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் இலங்கை தேயிலை சபையினால் வழிநடத்தப்படுகின்றன. கண்காட்சிக்கான இட வாடகை மற்றும் கண்காட்சித் தொகுதியை நிர்மாணிப்பதற்கான செலவுகளில் 50% இலங்கை தேயிலை சபையின் மானியமாக ஒதுக்கப்படுகின்றது. மிகுதியான செலவுகள் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும். நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, இலங்கை தேயிலை சபையினால் 25 வர்த்தகக் கண்காட்சிகளில் பங்குபெற திட்டமிடப்பட்டிருந்தும், கோவிட் நோய்த்தொற்றுக் காரணமாக, கல்வ் பூட் 2020 மற்றும் புரோட் எக்ஸ்போ 2020 ஆகிய இரு வர்த்தகக் கண்காட்சிகளில் மாத்திரம் கலந்துகொள்ளக்கூடியதாக அமைந்ததுடன், ஏனைய கண்காட்சிகளை நீக்க அல்லது பிற்போடத் தீர்மானிக்கப்பட்டது.

2.3.4 சர்வதேச ஊக்குவித்தல் பிரச்சாரம்

சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை, சர்வதேச ரீதியில் அடையாளங்காணப்பட்ட 12 சந்தைகளில் முன்னெடுப்பதே இப்பிரச்சாரத்தின் பிரதான நோக்கமாகும். இதில் ரஷ்யா, உக்கிரேன், அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, சிலி, சவூதி அரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் ஈரான் ஆகியன உள்ளடங்குகின்றன.

இப்பிரச்சார நடவடிக்கைகளில் பின்வரும் மூன்று பிரதான கூறுகளை கையாள்வதற்கான கேள்விமனுக்கோரல் மூன்று நிறுவனங்களிடத்தில் கோரப்பட்டுள்ளது.

I. பிரச்சாரத்தின் ஆக்கபூர்வப் பகுதி மற்றும் தேவையான பொருட்களை உற்பத்திசெய்தல்

II. ஊடக திட்டமிடல், அட்டவணைப்படுத்தல் மற்றும் ஊடகக்கொள்வனவு உள்ளடங்களாக ஊடகக் கூறுகள்

III. பொதுமக்களுடன் தொடர்புபட்ட பிரச்சாரம்

• ஊடகத் திட்டமிடல், கால அட்டவணைப்படுத்தல் மற்றும் கொள்முதல் செய்தல்

ஊடகத் திட்டமிடல், கால அட்டவணைப்படுத்தல் மற்றும் கொள்முதல் போன்றவற்றுக்கான தணிக்கை நடவடிக்கைகளுக்காக டென்ட்சு கிராண்ட்ஸ் தனியார் நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டதுடன், மீளாய்வுக் காலத்தில் பின்வரும் விடயங்கள் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டன. சர்வதேச பிரச்சார நடவடிகைகளுக்காக ஜப்பான், ஜேர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு மூன்று ஊடக மூலோபாயங்கள் டென்ட்சு கிராண்ட்ஸ் தனியார் நிறுவனத்தினால் நிறைவுசெய்யப்பட்டன.

• ஆக்கபூர்வமான அபிவிருத்திகள்

கோட்டுக்கு மேலே (ATL), கோட்டுக்கு கீழே (BTL) மற்றும் சர்வதேச பிரச்சாரத்தின் சமூக ஊடகத்தினை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைக்கும் வகையில் போநெக்ஸ் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு தனியார் நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டதுடன், பின்வரும் கூறுகள் நிறைவுசெய்யப்பட்டன. இலங்கை தேயிலை சபையினால் சர்வதேச பிரச்சாரத்துக்கான ஆக்கபூர்வமான அபிவிருத்திகள் நிறைவேற்றப்பட்டதுடன், ஆக்கபூர்வமான கூறுகள் ஏழு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன (இணையத்தளங்கள்/ டிஜிட்டல் வீடியோ/ துண்டுப்பிரசுரம்/ சிற்றேடு மற்றும் பதாதைகள்)

• KOLs மற்றும் தேடல் தளத்தினை சந்தைப்படுத்தல்

இலங்கை தேயிலை சபையினால் KOLs ஐ வாடகை நிறுவனமாக தெரிவு செய்வதற்கும், ரஷ்யா மற்றும் உக்கிரேன் நாடுகளுக்கான தேடல் தளத்தினை சந்தைப்படுத்துவதற்குமான கேள்விமனுக்கோரல் நடவடிக்கைகள் நிறைவுக்குக்கொண்டுவரப்பட்டன.

• சிலோன் தேயிலையின் சர்வதேச பிரச்சாரத்துக்குரிய எதிர்காலத் திட்டம்

சர்வதேச ரீதியாக நிலவுகின்ற கோவிட் – 19 நோய்த்தொற்றுக்காரணமாக, திட்டமிடப்பட்டுள்ள பிரச்சார நடவடிக்கைகளை வினைத்திறனான வகையில் தொடர்ச்சியாக முன்னெடுத்தல் தொடர்பாக, இலங்கை தேயிலை சபையின், ஊக்குவித்தல், சந்தைப்படுத்தல் பிரிவினால் மீளாய்வுக்குட்படுத்தப்பட்டது. தற்போதைய சர்வதேச நிலைமையினைக் கருத்திற்கொண்டு, பிரச்சார நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவது சிறந்ததென்று தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒக்டோபர் 2020 தொடக்கம் மார்ச் 2021 வரையான காலப்பகுதியில், ரஷ்யா மற்றும் உக்கிரேனில் தேடல் தள சந்தைப்படுத்தல் மற்றும் பிரதான கருத்தாளரின் ஊக்குவித்தல் பிரச்சார நடவடிக்கைகள் (செல்வாக்காளரின் சந்தைப்படுத்தல் பிரச்சாரம்) முன்னெடுக்கப்படும் பகுதிகளில் இணையவழி மூலமாக தொழிநுட்பங்களை மாத்திரம் பயன்படுத்தி பிரச்சாரத்தின் நோக்கங்களை மதிப்பாய்வு செய்வதற்குரிய பரீட்சார்த்தத்திட்டமாக முன்னெடுக்கப்படும்.

2.3.5 வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டம்

இலங்கை தேயிலை சபையினால் 2018/2019 ஆம் வருடத்துக்கான வியாபாரக்குறி ஊக்குவித்தல் மானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பிரகாரம், சிங்க இலட்சனையைக் கொண்ட, தூய சிலோன் தேயிலையானது உரிய நிதியுதவிகளினூடாக ஊக்குவிக்கப்படும் (50% ஊக்குவித்தல் செலவீனம்). இலங்கையில், அறிவுசார் சொத்து அலுவலகத்தில், பணிப்பாளர் நாயகத்தினால் பதியப்பட்ட, இலங்கைக்கு உரித்தான தேயிலை வர்க்கங்கள் மாத்திரம், இத்திட்டத்தின் கீழ் ஊக்குவித்தல் உதவிகளைப் பெற தகுதியுடையவைகளாக விளங்குகின்றன. இத்திட்டத்துக்கான நிதியானது, ஒக்டோபர் 27, 2010 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி இல 1677/2019 இன் கீழ், தேயிலை ஏற்றுமதியாளர்களினால் பங்களிப்புச்செலுத்தும், ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வசூலிப்பிலிருந்து வழங்கப்படும். வரவுசெலவுத் திட்டத்தில், 2018/2019 ஆம் வருடத்துக்காக, ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலை சபையினால் முன்னெடுக்கப்படும் 2018/2019 ஆம் ஆண்டுக்குரிய வியாபாரக்குறி ஊக்குவித்தல் மானியத் திட்டமானது 2021 ஆம் ஆண்டு இறுதி வரை நீடிக்கப்படும். இதன்பிரகாரம், இலங்கை தேயிலை சபை மதிப்பிடப்பட்டதுடன், நிதியுதவிகள் திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

2.3.6 ஊக்குவிப்பு நிகழ்வுகளும், செயற்பாடுகளும்

சர்வதேச ரீதியில் சிலோன் தேயிலைக்காக முன்னெடுக்கப்பட்ட ஊக்குவித்தல் நிகழ்வுகள் மற்றும் செயற்பாடுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன;

• கறுப்புத்தேயிலைப் பிரச்சாரம்

கோவிட் நோய்த்தொற்றுக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட கறுப்புத்தேயிலைக்கான ஊக்குவித்தல் வாய்ப்புக்களை கவனத்திற்கொள்கையில், சர்வதேச ரீதியில் 12 நாடுகளுக்கான (ரஷ்யா, உக்ரேன், சீனா, ஜப்பான், ஜேர்மனி, துருக்கி, சவூதி அரேபியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், அமெரிக்கா, சிலி மற்றும் ஈரான்) சிலோன் தேயிலைக்குரிய சமூக/டிஜிட்டல் ஊடகப் பிரச்சாரங்கள் மூன்று டிஜிட்டல் வீடியோக்கள் மற்றும் 12 இணையப் பதிவுகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டன.

இதனடிப்படையில், ஒவ்வொரு எண்ணக்கருக்களும் ஒழுங்கான கால இடைவெளிகளில் பின்வரும் சமூக/ டிஜிட்டல் தளங்களில் வெளியிடப்படும்.

முகப்புத்தகம், டிவிட்டர், இன்ஸ்ரகிராம், யூடியூப், லிங்டின் மற்றும் வீ கொண்டக்டீ (ரஷ்யா), பைடு, வீ சட், சினா வெய்போ, ஷியாஹோண்சு (சீனா) மற்றும் பேஸ்னாமா, அப்பராட் (ஈரான்)

• இலங்கை தேயிலை சபையினால், இலங்கையில் முதன்முறையாக சாயமூட்டப்பட்ட முகக்கவசம் அறிவுகம்செய்யப்பட்டது

சிலோன் தேயிலையின் சர்வதேச தரம் தொடர்பான விழிப்புணர்வை சர்வதேச ரீதியில் மேலும் அதிகரிக்கும் நோக்குடன், சிலோன் தேயிலையின் வியாபாரக்குறி பதிக்கப்பட்ட முகக்கவசங்கள் உலகளாவிய ரீதியில் சமூகத்தினரிடையே இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன. இலங்கை தேயிலை சபையானது வெளிநாட்டு உறவுகள் அமைச்சுடன் ஒருங்கிணைந்து சிலோன் தேயிலையின் வியாபாரக்குறி பதிக்கப்பட்ட முகக்கவசங்களை சுமார் (75) சர்வதேச நாடுகளிடையே பகிர்ந்தளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

சிலோன் தேயிலையின் வியாபாரக்குறி பதிக்கப்பட்ட முகக்கவசங்கள் பகிர்ந்தளிக்கப்படுதல்












- **இலங்கை தேயிலை சபையினால், இணையவழி மூலமாக வெளிநாட்டு தூதரங்களுடன் நடாத்தப்பட்ட B2B மற்றும் B2C அமர்வுகள்**

இலங்கை தூதரக நாயகம் (மெல்போர்ன்), ஜேர்மனிய இலங்கைத் தூதரகம், துருக்கி இலங்கைத் தூதரகம் (உக்கிரேன்) மற்றும் கொரிய ஜனநாயகக் குடியரசின் இலங்கைத் தூதரகங்களுடன் ஒன்றிணைந்து இக்கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.



- ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஜெர்மனி, பாகிஸ்தான், ரஷ்யா, பங்களாதேஷ் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கான தூதர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடத்துதல்
- இலங்கை தேயிலை சபையினால் உக்கிரேனில் மேற்தரச்சந்தையில் நிறுவப்பட்ட சிலோன் தேயிலை விற்பனை நிலையம்



இந்நிகழ்வானது சில்போ மேற்தரச்சந்தைத் தொடருடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டது.

- கோவிட் – 19 தொற்றினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை தணிக்கும் வகையில், சில வெளிநாட்டு தூதரகங்களினால் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை அடிப்படையாகக்கொண்டு, தேயிலை ஏற்றுமதியாளர்களின் ஏற்றுமதி ஆவணங்களை சட்டபூர்வமாக்குதலுக்குரிய நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கை தேயிலை சபையினால் செயற்படுத்திக் கொடுக்கப்படும்.
- சமூக ஊடகப் பிரச்சாரம் – இலங்கை சர்வதேச அமைப்புக்களினுடாக ஏப்பிரல் தொடக்கம் மே மாதம் வரை 6 இணையவழிப் பதாகைகள்

கோவிட் தொற்றுக்காலத்தில் சிலோன் தேயிலை இணையவழி பிரச்சாரம்: கோவிட் தொற்றுக்காலத்தில் கறுப்புத் தேயிலைக்கான ஊக்குவித்தல் பிரச்சார வாய்ப்புக்களைக் கவனத்திற்கொள்கையில், இலங்கை தேயிலை சபையினால் சிலோன் தேயிலைக்கான பிரச்சாரங்கள் பதிவுகள் மற்றும் இணையவழி பதாகைகள் மூலமாக முன்னெடுக்கப்பட்டன. இதன் பிரகாரம், கறுப்புத் தேநீர் பொதுவாக நோயெதிர்ப்பு சக்தியைக் கூட்டுவதாக அமைவதுடன், வைரசுக்களுக்கு எதிராக தொழிற்பட்டு, சுகதேசியாக வாழ வழியமைக்கின்றது. இணையவழி பதாகைகளின் வேறுபட்ட பதிப்புக்கள் வெவ்வேறான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, ஒவ்வொரு கிழமையும் சர்வதேச அமைப்புக்களுக்கு வெளிவிடப்படும்.

- அவுஸ்திரேலியா, சீனா, ரஷ்யா, பெல்ஜியம், ஐக்கிய அரபு இராட்சியம், லெபனான் மற்றும் ஐக்கிய இராட்சியம் போன்றவற்றுக்கான தேயிலை அன்பளிப்புக்கள் இலங்கை தேயிலை சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டன.
- நோயெதிர்ப்பு சக்தியைக் கூட்டுதல், இலத்திரனியல் ஏலவிற்பனை தொடர்பான ஊடக வெளியீடுகள்
- சர்வதேச தேயிலை நாள் நிகழ்வுக்கான இணைய பதிப்புக்கள், டிஜிட்டல் வீடியோ மற்றும் ஊடகக் கட்டுரைகளை வெளியிடல்
- சீனாவில் சிலோன் தேயிலையின் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்கும் நோக்குடன் சான்டோங்க் தேயிலைக் கழகம் மற்றும் CCPIT இல் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன
- சீனாவின் 14 ஆவது சர்வதேச தேயிலை கலாச்சார கண்காட்சி (குயின்டோ) மற்றும் பேர்பில் சான்ட் கலைக் கண்காட்சிகளில் சிலோன் தேயிலைக்கான ஊக்குவிப்பு நிகழ்வுகள்
- சிலோன் தேயிலையினை ஊக்குவிக்கும் முகமாக சமூக ஊடங்கங்கள் மற்றும் சங்ஹாய் ஒழுங்கமைப்பாளர் நிறுவனத்தினால் (அக்பார் சகோதரர்கள் கலந்துகொண்டனர்) ஒழுங்குசெய்யப்பட்ட ரிஸ்ஹோ டசோங்வாங்க் தொலைக்காட்சி, குவான்போ தொலைக்காட்சி, சியாங்கன் தொலைக்காட்சி நேர்காணல்கள்
- சிலோன் தேயிலை விநியோகிஸ்தருடன் இணைந்து சீனாவின் ஷியாமென் தேயிலை வர்த்தகக்கண்காட்சி, மூன்றாவது சீன சர்வதேச இறக்குமதி கண்காட்சி (CIIE) மற்றும் சிலோன் தேயிலையை ஊக்குவிப்பதற்கான சங்ஹாய் ஆகியவற்றில் கலந்துகொண்டமை
- நேரடி ஒளிபரப்பான "ஸ்ரூவர்ட்" தேயிலை ஊக்குவித்தல் நிகழ்வில் கலந்துகொண்டமை
- ஜப்பான் தேயிலை சங்கத்துடன் இணைந்து தூதரகங்களிலான தேயிலை பயிற்சிப்பட்டறைகள்
- கொரியாவில் நடாத்தப்படும் மிகவும் கௌரவமான சர்வதேச தேயிலைக் கண்காட்சியான கே- தேயிலை களியாட்டம் மற்றும் மயூங் வொன் தேயிலைக் கண்காட்சி, இது பிரதானமாக பாரம்பரிய கொரிய மக்களை குறிக்கோளாக கொண்டதாகும். களியாட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் இலங்கை சார்பாக வர்த்தக உத்தியோகத்தர் பங்குபற்றினார். செல்வி. ஷரின் ஜோன்சன் (அவுஸ்திரேலியா தேயிலை மாஷ்டர்ஸ்) அவர்களினால் நெறிப்படுத்தப்படும் 10 உலக தேயிலை நேரலை நிகழ்வில், தேயிலை உற்பத்திசெய்யும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் விளங்கியது. இந்நிகழ்வில், இலங்கை, கென்னியா, நேபாளம்,இந்தியா, வியட்நாம், ருவாண்டா போன்ற நாடுகளின் தேயிலை உற்பத்திகள் வெளிக்கொணரப்பட்டன.
- மெல்போர்னில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தில், தேயிலை சபை மற்றும் டில்மா ஆகியவற்றின் உதவியுடன் சிலோன் தேயிலையினை மேலும் பிரபல்யமாக்கும் வகையிலான இணையவழி தேயிலை சுவைத்தல் நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன.
- டெல்லியில் 2020 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 8-10 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட இலங்கை SATTE நடமாடும் வர்த்தக்கண்காட்சியிலான சிலோன் தேயிலை சேவைகள்

2.3.7 சிலோன் தேயிலையின் ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு

சிலோன் தேயிலையின் ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு செயற்பாடானது, "சிலோன் தேயிலைக்கான" பிரபல்யம் மற்றும் விளம்பரத்துடன் தொடர்புடையதாக விளங்குகின்றது. இலங்கைக்கான வெளிநாட்டு தூதுக்குழுவின், சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலகுகள் மற்றும் வர்த்தகப் பிரிவுகளினூடாக, வெளிநாட்டு சந்தைகளில், சிலோன் தேயிலைக்கான ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் தேயிலை சபையினால் அறிமுகம் செய்யப்பட்டது.ஊடக விளம்பரங்கள், வெளியக விளம்பரங்கள், தேநீர் சேவைகள், தேயிலை பயிற்சிப்பாசறைகள் மற்றும் கருத்தரங்குகள் மற்றும் ஏனைய பொதுமக்களுடன் உறவான செயற்பாடுகள் போன்றன சபையினால் முன்னெடுக்கப்பட்ட, ஒற்றைத் தேசிய ஊக்குவிப்பு பிரச்சாரங்களின் பிரதான கூறுகளாக விளங்குகின்றன.

2.3.8 பொதுவான தேயிலை ஊக்குவிப்பு

பொதுவான தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகளில் ஏனைய பானங்களுடன் ஒப்பிடுகையில் சுவையினை ஈர்க்கும் பானங்களில் தேநீர் சிறப்பான பங்கினை வகிக்கின்றது. இலங்கை தேயிலை சபையானது, உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), அமெரிக்க தேயிலை சங்கம், ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச தேயிலைக் குழு, கனேடிய தேயிலை மற்றும் மூலிகைகள் சங்கம் மற்றும் ஜப்பான் தேயிலை சங்கம் ஆகிய தேயிலைக்கான சர்வதேச குழுக்களின் உறுப்பினராகத் திகழ்கின்றது. பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள், இவ் அமைப்புக்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள், பிரதானமாக தேயிலை மற்றும் சுகாதாரக் கொள்கைகளில் கவனம் செலுத்துவதுடன், இவை நுகர்வோர் கல்வி மற்றும் பொதுமக்களுடனான உறவுடன் தொடர்புடைய நடவடிக்கைகளினூடாக ஊக்குவிக்கப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2020 ஆம் ஆண்டில் பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட நாடுகளில், தேயிலை சங்கங்கள் மற்றும் சபைகளின் வரவுசெலவுத்திட்டங்களை விளம்பரப்படுத்துவதில், இலங்கை தேயிலை சபை தனது பங்களிப்பை செலுத்தியது.

2.3.9 இலங்கை தேயிலை பிராந்தியப் பெயர்கள் மற்றும் இலட்சணைகளை புவியியல் அறிகுறிகளின் கீழ் பதிவுசெய்தல் (GIs)

"சிலோன் தேயிலை மற்றும் ஏனைய ஏழு வேளாண்-காலநிலை பிராந்திய தேயிலைகளை (நுவரெலியா, உடபுசல்லாவை, திம்புலா, ஊவா, கண்டி, சப்ரகமுவ மற்றும் ருகுண) உலக வர்த்தக அமைப்பின், ட்ரிப்ஸ் (TRIPS) ஒப்பந்தத்தின் கீழுள்ள பிரிவுகளினூடாக, புவியியல் அறிகுறிகளாகப் பாதுகாப்பதற்குத் தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், இலங்கை தேயிலை சபையினால் உருவாக்கப்பட்டன. இது சிலோன் தேயிலை மற்றும் ஏனைய பிராந்திய தேயிலை வளர்ப்பு பெயர்களை, விசேடமாக வெளிநாட்டு ஒப்பந்தப் பொதியாளர்களினால் தவறான பாவனைக்கு உட்படுத்தப்படுவதனை தவிர்க்க உதவுவது மாத்திரமல்லாமல், ஜிஐஎஸ் இன் கீழ் சந்தைப்படுத்தப்படும் சிலோன் தேயிலைக்கான பெறுமதி சேர்த்தல் மற்றும் உயர் மதிப்புள்ள விலைகளை நிர்ணயிப்பதற்கும் உதவியாக அமைகின்றது.

2.3.10 வர்த்தகக்குறியினைப் பாதுகாத்தல்

CEYLON TEA
SYMBOL OF QUALITY

சிங்க இலட்சணை வர்த்தகக்குறியினைப் பதிவுசெய்தல் (712)

சிலோன் தேயிலையின் சிங்க இலட்சணை வர்த்தகத்துக்குரிய சட்டபூர்வமான உரிமையாளராக இலங்கை தேயிலை சபை விளங்குகின்றது. இலங்கையில் மற்றும் ஏனைய நாடுகளில் சிலோன் தேயிலையின் சிங்க இலட்சணையைப் பதிவுசெய்தல் அல்லது புதிப்பித்தல் செயற்பாடுகள் சபையின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவினால் மேற்கொள்ளப்படும். கடந்த 2020 ஆம் ஆண்டளவில் சிங்க இலட்சணையானது 103 நாடுகளில், பதிவுசெய்யப்பட்டிருந்தது. சிங்க இலட்சணையைப் பயன்படுத்தும் உரிமையானது தரமான, பெறுமதி சேர்க்கும் 100% சிலோன் தேயிலை உற்பத்திகளுக்கு மாத்திரம் (தேயிலைப் பைகள் மற்றும் தேயிலைப் பொதிகள்) வழங்கப்பட்டுள்ளதுடன், இவை சர்வதேச தரநிர்ணய அமைப்பின் (ஐஎஸ்ஓ 3720) தர நியமங்களுடன் ஒத்திருப்பதுடன், ஒவ்வொரு இடத்துக்கும் ஏற்றாற்போல, குறைவான குறிப்பு தரநிலைக்கு மேலாக அமைந்துள்ளதுடன், இவற்றுக்கான முற்பொதியிடல் செயற்பாடுகள் இலங்கையில் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும். மதிப்பீட்டுக்காலத்தில், உக்கிரேன், சுவிட்சர்லாந்து, லெபனான், சீனா ஆகிய நாடுகளில் சிங்க இலட்சணையை புதுப்பித்தல் தொழிற்பாடுகள் நிறைவுபெற்றிருந்தன. மேலும், சிலோன் தேயிலையின் பெயரை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் அமெரிக்கா, சவூதி அரேபியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் நிறைவுபெற்றிருந்தன

2.3.11ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலையின் சின்னத்தை பதிவுசெய்தல்

இலங்கையில் ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன், ஓசோன் நட்புடைய தூய தேயிலைக்கான சின்னம் இலங்கை தேயிலை சபையினால் பதிவுசெய்யப்பட்டது. மொண்ட்ரியல் பிரகடனத்தின் கீழ், தனிமைப்படுத்தலல்லாத மற்றும் முன் ஏற்றுமதி செயன்முறைகளுக்கு மெதைல் புரோமைட்டினை பயன்படுத்தல் தொடர்பில் இரு கட்டத் திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. தேயிலைப் பயிர்ச்செய்கையில் (நாற்றுப்பண்ணை), மெதைல் புரோமைட்டினைப் பயன்படுத்தாமல், சூழலுக்கு நட்புடைய தொழில்நுட்பங்களைக் கையாளும் தேயிலைத்துறைத் திட்டங்கள் 2002ஆம் ஆண்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டுக்கான, மொண்ட்ரியல் நெறிமுறை விருது இலங்கைக்கு கிடைக்கப்பெற்றது. இலங்கை ஓசோன் நட்புடைய தேயிலை உற்பத்தி நாடுகளில் உலகில் முதன்மையான, ஒரேயொரு நாடு எனும் அங்கீகாரத்தையும் பெற்றது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, ஒன்பது நாடுகள், தங்களது பதின்மூன்று தரங்களில் ஓசோன் நட்புடைய தூய தேயிலைக்கான சின்னத்தினை தங்களது உற்பத்தியில் பொறிப்பதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றன.

2.3.12 உள்ளூர் தேயிலையை ஊக்குவித்தல்

நிறைவுற்ற ஆண்டில் நிலவிய கோவிட்- 19 தொற்றுக்காரணமாக சிறியளவான ஊக்குவித்தல் பிரச்சார நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டன;

- பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட விளம்பரப்படுத்தல் பிரச்சாரம், விமானநிலைய அதிவேக பாதை விளம்பரம், புகையிரத நிலையம்- விளம்பரப் பிரச்சாரம். PEO தொலைக்காட்சி முன்மொழிவுகள் – FOC அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- நாளிதழ்களுக்கான அனுசரணை மற்றும் விளம்பர நிகழ்வாக, ஊக்குவித்தல் பிரிவின் ஊக்குவித்தல் திட்டமாக நடந்தேறியது.
- நிறைவுற்ற 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊக்குவித்தல் பிரிவினால் அரை-மாத செய்தித்தாள் (06) பிரசுரிக்கப்பட்டது.

2.3.13 தேயிலை விற்பனை நிலையங்கள்

இலங்கை தேயிலை சபை வளாகத்தினுள் சந்தையில் கொடிகட்டிப்பறக்கும் தேயிலை சபையின் பல்தரப்பட்ட தேயிலைப் பொதிகள் மற்றும் இருபத்தெட்டு தனியார்ப் பிரிவு தேயிலை நிறுவனங்களினூடான தேயிலை விற்பனை நிலையங்களில் தேயிலை விற்பனை செய்யப்படுகின்றது. கடந்த 2020 ஆம் ஆண்டில், தேயிலை நிலையத்தினூடான விற்பனையில் ரூபா 26.93 மில்லியன் வருமானமாக ஈட்டப்பட்டதுடன், இது கடந்த ஆண்டுடன் (2019) ஒப்பிடுகையில் 74.92% ஆல் குறைவடைந்துள்ளது. இலங்கை தேயிலை சபையின் பொதிகளின் விற்பனையினால் ரூபா 9.18 மில்லியன் வருமானமாக ஈட்டப்பட்டதுடன், தனியார்ப் பிரிவு தேயிலை தரங்களினால் ரூபா 17.75 மில்லியன் ஈட்டப்பட்டது.

நுகர்வோரின் ஓடர்களை மீள்நிரப்பும் இலக்குடன், தேயிலை விற்பனை நிலையங்கள் மற்றும் பிக் மீ பகிர்ந்தளித்தல் சேவையுடன் இணைந்து தேயிலைப் பைகளை பகிர்ந்தளிக்கும் கட்டமைப்பானது அறிமுகம்செய்யப்பட்டது (நாட்டில் முடக்கக்காலத்தில் கொழும்பினை அண்டிய பகுதிகளுக்கு மாத்திரம்).

2.3.14 ஊக்குவித்தல் காரணங்களுக்காக தேயிலையை பகிர்ந்தளித்தல்

இலங்கை தேயிலை சபையின் “சிலோன் தேயிலை” ஊக்குவித்தல் பிரச்சார செயற்பாடுகளுக்காக ரூபா 4.52 மில்லியன் பெறுமதியான தேயிலை அன்பளிப்பு அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

I. சிலோன் தேயிலை இரண்டு இலங்கை சர்வதேச அமைப்புக்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது

II. சர்வதேச வர்த்தக்கண்காட்சிகளில் திரவநிலை தேயிலை சேவைகள்

III. VIPs/ உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக்காக வழங்கப்பட்டது

2.4 தேயிலை சுவைத்தல் அலகு



இவ் அலகானது சிலோன் தேயிலையின் தரத்துக்கான உத்தரவாதத்தினை வழங்கும் பிரதானமானதொரு அமைப்பாக விளங்குகின்றது. தேயிலையின் ஏலம் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு முன்னர், தேயிலையின் தரத்தினை மதிப்பிடுவதற்குப் பொறுப்பாக செயற்படுகின்றது. வேறுபட்ட நறுமணம், காலநிலை இயல்புகளினால் ஏற்படும் தாக்கங்கள் (மழைவீழ்ச்சி, சூரியஒளி நேரங்கள் மற்றும் வெப்பநிலை), தரைத்தோற்றவியல் அமைப்புக்கள் மற்றும் வேறுபட்ட உற்பத்தி செயற்பாடுகள் போன்ற சில காரணிகளினால், தயாரிக்கப்பட்ட தேநீரின் தோற்றம் மற்றும் சுவை ஆகியவற்றில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. சுவைக்கப்பட்ட தேநீரின் இயல்புகள் மற்றும் சுவையாளரின் பயிற்சித்திறன் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு, தேயிலை மாதிரிகளின் விலை மற்றும் தரம் ஆகியன உறுதிசெய்யப்படும். திருப்தியற்ற தேயிலை மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக இலங்கை தேயிலை சபையின் பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்படும்.

இலங்கை தேயிலை சபையின் சுவைபார்க்கும் குழுவில், அரச மற்றும் தனியார் பிரிவுகளைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளடங்குகின்றனர். இதில், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம் (CTTA), கொழும்பு தரகர்கள் சங்கம் (CBA), சிலோன் மரணடுகை சங்கம் (CPA), இலங்கைக்கான தேயிலை சிறிய பங்குடைமை அபிவிருத்தி சமூகங்களின் கூட்டமைப்பு (SLFTSHDS), தேயிலை ஏற்றுமதிச் சங்கம் (TEA), இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம் (SLTFOA) மற்றும் பக்க சார்பான முடிவுகளை தவிர்க்கும் வகையில், ஏதாவது தனியான குழுவின் உறுப்பினர்கள் ஆகிய அனைத்து பங்குதாரர்களும் உள்ளடங்குகின்றனர்.

இவ் அலகின் பிரதான செயற்பாடுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

• தேயிலையை வெளியகற்றுவதில், ஐஎஸ்ஓ 3720 மற்றும் ஐஎஸ்ஓ 11287 மற்றும் மிகக்குறைந்த தர நியமங்கள் ஆகியன முகாமை செய்யப்படுத்தல்

• தனியார் விற்பனைகள், நேரடி விற்பனைகள் மற்றும் முன்னோக்கிய ஒப்பந்தங்கள் ஆகியன கண்காணிக்கப்பட்டு, உறுதிசெய்யப்படுதல்

• தரமான உற்பத்திகள் மற்றும் நுகர்வோர் பொதிகளுக்கான சிங்க இலட்சனை சான்றிதழ்களை வழங்குவதற்குரிய வசதிகளை ஏற்படுத்தல்

புதிய ஏற்றுமதி நிறுவனங்களுக்கான, தேயிலை சுவையாளர்களை மதிப்பீடு செய்தல்

தேயிலை சுவைத்தலின் எண்ணக்கருவும், செயற்பாட்டு முறைமையும்

- திரவநிலை தேநீர் தயாரிப்புக்காக ஐஎஸ்ஓ 3103 இன் உணர்ச்சி சோதனைகள்
- சிலோனில் தேயிலை தயாரிப்புக்கு, கறுப்புத் தேநீருக்கான சொல்லகராதி/ தனிக்கட்டுரை தேயிலை சுவைத்தல் சொல்லியல் ஐஎஸ்ஓ 6078 -இல. 4 சிலோனில் தேயிலை உற்பத்தி

2.4.1 தேயிலையை வெளியகற்றும் இடத்தில் மிகக்குறைந்த தர நியமங்கள் மற்றும் ஐஎஸ்ஓ நியமங்களை முகாமை செய்தல்

தேயிலை நிபுணர் குழுவினரின் பங்களிப்புடன் , சாதாரண தேயிலை சுவைத்தல் அமர்வுகள், வாரத்திற்கு இருமுறை, பிரதானமாக திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் நடைபெறும். அமர்வின் போது, இலங்கை தேயிலை சபையின் ஏற்றுமதி அலகிலிருந்து, கீழே குறிப்பிடப்பட்ட தேயிலை மாதிரிகள், நேரடியாக TTU க்குக் கிடைக்கப்பெறுவதுடன், பின்னர் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படும்.

அ) முன் ஏலத் தேயிலைகள்

ஆ) விசேட ஆய்வுத் தேயிலைகள்

இ) முன் இறக்குமதி மாதிரிகள்

ஈ) நேரடி விற்பனைகள்

உ) தினசரி மதிப்பீடு, முன் கப்பல் கண்காணிப்பு

தேயிலைகள் தொடர்பான, குழுவின் தீர்மானங்கள், மேலதிக ஒழுங்குமுறைகளுக்காக, தேயிலை ஆணையாளர் பிரிவு மற்றும் தேயிலை ஏற்றுமதி அலகுகளுக்கு அனுப்பப்படும்.

a) முன் ஏலத் தேயிலைகள்

விற்பனைக்கு இரு வாரங்களுக்கு முன்னர், எட்டு தரகர்களினூடாக தங்களது முன் ஏல மாதிரிகள் மதிப்பீடுகளுக்காக முன்னோக்கி அனுப்பப்படும். இதில் முதலாவது படியாக, தரமற்ற தூசுகள், உயர்தர மலர்கள் மற்றும் BOP 1 A ஆகியவற்றினை அடையாளங்காணும் வகையில், பார்வை மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படுவதுடன், இதற்கு சமாந்தரமாக, தரகர்களின், உயர் மற்றும் நடுத்தரம், இலை மற்றும் நுனி மாதிரிகளும் சீரற்ற மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படும்.

அட்டவணை 2.4.1: நிறைவுற்ற 2020ஆம் ஆண்டில் பரிசோதிக்கப்பட்ட மற்றும் சந்தேகத்துக்கிடமான மாதிரிகளின் விபரம்

விவரணம்	ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	சந்தேகிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை
பார்வைப் பரிசோதனைகள்	215,920	
ஒர்கனோலெப்டிக்	22,126	
ஏல முன் மாதிரிகள்		
மது மாசடைதல் சந்தேகத்தினால் குழுவினால் நிராகரிக்கப்பட்ட மாதிரிகள்	6,211	1,680
சிலிசியஸ்துணிக்கைகள்		
மசகு நார்		604
முட்டாள்தனமான விஷயங்கள்		242
கச்சா ஃபைபர்		1,424

மூலம்: இலங்கை தேயிலை சபை

b) கப்பலுக்கு முன்னரான தேயிலைகள்

கப்பலுக்கு முன்னர், சிங்க இலட்சணையை பயன்படுத்தல், ஐஎஸ்ஓ 3720 அளவுருக்கள் அல்லது வேறு ஏதாவது மாசடைவுகள் தொடர்பில், கப்பலுக்கு முன்னரான மாதிரியின் கீழ் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும். கடந்த 2020 ஆம் ஆண்டு, இக்கண்காணிப்புத்திட்டத்தின் கீழ்,6119 கப்பலுக்கு முன்னரான மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

c) இறக்குமதிக்கு முன்னரான மற்றும் இறக்குமதிக்கு பின்னரான தேயிலைகள்

இறக்குமதிக்கு முன்னரான மாதிரிகள், அவற்றின் ஏற்றுமதிக்கான பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்யும் வகையில், இலங்கை தேயிலை சபையின் ஏற்றுமதி அலகினூடாக அனுப்பப்படும். மாதிரிகளுடன் வரும் ஒவ்வொரு விண்ணப்பமும், அவற்றின் தோற்றம் மற்றும் தரம் ஆகியவற்றினைக் கொண்டிருக்கும்.

இலங்கை தேயிலை சபையின் சுற்றறிக்கை இல.ஓஆர்/1/65 மற்றும் அதன் திருத்தங்களின் வழிகாட்டுதல்களுடன், சுவைபார்க்கும் குழுவினால், தேயிலை மாதிரிகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். கடந்த 2020ஆம் ஆண்டில்,1346 மாதிரிகள், இறக்குமதிக்கு முன்னரான மாதிரிகளாக TTU வினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இயக்குமதி செய்யப்பட்ட தேயிலைப் பொதிகள் வந்தவுடன், அவற்றிலிருந்து மாதிரிகள் எடுக்கப்படுவதுடன், சுவைப் பரீட்சைக்கான அனுமதியைப் பெறும்பொருட்டு, இறக்கப்பட்ட மாதிரிகளின் குறிப்புக்களுடன் தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் அனுப்பப்படும். இம் மாதிரிகள், வழங்கப்பட்ட மாதிரிகளுக்கு எதிராக, மதிப்பீடு செய்யப்படுவதுடன், இத்திட்டத்தின் கீழ்,654 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட

2.4.2 தனியார் விற்பனைக்கான ஒப்புதல் மற்றும் குழுவின் ஒப்புதல் மதிப்பீட்டுச் சான்றிதழ்

அ) தனியார் விற்பனைக்கான ஒப்புதல்

குழுவுடன் இணைந்த மாதிரிகள், தேயிலை சுவை மதிப்பீட்டுக்காக சுயாதீனமான தரகர்களின் அனுமதிகளுடன் விற்பனை முகவர்களினால், அனுப்பப்படுகின்றன. இச்சேவைக்காக, நிலையான கட்டணம் அறவிடப்படுவதுடன், உறுதிசெய்யும் கட்டணமாக, ரூபா. 500 (VAT + NBT வரிகள்) அறவிடப்படும்.தற்போதைய நிலையில், மேற்கூறப்பட்ட திட்டங்கள், பச்சைத் தேயிலைகள், சேதனத் தேயிலைகள் மற்றும் விசேட தேயிலைகள் மற்றும் கொழும்பு ஏலத்தில் விற்கப்படாத சிறிய தர தேயிலைகளுக்கான அளவைகள் இடப்பட்டுள்ளன. கடந்த 2020 இல் மொத்தமாக, 9592 தனியார் விற்பனைத் தொகுதிகள் பரீட்சிக்கப்படதுடன், ஒப்புதளிக்கப்பட்டுள்ளன. கடந்த 2020 இல் மொத்தமாக, 9592 தனியார் விற்பனைத் தொகுதிகள் பரீட்சிக்கப்படதுடன், ஒப்புதளிக்கப்பட்டுள்ளன.

ஆ) முன்னோக்கிய ஒப்பந்தங்களுக்கான ஒப்புதல்

குறிப்பிட்ட காலத்தில், கொள்வனவாளர்களின் தேவைகளுக்கேற்ப, தெரிவுசெய்யப்பட்ட சிறியளவான மதிப்பெண்களுக்கான ஒப்புதல்கள் நிறைவேற்றப்பட்டன. விற்பனையாளர், கொள்வனவாளர், தரகர் மற்றும் தேயிலை சபை ஆகியோரினால், விற்பனை ஒப்பந்தத்துக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட சேவைகள் உள்ளடங்களாக, வரிக்கான ஒப்புதல் கட்டணமாக ரூபா. 500 (VAT +NBT வரிகள்) வழங்கப்படும். 2020 இல் மொத்தமாக ஒப்புதலளிக்கப்பட்ட முன்னோக்கிய ஒப்பந்த வரிகளாக 175 அமையப்பெற்றுள்ளன

இ) நேரடி விற்பனைகளுக்கான ஒப்புதல்

உற்பத்தியாளரும், ஏற்றுமதியாளராகவும் விளங்குபவர், தமது உற்பத்திகளை, நேரடியாக வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் மேற்குறிப்பிட்ட திட்டத்தினால் வழங்கப்படுகின்றன. இதற்கு விதிவிலக்காக, பச்சைத் தேயிலை, சேதனத் தேயிலை மற்றும் விசேட தேயிலைகளை உள்ளூர் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யமுடியும். நேரடி விற்பனைகளுக்கு ஒப்புதளிக்கும் குழு வியாழக்கிழமைகளில் கூடுவதுடன், வருடத்தினைக் கவனத்திற் கொள்ளும்போது,1298விற்பனை வரிசைகளுக்கும், 1.55 மில்லியன் கிலோகிராம் எடை அளவுக்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

2.4.3 சிங்க இலட்சணையைப் பதிவு செய்தல்

தேயிலையின் தரம் மற்றும் உற்பத்தி நாட்டினைப் பிரதிபலிக்கும் சிங்க இலட்சணையானது முழுமையாக, இலங்கை தேயிலை சபைக்கு சொந்தமானதாகும். தரச்சிறப்புடைய நுகர்வோர் பொதிகளில் சிங்க இலட்சணையை பொறிக்க விருப்பமுள்ளோர், இதற்காக தங்களது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கவேண்டுமென்பதுடன், அவை சென்றடையும் இடம் மற்றும் சந்தைகளுக்கு ஏற்ப மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படும்.

உற்பத்தித்தரங்களுக்கான, சிங்க இலட்சணையின் செல்லுபடிக்காலம் மூன்று வருடங்களாகும். சில்லறை விற்பனைப்பொதிகளிலும் சிங்க இலட்சணையைப் பொறிப்பதற்கான தனியுரிமை, இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படும். 2019 இல், புதிய உற்பத்தித்தரங்கள், புதுப்பித்தல் மற்றும் மேலதிக பொதிகளுக்காக 477 விண்ணப்பப்படிவங்கள், தேயிலை ஊக்குவித்தல் பிரிவின் கண்காணிப்புடன் இணைந்து, TTU னால் செயற்படுத்தப்பட்டன.

தரத்தினை முகாமை செய்தல், இலட்சணையின் பெருமதிப்புடைய பெயரைப் பாதுகாத்தல் மற்றும் சிங்க இலட்சணையை மோசடியான முறையில் பயன்படுத்தலைத் தவிர்த்தல் போன்ற காரணங்களுக்காக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில், சிங்க இலட்சணைக்கான, கண்காணிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கப்பலுக்கு முன்னரான கண்காணிப்பு செயற்பாடுகளின் போது, சிங்க இலட்சணையைக் கொண்ட, 80 வீதத்துக்கும் அதிகமான பொதிகள் எழுந்தமானமான முறையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். மேலும், வெளிநாட்டு சந்தைகளிலுள்ள, சிங்க இலட்சணை பொறிக்கப்பட்ட பொதிகள், மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு, அறிக்கையிடுவதற்காக, இலங்கைத் தூதரகங்களின் வெளிநாட்டுப் பணியகங்கள் மற்றும் வரத்தக ஆலோசகர்களினால் முன்னோக்கி அனுப்பப்படும். உள்ளூர் சந்தைகளில், சிங்க இலட்சணையைப் பயன்படுத்தும் உற்பத்தித்தரங்கள், அவற்றின் சட்டவிரோத இலட்சணைப் பாவனை தொடர்பில் எழுந்தமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். பிரதானமாக, தேயிலை சபையில் பதிவுசெய்யப்பட்ட புகழ்பெற்ற, நீண்டகாலமாக நீடித்திருக்கும், நியாயமான சந்தைப்பங்கினைக் கொண்ட பொதியாளர்களுக்கு, சிங்க இலட்சணையை பயன்படுத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதுடன், கண்காணிப்புக்கும் உட்படுத்தப்படும்.

2.5 பகுப்பாய்வு ஆய்வுகூடம்

தேயிலை சபைக்குரிய பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் கீழ் இரசாயன பகுப்பாய்வு அலகு, நுண்ணுயிரியல் பகுப்பாய்வு அலகு மற்றும் களைநாசினி எச்சங்களுக்கான பகுப்பாய்வு அலகு ஆகியன தொழிற்படுவதுடன், சர்வதேச ரீதியில் நிறுவப்பட்ட ஆய்வு முறைமைகள் மற்றும் வினைத்திறனான முடிவுகளுக்குரிய உயர்நுட்ப சாதனங்களுடன் பொருத்தப்பட்ட கருவிகள் மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட முன்னனுபவம்வாய்ந்த ஊழியர்களைக் கொண்டு இயங்குகின்றது. கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து, சீரான இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகளுக்குரிய அங்கீகாரத்தினை முகாமைசெய்யும் நோக்கத்தினை சீராகப் பேணியதுடன், பின்னர் 2020 ஆம் ஆண்டு, அதன் அங்கீகாரத்தினை வழங்கும் நோக்கமானது ISO/IEC 17025:2017 க்கு அமைவாக புதுப்பிக்கப்பட்டது.

கடந்த 2020 ஆம் ஆண்டிலான வெற்றிகள்....

I. உரிய ஏற்றுமதியாளர்களிடமிருந்து தேயிலை சபைக்கு கிடைக்கப்பெற்ற "கிளைப்போசைட்" (தாய்வான்), '2-6 DIPN (தாய்வான்), 'குழுட்டன் (ஜேர்மனி) மற்றும் MCPA (ஜப்பான்) ' தொடர்பான பல்வேறு வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளை தீர்ப்பதில் ஆய்வுகூடம் பங்களிப்புச்செலுத்தியது.

II. 'மல்டோ- டெக்ஸ்ரின்' (பொலிஸ்), பெரஸ் - சல்பேற்று (STF) மற்றும் வெல்லங்கள் (தேயிலை ஆணையாளர்) ஆகிய உள்ளூர் முறைப்பாடுகளுக்கு, தேயிலை சபையின் ஆய்வுகூடமானது ஜரோபின், ஜேர்மனிய ஆய்வுகூடத்தின் உறுதுணையுடன் பங்களிப்புச்செலுத்தியது.

III. ஜப்பான் செயற்படிமுறைமைகளின் பிரகாரம், LCMS - MS கருவிகளைப் பயன்படுத்தி, MCPA களைநாசினி ஆய்வுகளுக்காக, தெரிவுசெய்யப்பட்ட பிரபல்யமான உள்ளூர் ஆய்வுகூடங்களான, தொழிற்துறை தொழிநுட்பவியல் நிறுவனம், புரேறு வெரிட்டா பரிசோதனை ஆய்வுகூடம் மற்றும் இன்டர்டெக் பரிசோதனை ஆய்வுகூடம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து உள்ளூர்-ஆய்வுகூட ஒப்பீட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக, ஜப்பானுக்கு ஏற்றுமதியாகும் தேயிலைகளுக்கான MCPA பரிசோதனைக்காக, தேயிலை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுகூடமாக ITI இன் எச்சங்களுக்கான பரிசோதனை ஆய்வுகூடம் தெரிவாகி, அறிவிக்கப்பட்டது.

IV TRI, ITI மற்றும் SGS லங்கா ஆய்வுகூடம் உள்ளிட்ட இலங்கையிலுள்ள உணவுப் பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கிடையில், TRI யினால் உருவாக்கப்பட்ட வெல்லப்பரிசோதனைகளுக்கான செயற்படிமுறைகளை அமுல்படுத்துவதனூடாக உள்ளக ஆய்வுகூட ஒப்பீடுகள் மற்றும் செயற்பாட்டு முறைமைகள் செல்லுபடியாக்கப்பட்டது. இதன் விளைவாக, விலகல் சுட்டி உணர்கருவியுடனான அதியுயர் நீர்ம நிறப்பிரிகை செயற்திறனை பயன்படுத்தி, வெல்லங்களுக்கான செல்லுபடியாக்கப்பட்ட ஆய்வு முறைமையை தேயிலை சபையினால் பாதுகாக்கக்கூடியதாக அமைந்தது.

V. தேயிலைத்தொழிற்துறையிலுள்ள பங்குதாரர்களுக்காக ரூபா, 10,000.00 செலவில் தேயிலை வெல்லப்பரிசோதனை, தேயிலை சபையினால் அறிமுகம் செய்யப்பட்டது.

VI. கறுப்புத் தேயிலை தரநியமங்கள் ISO 3720 மற்றும் பச்சைத் தேயிலை தரநியமங்கள் ISO 11287 இன் கீழ் பங்குபற்றிய பிரபல்யம்வாய்ந்த பத்து அரச மற்றும் தனியார் தேயிலை பகுப்பாய்வு ஆய்வுகூடங்களில், ஆய்வுகூடத்தின் இரசாயன பகுப்பாய்வு அலகு அதன் வெற்றிகரமான செயல்திறமை தேர்வில் (PT) தகுதியுடையதாகியதுடன், இது 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் எட்டப்பட்ட மிகமுக்கியமான வெற்றியாகும்.

VII. தேயிலை சபை – அணுச்சக்தி சபை – தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய முத்தரப்புக்களுக்கிடையில் 'சிலோன் தேயிலையின் தோற்றுவாயினை உறுதிசெய்வதற்கான புவிஇரசாயன அணுகுமுறை எனும் முன்னோடித்திட்டத்தினூடாக 'சிலோன் தேயிலைக்கான' GI விரலடையாலங்களை நிறுவும் பொருட்டு இவ் ஆய்வுகூடமானது பாரிய பங்கினை வகிக்கின்றது.

VIII. ஆய்வுகூடமானது தேயிலை ஊக்குவித்தல் பிரிவுடன் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்ததுடன், பிரதான நகரங்களின் சிறப்பு அங்காடிகளிலிருந்து தேயிலை மாதிரிகளைப் பெற்று, உள்ளூர் சந்தைகளில் தேயிலையின் தரத்தினை கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

IX. தேயிலை சுவையாளருடனான – TTU ஆய்வுகூடக் கட்டமைப்புக்கள் அமைக்கப்பட்டதுடன், பிரதான உடனடித் தேயிலைத் தயாரிப்பளர்களிடமிருந்து BMF தேயிலை மாதிரிகள் சேகரிக்கப்படுவதனூடாக, ISO 3720 தரநியமத்துடன் பொருத்தும் வகையில் BM விசுறும் தேயிலையின் "பதனிடப்படாத நார்களின்" மட்டத்தினை நிறுவும் வகையிலான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது.

2.5.1 பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் செயற்திறன்



படம் 2.5: பகுப்பாய்வு ஆய்வகத்தின் இயக்குனருடன் ஆய்வக ஊழியர்கள்

கடந்த 2020 ஆம் ஆண்டு, பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் மூன்று தொழிற்பாட்டு அலகுகளினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் சாராம்சமானது, முன்னைய வருடத்துடன் ஒப்பிடப்பட்டு கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது

.

அட்டவணை 2.5.1 பகுப்பாய்வு ஆய்வகத்தால் செய்யப்பட்ட சோதனைகளின் சுருக்கம்

ஆய்வின் பெயர்	பரிசோதனைகளின் எண்ணிக்கை	
	2019	2020
இரசாயன பகுப்பாய்வுகள் அலகு		
தேயிலையிலுள்ள ஈரப்பதனை தீர்மானித்தல்	286	280
தேயிலையிலுள்ள மொத்த சாம்பலை தீர்மானித்தல்	281	355
தேயிலையிலுள்ள நீரில் கரையக்கூடிய மொத்த சாம்பலைத் தீர்மானித்தல்	280	353
தேயிலையிலுள்ள அமிலத்தில் கரையாத மொத்த சாம்பலைத் தீர்மானித்தல்	280	355
தேயிலையிலுள்ள நீரின் பிரித்தெடுப்பு அளவினை தீர்மானித்தல்	283	189
தேயிலையிலுள்ள நீரில் கரையக்கூடிய சாம்பலின் காரத்தன்மையை தீர்மானித்தல்	273	356
தேயிலையிலுள்ள பதனிடப்படாத நார்த்தன்மையை தீர்மானித்தல்	288	420
அடிப்படை கதிர்வீச்சு அளவீட்டுப் பரிசோதனைகள்	187	150
ஏனைய சோதனைகள் (சேர்க்கப்பட்ட நிறம், சீனி, அரைதிண்மக்கரைசல் (Jel), திரவம், கறை, சுவை, இரசாயானத்தை அடையாளங்காணுதல்)	5	-
தரங்களை அடையாளங்காணும் பரிசோதனைகள்/ வடிகட்டி ஆய்வுகள்	31	27
இரசாயன அலகில் செல்லுபடியாக்குதல், பகுப்பாய்வு முறைகளை சரிபார்த்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள்	21	7
நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகு		
மொத்தத் தட்டுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்	560	171
மதுவம் மற்றும் பூஞ்சனத்தின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்	563	579
தேயிலையிலுள்ள இறந்த மற்றும் உயிருள்ள பூச்சிகள் மற்றும் ஏனைய அசுத்தங்கள்/ பிற பொருட்களுக்கான நுணுக்குக்காட்டியல் ஆய்வுகள்	37	28
தயிலையில் மரபணுக்களினால் மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களைத் (GMO) தீர்மானித்தல்	760	280
மல கோர்லிபோர்ம் மற்றும் எசுக்கீரிச்சியா கோலி பற்றீரியாக்களைக் கண்டறிந்து, கணக்கெடுப்பை முன்னெடுத்தல் (ஈ.கோலை)	562	544
மொத்த கோர்லிபோர்ம் பற்றீரியாக்களைக் கண்டறிந்து, கணக்கெடுப்பை முன்னெடுத்தல்	564	544
நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகில் செல்லுபடியாக்குதல், பகுப்பாய்வு முறைகளை சரிபார்த்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள்	28	4
பீடைநாசினி எச்சங்களுக்கான பகுப்பாய்வுகள் அலகு		
எத்தியோன்	385	*
மலத்தியோன்	385	*
சைப்பமெத்ரின்	385	*
பீட்டா – என்டோசல்பன்	385	*
பைபெந்திரின்	385	*
ரோமோபுறோபைலேற்று	385	*
தெத்ராதிபோன்	385	*
எண்டோ சல்பான் சல்பேற்று	385	*
HPLC RI கண்டறியும் கருவியை பயன்படுத்தி சீனி பகுப்பாய்வுகளை முன்னெடுத்தல்	376	5085
கிருமிநாசினி அலகில் செல்லுபடியாக்குதல், பகுப்பாய்வு முறைகளை சரிபார்த்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகள்	-	3
மொத்தம்	8745	9240

மூலம்: இலங்கை தேயிலை சபை

பீடைநாசினி எச்சங்களுக்கான பகுப்பாய்வுகள் அலகின், ஹய் டெக் கருவி சடுதியாக செயலிழந்ததன் காரணமாக, 2020 ஆம் ஆண்டிலான பகுப்பாய்வுகளின் எண்ணிக்கை குறைவடைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

2.5.2 தேயிலைத்தொழிற்துறையினை வழிநடத்துவதில் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் தலையீடுகள்

மீளாய்வு வருடத்தில், பெறப்பட்ட 9240 தேயிலை மாதிரிகளில், 1411 மாதிரிகள் ISO 3720 & ISO 11287 இன் அதிகுறைந்த தர நியமங்களுக்குக் கீழே அமையப்பெற்றன. மேலே குறிப்பிடப்பட்ட வகைகளின் கீழ் நிராகரிக்கப்பட்ட தேயிலைத் தொகுதிகளின் எண்ணிக்கையானது, மூன்று பகுப்பாய்வு கட்டொழுங்குகளின் கீழ் சாரம்சமாக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.5.2 பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் செயல்திறன்

பகுப்பாய்வு அலகு	மிகக்குறைந்த தர நியமங்களுக்குக் கீழே அமையப்பெற்ற மாதிரிகளின் எண்ணக்கை
நுண்ணுயிரியல்	754
இரசாயனவியல்	348
வெல்லம்/ பீடைநாசினி எச்சங்கள்	309

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.5.2.1. பீடைநாசினிகள் எச்சங்கள் பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

தேயிலை ஆணையாளரின் பிரிவிலுள்ள, மாதிரியாக்கல் ஊழியர்களின் உதவியுடன், நிறைவுற்ற 2020 ஆம் வருடத்தின் இறுதியில் தொழிற்சாலைகள் மற்றும் தேயிலை ஏலங்களிலிருந்து எழுந்தமானமாக தெரிவுசெய்யப்பட்ட 5085 மாதிரிகள் வெல்லப் பகுப்பாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன. பீடைநாசினி எச்சங்களுக்காக மொத்தமாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளில், 309 மாதிரிகள் வெல்லங்களுக்கான தரநியமங்களின் அடிப்படையில் குறைவான தரமுடையவையாக அடையாளங்காணப்பட்டதுடன், அவை கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.5.3: கிருமிநாசினி பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

பீடைநாசினி பகுப்பாய்வின் வகை	மிகக்குறைவான தர நியமங்களுக்குக் குறைவானவை
தரநியமம்/ வழிகாட்டி	754
பிரக்டோஸ்	48
குளுக்கோஸ்	94
சுக்குரோஸ்	167

மூலம்: இலங்கை தேயிலை சபை

மேலும், பீடைநாசினி ஆய்வுகூடமானது, தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் (TRI), தொழிற்துறை தொழிநுட்பவியல் நிறுவனம் (ITI) மற்றும் எஸ்ஜீஎஸ் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து உள்ளக ரீதியில் தயாரிக்கப்பட்ட பகுப்பாய்வு முறைமைகளை பயன்படுத்தி வெல்லங்களுக்குரிய (குளுக்கோஸ், பிரக்டோஸ் மற்றும் சுக்குரோஸ்) இரு ஆய்வுகூடங்களுகிடையிலான ஒப்பீட்டு நிகழ்வுகளில் பங்குபற்றியது. ஏனைய ஆய்வுகூடங்களுகிடையிலான ஒப்பீட்டு நிகழ்வானது, கடந்த 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், 'Eurofins GmbH' ஆய்வுகூடம் (ஜேர்மனி) மற்றும் எஸ்ஜீஎஸ் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றுடன் மேற்கொள்ளப்பட்டது.

2.5.2.2. நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகின் செயல்திறன்

இதற்கமைய, உள்ளக கண்காணிப்பு சேவையினூடாக பெறப்பட்ட 1866 மாதிரிகளில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் 754 மாதிரிகள் குறிப்பிட்ட தரநியமங்களுக்கு கீழே அல்லது மனித நுகர்வுக்கு உகந்ததல்ல என அடையாளங்காணப்பட்டது. தேயிலை ஆணையாளரின், தேயிலை சபை ஒழுங்குமுறை செயற்பாடுகளினூடாக இம்மாதிரிகளுக்குரிய பொதிகள் அழிக்கப்பட்டு, கட்டமைப்பிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.5.4: நுண்ணுயிரியல் அலகின் செயல்திறன்

நுண்ணுயிரியல் ஆய்வின் வகை	அதிகுறைந்த தர நியமங்கள் / வழிகாட்டிகளுக்கு கீழ்பட்டது
கணக்கிடப்பட்ட மொத்த தட்டுக்கள்	118
மதுவம் மற்றும் பூஞ்சனம்	372
கோர்லிபோர்ம்	247
ஈ-கோலை	17

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.5.2.3 இரசாயன பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

தேயிலை மாதிரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட, தேயிலைத் தரத்துக்குரிய அளவுருக்கள் தொடர்பான தகவல்கள் தேயிலை ஆணையாளரினால் ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டதுடன், தேயிலையின் அதிகுறைந்த தரநியமத்துக்கு குறைவாகக் காணப்பட்டமை மற்றும் அளவுருக்களின் திருப்தியற்ற நிலைமைகள் அவை அழிக்கப்பட்டமை உறுதிசெய்யப்பட்டது.

அட்டவணை 2.5.6: இரசாயன பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

இரசாயன பகுப்பாய்வு வகை	அதிகுறைந்த தர நியமங்கள்/வழிகாட்டிகளுக்குக் கீழே
மசகு நார் உள்ளடக்கம்	256
காரத்தின் உள்ளடக்கம்	20
நீர்ச்சாறு	1
சிலிக்கனைக் கொண்ட அமிலங்கள்- கரையாதவை	4
மொத்த சாம்பல்	3
நீரில் கரையக்கூடிய சாம்பல்	1
ஈரப்பதன்	63

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.5.2.4 தர ஆய்வு அலகின் செயல்திறன்

தேயிலை ஆணையாளர் அல்லது பிரதி தேயிலை ஆணையாளரின் (ஏற்றுமதிகள்) வேண்டுகோளுக்கிணங்க, 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின், பயிற்சிபெற்ற தர முகாமைத்துவ உத்தியோகத்தர்களின் தலையீடுகளுடன் மற்றும் உதவியுடன் உத்தியோகபூர்வமான 78 கள மாதிரிகள்/ மீள்மாதிரிகள் பெறப்பட்டன. அனைத்து தேயிலை மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல் மற்றும் எடுக்கப்படும் தேயிலை மாதிரிகளின் சரியான தன்மை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் வகையில், ஆய்வுகூடத்தினால் அமுல்படுத்தப்படும் விஞ்ஞான ரீதியான மாதிரியாக்கல் நடவடிக்கைகளுக்காக, தேயிலை சபையினால் விசேட செயற்பாட்டு முறைமைகள் நிறுவப்பட்டன.

2.5.3 ஆய்வுகூடம் மற்றும் மேம்படுத்தல் திட்டத்தின் நிலைமை

- இலங்கை தேயிலை சபையின் பகுப்பாய்வு ஆய்வுகூடமானது, 2017 ஆம் ஆண்டு தரநியமங்களின் கீழ் தரநிர்ணயத்தினை மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தியதுடன், அதற்கான தரநிர்ணயத்தையும் வழங்கியது. இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகளுக்கான தரநிர்ணயத்துக்குரிய நோக்கமானது, ISO 17025:2005 பழைய பதிப்பிலிருந்து, ISO/IEC 17025:2017 புதிய பதிப்புக்கு, 16/09/2020 திகதியிலிருந்து செல்லுபடியாகும்
- வகையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இது பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக் கிடைத்த சிறப்பானதொரு வெற்றியாகும்.
- பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் தரநிர்ணய நிலைமையினைப் பேணும் வகையில், பகுப்பாய்வுகளின் முடிவுகளின் துல்லியத்தன்மையினைப் பேணுதல் அவசியமாகும். இரசாயன, பீடைநாசினி மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வுகூடங்களில் பகுப்பாய்வுகளுக்குரிய விஞ்ஞானக் கருவிகள் திகதிகளுக்கமைய சீராக்கல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன், 2020 ஆம் ஆண்டிலும் சீராக்கல் செயற்பாடுகளுக்கான நடவடிக்கைகள் முதலாவது முன்னெடுப்பதற்காக, 500 க்கும் மேற்பட்ட வெவ்வேறு வகையான இரசாயனங்கள்; தரநியம மற்றும் நுகரத்தக்க தொகுதிகள் பகுப்பாய்வு ஆய்வுகூடத்தின் மூன்று பிரிவுகளினால் பேணப்படும்.
- இலங்கையின் தேயிலைத் தொழிற்துறைக்கு சிறப்பான சேவையை வழங்கும் வகையில், அனுமதிபெற்ற 2020 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தினைப் பயன்படுத்தி, ஆய்வுகூடத்தினை நவீனமயமாக்குவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
- தேயிலை சபையின் வேண்டுகோளுக்கிணங்க, ஆய்வுகூடத்தின் தர, இரசாயன, பீடைநாசினி மற்றும் நுண்ணுயிரியல் பிரிவுகளுக்கான, நான்கு உதவிப்பணிப்பாளர்களை நியமிப்பதற்கான அனுமதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது.

2.6 நிர்வாகப் பிரிவு

மனித வள முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தையும் உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல், தகவல் தொழிநுட்ப சேவைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரிப்பதற்கான சட்ட நடவடிக்கைகள், தேயிலை சபையின் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நெறிப்படுத்தல், புள்ளிவிபரவியல் தகவல்களை பரப்புதல், தேயிலை சபையின் வாசிகசாலையை முகாமை செய்தல் மற்றும் பராமரித்தல், கொள்வனவு செயற்பாடுகள், தேயிலை சபையின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து செயற்பாடுகள் ஆகிய செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இலங்கை தேயிலை சபையின் நிர்வாகசபை தொழிற்படுகின்றது.

2.6.1 ஊழியர்களின் பலம்

அட்டவணை 2.6.1: இலங்கை தேயிலை சபையின் தற்போதைய ஊழியர் பலம்

வகை	ஊழியர்களின் எண்+கை		மொத்தம்
	ஆண்	பெண்	
சிரேஷ்ட நிலை	4	2	6(2.2%)
மூன்றாம் நிலை	35	19	54(20.1%)
இரண்டாம் நிலை	54	90	144(53.8%)
முதற்படி நிலை	59	5	64(23.9%)
மொத்தம்	152(56.7%)	116(43.3%)	268(100%)

மூலம்: இலங்கை தேயிலை சபை

வரைபு 2.6.1: ஊழியர்களின் பாலினப் பரம்பல்



மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் 15 ஊழியர்கள் ஓய்வுபெறுதல் மற்றும் இடைவிலகல் காரணமாக தங்களது சேவைகளை இடைநிறுத்துகின்றனர். இதில், 15 ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறுவதுடன், 3 ஊழியர்கள் சுயவிருப்புடன் இடைவிலகுகின்றனர்.

2.6.2 பயிற்சித் திட்டங்கள்

நடப்பு ஆண்டுக்கான சர்வதேச பயிற்சித் திட்டங்கள் மற்றும் உள்ளூர் அணியியினைப் கட்டியெழுப்பும் பயிற்சித் திட்டங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் இருந்தும், சர்வதேச மற்றும் நாடளாவிய ரீதியில் பரவிய கோவிட் தோற்றுக் காரணமாக ஒழுங்குபடுத்த முடியாமல்போனது. இருந்தும், இணையத்தளம் மூலமான உள்ளூர் பயிற்சிப்பாசறைகளில் சில ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

அட்டவணை 2.6.2: ஊழியர் மட்டத்திலான உள்ளூர் பயிற்சித் திட்டங்கள்

வகை	பயிற்சிபெற்ற ஊழியர்களின்
சிரேஷ்ட நிலை	02
மூன்றாம் நிலை	08
இரண்டாம் நிலை	14
முதற்படி நிலை	03
மொத்தம்	27

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.7 உள்ளக தணிக்கைப் பிரிவு

தேயிலைத் தொழிற்துறையின் பங்குதாரர்களான, இலங்கை அரசு, தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலைப் பிரிவுத் தொழிலாளர்கள் மற்றும் இலங்கை மக்கள் ஆகியோரின் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்யும் வகையில், நிதியியல், நிர்வாக மற்றும் மனித வளங்களை வினைத்திறனான மற்றும் திறனான வகையில் ஒதுக்கீடு செய்யும் தொழிற்பாட்டினை முன்னெடுப்பதே உள்ளக தணிக்கைப்பிரிவின் பிரதான நோக்கமாகும். அபாய முகாமைத்துவம், கட்டுப்பாடு மற்றும் ஆளுமை தொழிற்பாடுகளை விருத்திசெய்து, மதிப்பீடு செய்யும் வகையிலான கட்டொழுங்கு முறைமையினால் இலங்கை தேயிலை சபையின் நோக்கங்களை அடைவதற்கான உதவிகளையும் வழங்குகின்றது.

நாட்டில் நிலவிய கோவிட் தொற்றுக் காரணமாக தணிக்கைக் குழுக் கூட்டமானது தேவைகளின் நிமிர்த்தம் அழைக்கப்பட்ட உரிய பிரிவின்/ அலுவலகங்களின் தலைமை அதிகாரிகளின் பங்களிப்புடன் ஒருதடவை நடந்தேறியது. கூட்டறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் வாரியத்துக்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், உரிய சரியான செயற்பாடுகளை உறுதிசெய்யும் வகையிலான பின்தொடர் கண்காணிப்புக்களும் மேற்கொள்ளப்படும்.

2.8 தகவல் தொழிநுட்பப் பிரிவு

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் தகவல் தொழிநுட்பப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதுடன், தேயிலைக் கட்டமைப்பின் அபிவிருத்திகள், POS கட்டமைப்பு ஆகியன நிறைவுசெய்யப்பட்டமை, நுவெரெலியா பிராந்திய அலுவலகத்தில் அனர்த்த முகாமைத்துவ மீளமைப்புக்கான தீர்வுகள் நிறுவப்பட்டமை ஆகிய பல்வேறு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன.

2.8.1 தேயிலைப் பெறுமதி சங்கிலிக் கட்டமைப்பு

பணிப்பாளர் வாரியமானது, முறையான தீர்மானங்களை எடுத்து, வாரியத்தினை சரியான பாதையில் வழிநடத்திச் செல்லும்வகையில் பெறுமதிச் சங்கிலிக் கட்டமைப்பு தொடர்பான மிகவும் துல்லியமான மற்றும் மேம்படுத்தப்பட்ட தரவுகளை பெறுவதற்குரிய வழிமுறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இருந்தும், திட்டமானது நாட்டில் நிலவிய கோவிட் தொற்றுக்காரணமாக, பெரும்பாலான ஒன்றுகூடல் நிகழ்வுகள் இணையத்தளம் வாயிலாக முன்னெடுக்கப்பட்டன. திட்டத்தின் ஆய்வுகள் மற்றும் திட்டமிடல் ஆகியன தொடர்பில் பின்னைய அவத்தைகளில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு, 2022 இல் கையொப்பமிடப்படும்.

2.8.2 இலங்கை தேயிலை சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை புதுப்பித்தல் - www.srilankateaboard.lk

தேயிலைத் தொழிற்துறையின் பாரம்பரியம் மற்றும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலும், இணைத்தள தேடல் தளத்தினை மேம்படுத்தல், பயனர் நட்பு, பொறுப்புத்தன்மை, தொலைபேசியினூடான இணையவழி, சிறந்த ஏற்பாடுகள், வினைத்திறனான வழிகாட்டல்கள் மற்றும் விரைவான தரவிறக்க வசதிகளுடன் உத்தியோகபூர்வ இணையத்தளமானது மீளமைக்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட திட்டமானது நாட்டில் நிலவிய கோவிட் தொற்றுக் காரணமாக தாமதமடைந்துள்ளதுடன், தற்போது உருவாக்கல் கட்டத்தினை எட்டியுள்ளது. இத்திட்டத்தினை 2021 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நிறைவுசெய்ய இலங்கை தேயிலை சபையினால் திட்டமிடப்பட்டுள்ளது.

2.8.3 நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டிலான வெற்றிகள்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில்,LK டொமெயின் பதிவகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட அரச நிறுவனங்களின் இணையத்தளங்களுக்கிடையேயான போட்டியில், சிறந்த இணையத்தளத்துக்கான வெண்கலப்பதக்கத்தினை இலங்கை தேயிலை சபை சுவீகரித்தது. இவ்வெற்றியானது, உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்காக, முதல் தடவையாக இலங்கை தேயிலை சபைக்குக் கிடைக்கப்பெற்றமையினால், இதுவொரு வரலாற்றியல் நிகழ்வாகக் கருதப்படுகின்றது. சிறந்த இணையத்தளத்துக்கான போட்டியானது LK டொமெயின் பதிவகத்தினால் 2009 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்படுவதுடன், இது பத்தாவது தடவையாகும். இன்று, நிறுவனங்களின் இணையத்தளங்களின் முதற்பக்கமானது மிகவும் கவர்ச்சிகரமானதாக அமைவது மிகவும் இன்றியமையாததாகும். BestWeb.lk போட்டியானது இணையத்தளங்களுக்கிடையிலான போட்டியாக அமைவதுடன், இலங்கையில் பிரபல்யமான இணையத்தளமாக விளங்குவதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது.



3.0 தொழிற்துறையின் சுயவிபரம்

சிலோன் தேயிலையின் வரலாற்றில் நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, உலகளாவிய ரீதியிலான கோவிட் – 19 தொற்றுக்காரணமாக மிகவும் சவால்மிக்கதொரு வருடமாக அமையப்பெற்றுள்ளதுடன் வரலாற்றில் இடம்பெறும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடுக்களுமில்லை. இக்கொடிய நோய்த்தொற்றுக் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்ததுடன், தேயிலைத் தொழிற்துறையும் வீழ்ச்சியைக்கண்டுள்ளது. இந்நோய்த்தொற்றின் பரவலை தடுக்கும் வகையில் அரசினால் அடிக்கடி பிரயாணக்கட்டுப்பாடுகள் மற்றும் ஊடரங்குச்சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் மிகவும் வீழ்ச்சியடைந்திருப்பினும், தேயிலைத் தொழிற்துறையினால் பல்வேறு சவால்களை வெற்றிகரமாக முகங்கொடுக்க முடிந்தது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, வருடாந்த தேயிலை உற்பத்தி 278.9 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்திருந்தது, எவ்வாறாயினும் கடந்த வருடத்தில் இக்காலத்துக்குரிய உற்பத்தி 300.12 மில்லியன் கிலோகிராம்களாக, 21.3 மில்லியன் கிலோகிராம்களினால் (7%) குறைவடைந்துள்ளது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் ஜனவரி தொடக்கம் திசம்பர் வரையான காலப்பகுதியிலான அதியுயர் உற்பத்தியானது 62 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டதுடன், இதே காலப்பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டில் 63 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டதுடன் 1% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த தாழ்நில உற்பத்தியானது 170 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டதுடன், கடந்த வருட 190 மில்லியன் கிலோகிராம் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 11% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

தேயிலை வகைகளின் அடிப்படையில், புராதன தேயிலை உற்பத்தியானது பிரதான கூறாக விளங்குவதுடன், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் 253 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டதுடன், இது கடந்த 2019 ஆம் ஆண்டு 274 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டது. கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறைவுற்ற ஆண்டில் 8% வீழ்ச்சி பதிவானது. அத்துடன், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமான சிதிசி தேயிலை உற்பத்தியிலும் 2% உயர்ச்சி பதிவானதுடன், இது மீளாய்வு வருடத்தில் 24 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டது. எவ்வாறாயினும், பச்சை தேயிலை உற்பத்தியானது கடந்த 2019 ஆம் ஆண்டு 2.6 மில்லியன் கிலோகிராம்களாக பதியப்பட்டதுடன், இது 2020 ஆம் ஆண்டில் 2 மில்லியன் கிலோகிராம்களாக, 23 % ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் நிலவிய கோவிட் தொற்றுக்காரணமாக பல்வேறு சவால்கள் நிறைந்த காலமாக விளங்கியது. இந்நோய்த்தொற்றினால் எதிர்பாராதவிதமாக பல்வேறு உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன், பாரிய பொருளாதார வீழ்ச்சிகளும் ஏற்பட்டன. எவ்வாறாயினும், சிலோன் தேயிலையின் சில விசேட அம்சங்களினால் இருள் மற்றும் அழிவுகள் காணப்பட்டபோதிலும் சிறப்பாக செயற்பட்டது. இந்நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் உலகப்புகழ்பெற்ற கூக்குரல் ஏலவிற்பனை முறைமையிலிருந்து டிஜிட்டல் தொழில்நுட்ப ஏலவிற்பனை முறைமைக்கு மாற்றமடைந்தது பிரதானமானதொரு வெற்றியாகும். தேயிலை விற்பனையில், நேரடியான கூக்குரல் ஏலவிற்பனை முறைமையானது 125 வருடங்களுக்கு மேல் பழமையானதாகும்.

இந்நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் தேயிலைத் தொழிற்துறையில் ஈடுபடும் மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிப்புக்குள்ளாகினர். இந்நோய்த்தொற்றுக்காரணமாக பெரும்பாலும் அனைத்து வாழ்வாதார தேயிலை வளர்ப்பாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குனர்களும் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். உலகில் பெரும்பாலான நாடுகள் இக்கொடிய நோய்த்தொற்றுப் பரவலை தடுக்கும்வகையில் நாட்டை முழுமையாக முடக்கத் தீர்மானித்ததுடன், இலங்கையும் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில், அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகளை முடக்கும் தீர்மானத்துக்கு வந்தது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப்பகுதியில், தேயிலை உற்பத்தியானது கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27% ஆல் குறைவடைந்ததுடன், இது இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் மேலும் குறைவடைந்தது.

எவ்வாறாயினும், மீளாய்வு வருடத்தின் நான்காவது காலாண்டில் 77.4 மில்லியன் கிலோகிராம் உற்பத்தியானதுடன், கடந்த 2019 ஆம் ஆண்டு அதே காலப்பகுதில் 67.1 மில்லியன் கிலோகிராம் உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த 2019 ஆம் ஆண்டின் காலாண்டினை விட, 2020 ஆம் ஆண்டின் காலாண்டில் 15% மான அதிகரிப்பினை அவதானிக்க முடிகின்றது.

எதிர்மறையான அம்சங்கள் மற்றும் ஏனைய உலகளாவிய சந்தைப் போக்குகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஒட்டுமொத்தமான கொழும்பு ஏலத்தின் தேயிலை சராசரி விலைகள் கடந்த வருடத்தில் கிலோகிராமிற்கு 3.07 அமெரிக்க டொலர்களிலிருந்து 3.39 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. ஆகவே, கொழும்பு தேயிலை ஏல விலைகள் கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 628.21 லிருந்து ரூபா 545.02 ஆகக் குறைவடைந்துள்ளது.

நிறைவுற்ற வருட காலத்தில் இலங்கையிலிருந்து 265,569 மெற்றிக்தொன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், இதனால் 230 பில்லியன் ரூபா (1.2 பில்லியன் அமெ. டொலர்கள்) வருமானம் ஈட்டப்பட்டது. சராசரி எப்ஓபி விலையாக கிலோகிராமுக்கு ரூபா 866.70 (4.67அமெ. டொலர்கள்) ஆக அமைந்தது. மீளாய்வு வருடத்தில் மொத்த ஏற்றுமதி கொள்ளளவில் (மீள்ஏற்றுமதிகளுடன்) 27,087 மெற்றிக்தொன் வீழ்ச்சிகள் பதியப்பட்டதுடன், ஏற்றுமதி வருமானமானது 10% ஆல் குறைவடைந்தது.

3.1 தேயிலைக்காணிகளைப் பகிர்ந்தளித்தல்

தற்போதைய நிலையில், இலங்கையில் 202,540 ஹெக்டயர் பரப்பில் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.இதில் அரசுத்துறையினரை (40%) விட தனியார்த்துறையினர் (60%) அதிகளவான காணி உரிமைகளை கொண்டுள்ளனர். பொருத்தமான காலநிலைத் தேவைகளை கவனத்திற்கொண்டு ஈர வலயத்திற்குட்பட்ட பகுதிகளில் அதிகளவில் பயிரிடப்படுவதுடன், நாட்டின் சில மாவட்டங்களில் மாத்திரம் தேயிலைப் பயிர்ச்செய்கை பரந்து காணப்படுகின்றது.

3.2 தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, தேசிய தேயிலை உற்பத்தியானது 300.1 மில்லியன் கிலோகிராம்களிலிருந்து 278.8 மில்லியன் கிலோகிராம்களாக குறைவடைந்தது. எவ்வாறாயினும், கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 மில்லியன் கிலோகிராம்களினால் (7 % வீழ்ச்சி) குறைவடைந்தது. இலங்கையில், தாழ் நாட்டுப் பகுதிகளில் தொகையளவிலான தேயிலை உற்பத்திகளுடன், வேறுபட்ட தரைத்தோற்ற உயரங்களில் தேயிலை உற்பத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடல் மட்டத்திலிருந்து 600 மீற்றர் வரையான எல்லையில் தேயிலை பயிரிடப்படுவதுடன், இது உறுதியான சுவை மற்றும் மணத்தினைக் கொண்ட தேயிலை வளரும் பகுதியாக கருதப்படுகின்றது. மேலும், உயர்நாட்டுப் பகுதிகளில் 1200 மீற்றருக்கு மேலான உயரங்களில் வளர்க்கப்படுவதுடன், அவை தனித்துவமான சுவை மற்றும் நறுமணத்தைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன.


இதனால், அதிகளவான வருமான மட்டங்கள் மற்றும் அதன் விளைவாக தேவை அதிகரிப்பும் அண்மைக்காலமாக பள்ளமான பகுதிகளில் வாழும் தேயிலைக்கான உந்துதலாக அமைகின்றன. மேலும், தாழ்நிலப்பகுதிகளில் வளரும் தேயிலையானது மொத்த தேசிய உற்பத்தியில், மூன்றில் இரண்டு பங்கிக்கு மேலான பங்கினைக் (61%) கொண்டுள்ளதுடன், ஏனைய அதியுயர் மற்றும் நடுத்தர உயரங்களில் வளரும் தேயிலைகள் முறையே, 22% மற்றும் 17% ஆகவும் அமைந்துள்ளன.

அட்டவணை 3.1: உயரத்தின் அடிப்படையிலான உற்பத்தி

உயரம்	உற்பத்தி (கி.கிராம்)•
உயர்	62,242,494
நடுத்தரம்	46,732,256
குறைவு	169,877,015
மொத்தம்	278,851,765

மூலம்: இலங்கை தேயிலை சபை

3.1 உயரத்தின் அடிப்படையில் உற்பத்திப் பங்குகள் (%)




மூலம்: இலங்கை தேயிலை சபை

3.2.1 மாதாந்த தேயிலை உற்பத்தி உற்பத்தி

வருடம் முழுவதுமாக ஒவ்வொரு மாதத்திலும், தாழ்நிலப்பகுதியிகளில் வலயத்தில் வளரும் தேயிலை வகைகளே தேசிய தேயிலை உற்பத்தியில் பாரிய பங்களிப்பினைச் செலுத்துகின்றன. இவ்வருடத்தில் அதியுயர் தேயிலை உற்பத்தி திசம்பர் மற்றும் மே மாதங்களிலும், மிகக்குறைந்த தேயிலை உற்பத்தி மார்ச் மாதத்திலும் பதிவாகின. மீளாய்வு வருடத்தில், அதியுயர் தேயிலை உற்பத்தியாக 29 மில்லியன் கிலோகிராம்களும், அதிகுறைந்த தேயிலை உற்பத்தியாக 14 மில்லியன் கிலோகிராம்களும் பதிவாகின. துரதிர்ஷ்டவசமாக, கோவித் 19 நோய்த்தொற்றுக்காரணமாக மார்ச் மாத நடுப்பகுதியில் நாடு முடக்கப்பட்டதுடன், சில மாதங்களுக்கு மூடப்பட்டது. இந்நிலைமைகளின் கீழ் மார்ச் மாதத்துக்குரிய தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்ததுடன், சில சந்தர்ப்பங்களில் அரசின் சுகாதார வழிகாட்டல்களுக்கமைவாக தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும், சில மாதங்களில் முன்னைய நிலைமைக்கு கொண்டுவரக்கூடியதாக அமைந்ததுடன், இதன் காரணமாக ஒட்டுமொத்தமான தேயிலை உற்பத்தியானது 7% ஆல் வீழ்ச்சியடைந்தது.

வரைபு 3.2.: உயரங்களின் அடிப்படையில் மாதாந்த தேயிலை உற்பத்தி



மூலம்: இலங்கை தேயிலை சபை

3.2.2 விவசாய காலநிலை மாவட்டங்களின் அடிப்படையிலான ஆய்வுகள்

அட்டவணை 3.2: கமநல காலநிலை மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்தி

கமநல காலநிலை மாவட்டம்	2020 (Kg.)	* 2019 (Kg.)	மாற்றம் (Kg.)	%
நுவரெலியா	2,858,604	3,224,893	(366,289)	(11)
மேல் மாகாணம்				
ரம்போடை	1,832,914	1,835,212	(2,298)	(0)
பூண்டுலோயா	3,564,815	3,757,804	(192,989)	(5)
அக்கரப்பத்தன	4,536,186	5,502,557	(966,370)	(18)
நானுஓயா/ லிந்துல/ தலவாக்கலை	8,062,390	9,014,602	(952,213)	(11)
பட்டன/ கொட்டக்கல	4,475,252	3,820,764	654,489	17
ஹற்றன்/ டிக்கோயா	7,844,983	7,353,296	491,688	7
பொஹோவந்தலாவ	5,612,580	5,729,970	(117,391)	(2)
அப்கொட்/ மஸ்கெலிய	5,049,048	5,792,133	(743,085)	(13)
மொத்த மேல் மாகாணம்	40,978,167	42,806,337	(1,828,171)	(4)
நடுத்தரம்				
வட்டவள/ கினிகத்தேன/ நோர்ட்டன்	2,163,883	1,602,682	561,201	35
புஸ்ஸல்லாவ/ ஹேவாஹெட்ட	6,005,389	6,136,278	(130,890)	(2)
கொத்மலே	876,354	821,148	55,207	7
கம்பொல/ நாவலப்பிட்டி	17,718,123	18,609,887	(891,764)	(5)
நிலம்பே/ ஹந்தானை/ ஹலஹா	1,447,513	1,582,180	(134,667)	(9)
கடுகண்ணாவை	4,642,927	5,851,934	(1,209,008)	(21)
மடுல்கலை/ நக்கல்ஸ்/ ரன்	3,383,210	3,698,221	(315,011)	(9)
ஹுன்னஸ்கிரிய/ மாத்தளை/ யக்தே	1,386,413	1,034,738	351,674	34
பலாங்கொடை/ இறக்குவானை	8,027,660	7,764,480	263,181	3
மொத்தம் - நடுத்தரம்	45,651,470	47,101,548	(1,450,077)	(3)
உடபுசல்லாவை				
உடபுசல்லாவை/ கல்கிரநோய்	3,944,295	3,493,639	450,656	13
மத்துரட்ட	935,085	1,851,921	(916,836)	(50)
மொத்தம் - உடபுசல்லாவை	4,879,380	5,345,560	(466,180)	(9)
ஊவா மாகாணம்				
கொஸ்லந்த/ ஹல்தமுள்ள	817,742	716,941	100,801	14
ஹப்புத்தளை	3,598,688	2,950,758	647,930	22
பண்டாரவளை/ பூனகல்ல	2,520,658	2,691,370	(170,713)	(6)
மல்வத்தை/ வெலிமட	2,858,823	3,085,071	(226,248)	(7)
தெமோதர/ காலிஎல/ பதுளை	9,543,215	8,605,150	938,064	11
எல்ல/நமுனுகல	1,737,631	1,461,490	276,141	19
பசற/லுனுகல	3,011,099	2,601,666	409,433	16
மதுள்சிமா	3,657,828	2,607,817	1,050,011	40
மொத்த - ஊவா	27,745,683	24,720,262	3,025,421	12
தாழ்நிலங்கள்				
தெனியாய	12,942,346	14,338,749	(1,396,402)	(10)
காலி	37,496,469	43,786,962	(6,290,493)	(14)
களுத்துறை	18,444,550	22,485,555	(4,041,005)	(18)
கேகாலை	6,439,832	7,037,251	(597,419)	(8)
களனிப் பள்ளத்தாக்கு	7,310,799	7,874,180	(563,381)	(7)

கண்டி/ மாத்தளை/ குருநாகல்	3,829,102	4,115,010	(285,908)	(7)
மாத்தறை	11,941,807	15,016,653	(3,074,845)	(20)
மொரவக்க	5,620,667	6,062,701	(442,034)	(7)
இரத்தினபுரி	47,734,905	51,055,836	(3,320,931)	(7)
பலாங்கொடை	4,977,985	5,149,175	(171,191)	(3)
மொத்தத் தாழ்நிலம்	156,738,462	176,922,070	(20,183,608)	(11)
மொத்தம்	278,851,765	300,120,670	(21,268,904)	(7)

*திருத்தியமைக்கப்பட்டது: மூலம்: இலங்கை தேயிலை சபை

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில், இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்கள் முறையே 48 மில்லியன் கிலோகிராம் மற்றும் 37 மில்லியன் கிலோகிராம் உற்பத்திகளுடன் தொடர்ந்தும் முதலிடங்களிலுள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முழு ஊவா விவசாய பிராந்தியத்திலும் உற்பத்திகள் அதிகரித்துள்ளதுடன், தாழ்நிலப்பகுதிகளிலான உப மாவட்டங்களில் உற்பத்திகள் குறைவடைந்துள்ளன. மீளாய்வு வருடத்தில் தாழ்நிலப்பகுதிகளில் ஒட்டுமொத்தமாக 156.7 மில்லியன் கிலோகிராம் உற்பத்தியானதுடன், இது கடந்த 2019 ஆம் ஆண்டு 176.9 மில்லியன் கிலோகிராமாக அமைந்தது.

3.2.3 மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்திகள்

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில், பிரதான உயர்நில தேயிலை உற்பத்தியானது நுவெரெலியா மாவட்டத்திலும், அதியுயர் தாழ்நில உற்பத்தியானது இரத்தினபுரி மாவட்டத்திலும் பதிவாகியதற்குரிய ஆதாரங்கள் காணப்படுகின்றன. இரண்டு மாவட்டங்களும் தேசிய தேயிலை உற்பத்தியில் முறையே, 16 % மற்றும் 22 % பங்களிப்புச் செலுத்துகின்றன. அனைத்து மூன்று உயரங்களிளுமான தேயிலை உற்பத்தியில் இரத்தினபுரி மாவட்டம் முன்னிலை வகிப்பதுடன், ஹம்பாந்தோட்டை மாவட்டம் மிகக்குறைவான தேயிலை உற்பத்தியை கொண்டுள்ளது.

அட்டவணை 3.3: மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்தி (கி.கிராம்)

நிருவாக மாவட்டம்	உயர்	நடுத்தரம்	குறைவு	மொத்தம்
	கொள்ளளவு Kg	கொள்ளளவு Kg	கொள்ளளவு Kg	கொள்ளளவு Kg
பதுளை	16,761,796	11,360,549	-	28,122,345
கொழும்பு	-	-	1,049,512	1,049,512
காலி	-	-	37,256,583	37,256,583
ஹம்பாந்தோட்டை	-	-	125,973	125,973
களுத்துறை	-	-	17,466,761	17,466,761
கண்டி	733,818	19,789,096	10,486,181	31,009,095
கேகாலை	-	244,929	9,282,363	9,527,292
மாத்தளை	-	1,681,986	315,197	1,997,183
மாத்தறை	-	67,827	30,976,390	31,044,216
மொனராகலை	-	-	-	-
நுவரெலியா	44,590,574	11,393,365	945,188	56,929,126
இரத்தினபுரி	156,307	2,194,505	61,972,868	64,323,680
மொத்தம்	62,242,494	46,732,256	169,877,015	278,851,765

மூலம்: இலங்கை சுங்கம்

3.2.4 பச்சை இலை சேகரிப்பு முறையின் அடிப்படையிலான உற்பத்தி

தொழிற்சாலைகள், தமக்குரிய தேயிலைத் தோட்டங்கள் அல்லது ஏனைய தேயிலைத்தோட்டங்கள் மற்றும் முகவர்களினூடாக சேகரிக்கப்படும் பச்சை இலைகளிலிருந்து மொத்த தேயிலை உற்பத்திகளை முன்னெடுக்கின்றன. நிறைவுற்ற 2019 ஆம் ஆண்டுக்கான, மாவட்ட மட்டத்திலான பச்சை இலை சேகரிப்பு முறையின் அடிப்படையிலான தேயிலை உற்பத்திகள் தொடர்பான தகவல்கள் கீழே அட்டவணை 3.4 இல் தரப்பட்டுள்ளன. நாம் பயன்படுத்தும் தேயிலை உற்பத்தியை 4.65 கிலோகிராமினால் பெருக்குவதன் மூலமாக நாம் பெற்றுக்கொண்ட பச்சை இலை உற்பத்தியை இக் கணக்கீடு குறிப்பதுடன், இதனை தேயிலை தொழிற்துறையில் ஒரு நிலையான சூத்திரமாகப் பயன்படுத்த முடியும்.

அட்டவணை 3.4. மாவட்ட மட்டத்திலான பச்சைத் தேயிலை உற்பத்திகள் (கிலோகிராம்)

நிர்வாக மாவட்டங்கள்	அதியுயர் அளவு (Kg)	நடுத்தரம் அளவு (Kg)	குறைவு அளவு (Kg)	மொத்தம் அளவு (Kg)
பதுளை	77,942,350	52,826,552	-	130,768,902
கொழும்பு	-	-	4,880,231	4,880,231
காலி	-	-	173,243,109	173,243,109
ஹம்பாந்தோட்டை	-	-	585,774	585,774
களுத்துறை	-	-	81,220,440	81,220,440
கண்டி	3,412,254	92,019,297	48,760,742	144,192,293
கேகாலை	-	1,138,920	43,162,988	44,301,908
மாத்தளை	-	7,821,234	1,465,666	9,286,900
மாத்தறை	-	315,393	144,040,212	144,355,605
மொனராகலை	-	-	-	-
நுவரெலியா	207,346,168	52,979,147	4,395,122	264,720,437
இரத்தினபுரி	726,828	10,204,446	288,173,837	299,105,111
மொத்தம்	289,427,599	217,304,990	789,928,121	1,296,660,709

மூலம்: இலங்கை தேயிலை சபை

3.2.5 செயலாக்க முறைமையின் அடிப்படையிலான உற்பத்தி ஆய்வுகள்

3.2.5.1 கறுப்பு மற்றும் பச்சைத்தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், புராதன தேயிலை உற்பத்திகள் 8% வீழ்ச்சியையும், சிதிசி தேயிலை உற்பத்திகள் 2% அதிகரிப்பையும் காட்டுகின்றன. மீளாய்வு வருடத்தில், ஒட்டுமொத்த கறுப்புத்தேயிலையின் உற்பத்தி 21 மில்லியன் கிலோகிராம்களினால் (7%) குறைவடைந்துள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பச்சைத் தேயிலையில் 23% மான வீழ்ச்சி பதிவாகியுள்ளது..

3.2.5.2 உடனடித் தேயிலை மற்றும் உயிரியல் தேயிலை உற்பத்தி

கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2020 ஆம் ஆண்டு உடனடித் தேயிலையின் உற்பத்தி 1,289 மெற்றிக்தொன்களினாலும், உயிரியல் தேயிலை உற்பத்தியானது 21 மெற்றிக்தொன்களினாலும் வீழ்ச்சியடைந்துள்ளன. விசேடமாக, தேயிலைத் தொழிற்சாலைகளில் பதியப்பட்ட தேயிலைகளில் 99% மான உடனடித் தேயிலைகள் மலைநாட்டு மேல்நில உற்பத்திகளை அடிப்படையாக்கொண்டவையாகும்.


3.2.6 உடன் தயாரிப்புத் தேயிலை உற்பத்திக்கான செலவுகள்

உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்திக்கான செலவு (COP) ஆகியன ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளதுடன், உற்பத்திச்செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே செல்லும் நிலையானது, பெருந்தோட்டத்துறைக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. தேயிலை உற்பத்தி அமைப்புக்கு அதிகளவான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதனால், தொழிலாளர் உற்பத்தித்திறன் COP உடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளில், இலங்கை அதியுயர் COP இனைக் கொண்டுள்ளது. இது, சர்வதேச அரங்கில், நாட்டின் போட்டித்திறனில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

கடந்த சில தசாப்தங்களாக, உருவாக்கப்பட்ட தேயிலையின், கிலோகிராமுக்கான உற்பத்திச்செலவு மிக வெகுவாக அதிகரித்தது. தொழிலாளர்களுக்கான செலவுகள் மற்றும் உள்ளீடுகளுக்கான அதிக செலவீனங்கள் ஆகியன உற்பத்திச்செலவுகளில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. கணக்கெடுப்புகள் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் வருடாந்த தேயிலை உற்பத்திக்கான செலவீனங்களின் தரவுகளுக்கமைய, 2019/20 இல், கிலோகிரமுக்கான உற்பத்திச்செலவு ரூபா 492.48 ஆக அமைந்ததுடன், இது கடந்த 2018/19 க்கு எதிராக 1.8% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

குறிப்பு: நாட்டில் நிலவிய கோவிட் நிலைமைகள் காரணமாக COP வினாப்பத்திரங்களுக்குரிய தகவல்களை திரட்டமுடியாத நிலை ஏற்பட்டது. ஆகவே, 2019/2020 ஆம் ஆண்டுகளுக்குரிய COP ஆனது கணிக்கப்பட்ட தரவுகளினால் காட்டப்பட்டுள்ளது.

வரைபு 3.3: உற்பத்திச் செலவு



மூலம்: கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

3.3 தேயிலை விற்பனைகள்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், தேயிலைத் தொழிற்துறைகளினால் உள்ளூர் தேயிலை விற்பனை விலைகளை, சிறப்பான வீதத்தில் பேணக்கூடியதாக அமைந்தது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், தேயிலைக்கான சராசரி விலைகள் கிலோகிராமுக்கு ரூபா 628.21 ஆகவும், இது கடந்த 2019 ஆம் ஆண்டில் கிலோகிராமுக்கு ரூபா 545.02 ஆகவும் அமைந்திருந்ததுடன், கிலோகிராமுக்கு ரூபா 83 அதிகரிப்பைக் கொண்டுள்ளது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் மாதாந்த தேயிலை விலைகள் கிலோகிராமுக்கு ரூபா 580 மற்றும் ரூபா 700 க்கிடையில் நிலவியது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், ஒவ்வொரு உயரங்களிலும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை அவதானிக்க முடிந்தது. அனைத்து மூன்று உயரங்களிலும், தாழ்நிலப்பகுதிகளில் வளரும் தேயிலைகளுக்கு, கிலோகிராமுக்கு ரூபா 666 என அதிகளவான விலைகள் வழங்கப்பட்டுள்ளதாக பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் வருடாந்த விற்பனை அளவுகள் 268.2 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்ததுடன், இது 2019 ஆம் ஆண்டு 301.9 மில்லியன் கிலோகிராம்களாக, அரச, தனியார் மற்றும் நேரடி விற்பனைகள் உள்ளடங்களாக 34 மில்லியன் கிலோகிராம்களினால் (11%) குறைவடைந்துள்ளது.

3.3.1 விற்பனைகளின் முறை

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைகளுக்கான பிரதானமான விற்பனை முறையாக பொதுமக்களுக்கான ஏலங்கள் காணப்படுகின்றன. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் கொழும்பு தேயிலை ஏலத்தின் கீழ், 261.7மில்லியன் கிலோகிராம் தேயிலை விற்பனையாகியது. இதில், தனியார் விற்பனைகளினூடாக, 5 மில்லியன் கிலோகிராம் தேயிலையும், நேரடி விற்பனைகளினூடாக மிகுதியான ஏறக்குறைய 1.5 மில்லியன் கிலோகிராம் தேயிலைகளும் விற்பனையாகின.

3.3.2 கொழும்பு தேயிலை ஏலங்கள்

கொழும்பு தேயிலை ஏலமானது, கொழும்பு தேயிலை வர்த்தக சங்கத்தின் கீழ், சிலோன் வர்த்தக அமைப்பினூடாக நடாத்தப்படுகின்றது. இதனடிப்படையில், 2020 இல் 51 ஏலங்கள் முன்னெடுக்கப்பட்டன. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், கொழும்பு ஏலத்திலான பொது ஏலத்தில் தேயிலை 32 மில்லியன் கிலோகிராமினால் (11%) வீழ்ச்சியடைந்துடன், கொழும்பு தேயிலை ஏலத்தில் கிலோகிராமுக்கான விலை ரூபா 85 ஆல் குறைவடைந்ததாக பதியப்பட்டுள்ளது.

3.3.3 உயரங்களின் அடிப்படையில் விற்பனைகள்

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், அனைத்து மூன்று உயரங்களிலும் உற்பத்தியாகும் தேயிலைகளின் அலகுக்குரிய விலைகளில் அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன், கொள்ளளவுகளில் எதிர்மறையான வளர்ச்சியையே அவதானிக்க முடிந்தது.

அட்டவணை 3.5: உயரங்களின் அடிப்படையில் விற்பனைகள்

உயரம்	அளவு (மில்லியன் கி.கிராம்)			
	2019	2020	மாற்றம்	%
உயர்	59.97	56.46	(3.51)	(5.85)
நடுத்தரம்	52.14	47.56	(4.58)	(8.78)
குறைவு	189.81	164.21	(25.60)	(13.49)
மொத்த விற்பனைகள் Q	301.92	268.24	(33.68)	(11.16)
	அலகுக்கான விலை (ரூபா/கி.கிராம்)			
உயர்	509.4	580.90	71.50	14.04
நடுத்தரம்	470.96	554.28	83.32	17.69
குறைவு	576.62	665.88	89.26	15.48
மொத்த விற்பனைகள் P	545.02	628.21	83.19	15.26


மூலம்: விற்பனை அறிக்கை - உயரங்களின் அடிப்படையில் விற்பனைகள் - இலங்கை தேயிலை சபை

3.4 தேயிலை ஏற்றுமதிகள்

மீளாய்வு வருடத்துக்கான, தேயிலை ஏற்றுமதிகள் (மீள் ஏற்றுமதியுடன்) 265.6 மில்லியன் கிலோகிராம்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கடந்த 2019 ஆம் வருடத்துடன் (292.7 மில்லியன் கிலோகிராம்) ஒப்பிடுகையில் 27 மில்லியன் கிலோகிராம்களினால் வீழ்ச்சியடைந்துள்ளது. நிறைவுற்ற வருடத்தில் மொத்த வருமானமாக 230.2 பில்லியன் ரூபா பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கடந்த 2019 ஆம் வருடத்தில் ஜனவரி தொடக்கம் திசம்பர் வரையான காலப்பகுதியிலான வருமானத்துடன் (240.6 பில்லியன் ரூபா) ஒப்பிடுகைகளில் 10 பில்லியன் ரூபாய்களினால் வீழ்ச்சிடைந்துள்ளது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், சராசரி வருடாந்த அலகு FOB விலை, கிலோகிராமுக்கு ரூபா 866.70 ஆக அமைந்ததுடன், இது கடந்த 2019 ஆம் ஆண்டில் கிலோகிராமுக்கு ரூபா 822.25 ஆக அமைந்ததுடன், இவ்வாண்டில் கிலோகிராமுக்கு ரூபா 44 அதிகரிப்பைக் காட்டுகின்றது. சர்வதேச தேயிலைச் சந்தையில், இலங்கை ,கொள்ளவுகளின் அடிப்படையில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளதுடன், மூன்றாவது வருமானம் ஈட்டும் நாடாகவும் விளங்குகின்றது. இது சர்வதேச சந்தைக்கு அதியுயர் – தரத்திலான தேயிலையை வழங்குவதில் மலரும் திறனைக் காட்டுகின்றது.

போட்டியாளர்களிடமிருந்தான கடுமையான போட்டித்தன்மையினால், நாட்டின் போட்டி நிலையில் மிகவும் மோசமாக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் தேயிலைக்கான அதிக உற்பத்திச்செலவு மற்றும் மந்தமான விளைச்சலினால் இந்நிலைமை மேலும் அதிகரித்துள்ளது. இதே நிலையில், நாடு தொடர்ச்சியாக பாரம்பரியமான தேயிலையில் தங்கியிருப்பதனால் நுகர்வோர் மத்தியில் வேகமாக மாறிவரும் விருப்பங்களுக்கிடையில் தொடர்ந்தும் சிதிசி தேயிலைகளுக்கான சந்தைப்பங்குகளை அரிவடையச் செய்வதாக அமையக்கூடும்.

வரைபு 3.4 : மாதாந்த மொத்த தேயிலை ஏற்றுமதி அளவுகள் மற்றும் FOB விலைகள்



மூலம்: இலங்கை சுங்கம்

3.4.1 வருடாந்த தேயிலை ஏற்றுமதிகள் - 2020

அட்டவணை 3.6: மாதாந்த மொத்த தேயிலை ஏற்றுமதிகள் – 2020 – அளவுகள் மற்றும் அலகுக்கான விலை

பொதிகள்	2020 ஆம் ஆண்டு திசம்பர் இறுதியில்		
	அளவு (கிலோகிராம்)	பெறுமதி (ரூபா)	□□□ (ரூபா/கி.கி)
ஏற்றுமதிகள்			
கறுப்பு			
பைகள்	18,327,423	27,369,531,704	1,493.36
தொகை	116,960,915	88,079,515,543	753.07
பொதிகள் (1கி.கி -3 கி.கி)	1,017,975	752,398,948	739.11
பொதிகள் (3 கி.கி -5 கி.கி)	18,296,831	14,471,722,027	790.94
பொதிகள் (4 கிராம்-1 கி.கி)	69,872,720	62,208,072,325	890.31
பொதிகள் (5 கி.கி -10 கி.கி)	27,301,825	17,741,677,418	649.83
கறுப்பு மொத்தம்	251,777,689	210,622,917,965	836.54
பச்சை			
பைகள்	752,051	2,244,893,392	2,985.03
தொகை	358,143	425,770,040	1,188.83
பொதிகள் (1கி.கி -3 கி.கி)	3,395	5,857,434	1,725.16
பொதிகள் (3 கி.கி -5 கி.கி)	5,674	12,359,438	2,178.26
பொதிகள் (4 கிராம்-1 கி.கி)	847,413	1,379,710,035	1,628.14
பொதிகள் (5 கி.கி -10 கி.கி)	20,307	39,335,283	1,937.01
பச்சை மொத்தம்	1,986,984	4,107,925,622	2,067.42
உடனடி			
பைகள்	-	-	-
பொதிகள் (>3 கி.கி)	2,810,033	4,065,717,121	1,446.86
பொதிகள் (4 கிராம்-1 கி.கி)	500	775,924	1,551.85
உடனடி மொத்தம்	2,810,533	4,066,493,045	1,446.88
மீள் ஏற்றுமதிகள்			
மீள் ஏற்றுமதி	8,994,167	11,372,582,174	1,264.44
கறுப்பு			
பைகள்	3,845,312	4,471,520,029	1,162.85
தொகை	1,289,680	875,459,151	678.82
பொதிகள் (1கி.கி -3 கி.கி)	80	662,173	8,244.19
பொதிகள் (3 கி.கி -5 கி.கி)	46,181	125,766,527	2,723.36
பொதிகள் (4 கிராம்-1 கி.கி)	1,586,820	1,500,140,903	945.38
பொதிகள் (5 கி.கி -10 கி.கி)	54,099	73,082,603	1,350.90
கறுப்பு மொத்தம்	6,822,172	7,046,631,386	1,032.90
பச்சை			
பைகள்	1,058,091	3,020,833,943	2,854.99
தொகை	224,204	173,995,261	776.06
பொதிகள் (1கி.கி -3 கி.கி)	3,784	4,798,516	1,268.19
பொதிகள் (3 கி.கி -5 கி.கி)	53	27,651	518.78
பொதிகள் (4 கிராம்-1 கி.கி)	818,251	1,044,103,045	1,276.02
பொதிகள் (5 கி.கி -10 கி.கி)	35,006	41,754,316	1,192.78
பச்சை மொத்தம்	2,139,389	4,285,512,732	2,003.15

உடனடி			
பைகள்	158	308,556	1,952.89
பொதிகள் (>3 கி.கி)	32,448	40,129,500	1,236.74
உடனடி மொத்தம்	32,606	40,438,056	1,240.21
இறுதி மொத்தம்	265,569,374	230,169,918,806	866.70
RTD	1,809	4,292,047	2,371.97

மூலம்: இலங்கை சுங்கம்

3.4.2 வகைகளின் அடிப்படையில் தேயிலை ஏற்றுமதி ஆய்வுகள்

பொதுவாக, தேயிலைக்கான விருப்பத்தேர்வுகள், இலைகளின் தோற்றம் மற்றும் அவற்றின் தரத்தினைப் கொண்டு கணிசமானளவு வேறுபடுகின்றன. உதாரணமாக, மத்திய கிழக்கு மற்றும் சிஐஎஸ் நாடுகள் முதன்மையாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தாழ்நிலை, பாரம்பரியமான, வலுவான சுவையுள்ள தேயிலையில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், கறுப்பு, பசுமை மற்றும் உடனடி தேயிலை வகைகளிலான மீள்ஏற்றுமதி உள்ளடங்களாக மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் அளவுகள் மற்றும் பெறுமதிகள் ஆகிய இரண்டிலும் அதிகரிப்புகள் அவதானிக்கப்பட்டன. பொதுவாக ஒவ்வொரு வருடமும், கறுப்பு தேயிலையின் ஏற்றுமதி சதவீதம் 97% ஆகவும், பச்சைத் தேயிலையின் சதவீதம் 2% ஆகவும் மிகுதியான 1% சதவீதம் உடனடி தேயிலையுமாக அமையப்பெற்றன.

மொத்த ஏற்றுமதியானது கொள்ளளவில் 27 மில்லியன் கிலோகிராம் குறைவுடன் 9% வீழ்ச்சியைக் காட்டுகின்றது. மேலும், ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி ஆகிய இரண்டும் அவற்றின் கொள்ளளவுகள் மற்றும் பெறுமதிகளில் வீழ்ச்சிகளைக் காட்டுகின்றன. ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி அளவுகள் முறையே 9% மற்றும் 8% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அவற்றின் பெறுமதிகளும் முறையே, 4% மற்றும் 11% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த ஏற்றுமதி வருமானமானது 1,240 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்ததுடன், இது 2019 ஆம் ஆண்டில் 1,346 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்ததுடன், 8% மான வீழ்ச்சியைக் காட்டுகின்றன.

3.4.3 பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள்

சர்வதேச ரீதியில் இலங்கைத் தேயிலையின் பாரம்பரிய சந்தை நிலையினைப் பேணும் வகையில், மிக விரைவாக மாறுபடும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கான சர்வதேச விருப்பங்களுக்கு ஏற்றாற்போல இசைவாக்கப்படுதல் மிகவும் அவசியமாகும். ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக மூன்று கிலோகிராமுக்குக் குறைவான, பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைகள் பொதிகள், பைகள் மற்றும் உடனடித் தேயிலைகளாகக் தயாரிக்கப்படுவதுடன், இவை நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதிப் பங்குகளில் 38 % ஐக் கொண்டுள்ளதுடன், 108 பில்லியன் ரூபா ஏற்றுமதி வருமானத்தையும் ஈட்டியது. இது பெறுமதிப் பங்குகளில் 47 % ஆகும்.


அட்டவணை 3.7: வருடாந்த பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள் – 2020

ஏற்றுமதி வகை		அளவு (கி.கிராம்)	பெறுமதி (ரூபா)	எப்ஓபி (ரூபா/கி.கி)
ஏற்றுமதி	கறுப்பு	89,218,119	90,330,002,977	1,012.46
	பச்சை	1,602,860	3,630,460,861	2,264.99
	உடனடி	2,810,533	4,066,493,045	1,446.88
பகுதி மொத்தம்		93,631,512	98,026,956,883	1,046.94
மீள் ஏற்றுமதி	கறுப்பு	5,432,212	5,972,323,105	1,099.43
	பச்சை	1,880,125	4,069,735,504	2,164.61
	உடனடி	32,606	40,438,056	1,240.21
பகுதி மொத்தம்		7,344,943	10,082,496,665	1,372.71
மொத்தம்		100,976,455	108,109,453,548	1,070.64

மூலம்: இலங்கை சுங்கம்

தொகை மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கான FOB விலைகள் கீழே வரைபில் தரப்பட்டுள்ளன. மொத்தத் தேயிலையை விட, பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கான பொப் (FOB) விலைகள் அதிகமாகும். மேலும், மொத்தத் தேயிலை ஏற்றுமதியை விட, பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியானது, இலங்கையின் பொருளாதரத்தில் நேரான பங்களிப்பினை ஏற்படுத்தும். இவ் ஆண்டிலான மீளாய்வின் போது, பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைகளின் பொப் (FOB) விலைகளில் விருத்திகள் ஏற்பட்டுள்ளதையும், மற்றும் தொகைத் தேயிலை விலைகளில் வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. ஏற்றுமதி வகைகளில், 3 கிலோகிராம் வரைக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைகளாக கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

வரைபு 3.5 : பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகள் மற்றும் தொகை தேயிலை ஏற்றுமதிகள்



மூலம்: இலங்கை சுங்கம்

3.4.4 இலங்கை தேயிலை ஏற்றுமதிகளுக்கான பிரதான இடங்கள்

கடந்த காலங்களில், இங்கிலாந்து, பாக்கிஸ்தான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் சிலோன் தேயிலைக்கான சந்தை ஒப்பீட்டளவில் அதிகளவில் காணப்பட்டது. தற்போதைய நிலையில், துரதிர்ஷ்டவசமாக அவை எதுவும் முதன்மையான 25 ஏற்றுமதி நாடுகளின் பட்டியலில் இடம்பெறவில்லை. எவ்வாறாயினும், துருக்கியின் மொத்த தேயிலை இறக்குமதியில் 14.6% சிலோன் தேயிலை உள்ளடங்குவதன் மூலமாக, இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் 2020 ஆம் ஆண்டுக்குரிய பட்டியலில் துருக்கி மீண்டும் முதலிடத்தைப் பிடித்ததுடன், கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.5% வீழ்ச்சியடைந்துள்ளதாக பதியப்பட்டுள்ளது. கடந்த 2017 ஆம் ஆண்டிலும் துருக்கி 13.09% சிலோன் தேயிலை இறக்குமதி செய்து, சிலோன் தேயிலைக்கான மிகப்பெரிய இறக்குமதி நாடாக விளங்கியது. பின்னர், கடந்த 2018 ஆம் ஆண்டு துருக்கியை பின்தள்ளி ஈராக் முதலிடத்தைப் பிடித்தது. எவ்வாறாயினும், கடந்த 2019 ஆம் ஆண்டு 39 மில்லியன் சிலோன் தேயிலையை இறக்குமதி செய்ததனூடாக, துருக்கி மீண்டும் முதலிடத்தை தனதாக்கிக்கொண்டதுடன், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டிலும், அதே முதலிடத்திலேயே திகழ்ந்தது.

கடந்த 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், சிலோன் தேயிலையின் முதன்மையான ஏற்றுமதியாளராக ரஷ்யா விளங்கியது. ஆனால், சிலோனின் தேயிலைக்கான துருக்கியின் கேள்வி அதிகரித்தமையாலும், அரசியல் மற்றும் பொருளாதார தளம்பல் நிலைகளினாலும், ரஷ்யா 2014 இல் ஏற்றுமதி அளவுகளின் அடிப்படையில் இரண்டாவது பெரிய ஏற்றுமதி இடமாக மாறியது. பின்னர், மீண்டும் 2015 இல் ரஷ்யா முதலாவது ஏற்றுமதி இடமாக மாறியதுடன், 2016 லும் அதே நிலையை தக்கவைத்துக் கொண்டது. எவ்வாறாயினும், 2017 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில், சிலோன் தேயிலை இறக்குமதியில் ரஷ்யா மூன்றாம் இடத்தில் காணப்பட்டதுடன், ஈராக், ரஷ்யாவை பின்தள்ளி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, 13% மான ஏற்றுமதிப்பங்குகளுடன் ஈராக் இரண்டாவது ஏற்றுமதி இடமாக விளங்கியதுடன், இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 13% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, முதல் பத்து நாடுகளில் ஈரானின் சராசரி FOB விலைகள் அதிகளவில் விளங்கியதுடன், ஒரு கிலோகிராமுக்கு ரூபா 915 ஆக அமைந்தது. அதேசமயம், கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு முதல் பத்து நாடுகளில், ரஷ்யா, சீனா, சிலி ஆகியன தங்களது இறக்குமதிகளில் சிலோன் தேயிலையின் பங்கினை அதிகரித்ததுடன், துருக்கி, ஈராக், ஈரான், அசர்பைஜான், சிரியா, ஐ.அ.இராட்சியம் மற்றும் லிபியா ஆகிய நாடுகள் தேயிலை இறக்குமதிகளில் சிலோன் தேயிலையின் பங்குகளைக் குறைத்துள்ளன. எவ்வாறாயினும், கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், சிலோன் தேயிலைக்கான முதல் பத்து இறக்குமதி நாடுகளில் இறக்குமதிகள் 8% ஆல் குறைவடைந்துள்ளன.

அட்டவணை 3.8: இலங்கை தேயிலை ஏற்றுமதியின் பிரதான இடங்கள்- 2020

நாடு	2020				2019				
	நிலை	அளவு(கி.கி)	FOB (ரூபா/ கி.கி)	ஏற்றுமதிப் பங்கு (%)	நிலை	அளவு(கி.கி)	FOB (ரூபா/ கி.கி)	ஏற்றுமதிப் பங்கு (%)	வளர்ச்சி (%)
துருக்கி	1	38,866,312	796.55	14.64	1	39,087,245	739	13.36	(0.57)
ஈராக்	2	33,377,320	575.54	12.57	2	38,408,064	520	13.12	(13.10)
ரஷ்யா	3	29,608,373	825.16	11.15	3	29,068,027	821	9.93	1.86
ஈரான்	4	15,127,067	914.63	5.70	4	22,263,830	811	7.61	(32.06)
சீனா	5	14,123,418	754.71	5.32	6	11,870,397	756	4.06	18.98
அசர்பைஜான்	6	10,303,102	909.69	3.88	7	11,721,185	808	4.01	(12.10)
சிரியா	7	9,536,804	879.75	3.59	8	10,985,901	888	3.75	(13.19)
சிலி	8	9,419,055	714.04	3.55	12	7,231,265	631	2.47	30.25
ஐ.அ.இ	9	8,670,346	804.95	3.26	9	9,901,241	723	3.38	(12.43)
லிபியா	10	7,806,247	692.20	2.94	5	12,329,315	661	4.21	(36.69)
முதல் 10 மொத்தம்		176,838,044	768.87	66.59		192,866,470	720	65.90	(8.31)
இறுதி மொத்தம்		265,569,374	866.70	100.00		292,657,282	822	100.00	(9.26)

மூலம்: இலங்கை சுங்கம்

ஈரான் மற்றும் அசர்பைஜான் ஆகிய நாடுகள் சராசரி FOB உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு அதிகளவான FOB ஐ கொண்டுள்ளன. மேலும், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு மொத்த ஏற்றுமதி வருமானம் ரூபா 230 பில்லியனைத் தாண்டியுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதன் வருமானம் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், இலங்கை மொத்த தேயிலை ஏற்றுமதிகள் அதிகளவில் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கியதாக அமைவதுடன், எனைய நாடுகள் சிறிய தேயிலைப் பைகளை அதிகளவில் இறக்குமதி செய்கின்றன.

அட்டவணை 3.9 : பொதி வகைகளின் அடிப்படையில் தேயிலை ஏற்றுமதிகளின் அளவுகள் மற்றும் முதல் 20 இடத்திலுள்ள நாடுகள்

நாடு	அளவு (கிலோகிராம்)							நிலை						
	பைகள்	தொகை	பொதிகள் (>3□□)	பொதிகள் (1□□-3□□)	பொதிகள் (3□□-5□□)	பொதிகள் (4□-1□□)	பொதிகள் (5□□-10□□)	பைகள்	தொகை	பொதிகள் (>3□□)	பொதிகள் (1□□-3□□)	பொதிகள் (3□□-5□□)	பொதிகள் (4□-1□□)	பொதிகள் (5□□-10□□)
துருக்கி	96,149	3,652,657	-	176,775	1,657,550	14,337,911	13,456,279	16	11	11	3	3	1	1
அமெரிக்கா	12,995	9,168,337	-	25,136	9,225	399,303	5,512,070	19	5	11	7	14	15	2
சிலி	285,997	9,729,081	469	308,402	11,528,894	13,784,316	3,229,153	11	3	8	1	1	2	3
ஜோர்தான்	293,252	11,696,795	352,702	56,256	9,388	130,738	1,584,287	10	2	1	5	13	18	4
ரஷ்யா	285,320	5,678,863	9	4,834	39,993	1,541,597	1,119,730	12	7	10	8	8	11	5
ஜப்பான்	716,911	4,557,582	11,595	-	48,500	47,951	228,986	8	8	5	12	7	20	6
ஜப்பான்	72,167	3,902,383	20,178	-	190,894	100,613	217,799	17	10	4	12	4	19	7
தாய்வான்	697,199	562,572	-	94,500	4,442,145	3,528,054	212,335	9	17	11	4	2	5	8
ஐ.அ.இராட்சியம்	218,246	3,295,285	-	-	1,300	945,883	96,020	13	12	11	12	15	12	9
சிரியா	161,601	4,091,124	124,925	26	10	2,013,173	40,289	14	9	2	11	16	9	10
ஈரான்	1,934,798	306,760	-	-	-	2,410,082	28,440	2	19	11	12	17	7	11
சவூதி அரேபியா	860,987	24,016,245	-	747	11,615	4,701,816	16,964	7	1	11	10	11	4	12
ஜேர்மனி	1,029,829	2,610,337	27,218	926	14,336	2,016,318	8,380	5	14	3	9	10	8	13
ஈராக்	1,258,461	1,140,004	-	-	-	572,526	7,310	4	16	11	12	17	14	14
லிபியா	1,004,751	324,147	2,291	-	-	1,559,563	5,400	6	18	6	12	17	10	15
உக்கிரேன்	99,764	3,178,073	-	213,860	59,526	208,205	3,289	15	13	11	2	6	17	16
கொங்கொங்	1,970,449	1,745,200	120	35,290	141,655	2,910,012	1,501	1	15	9	6	5	6	17
போலந்து	12,994	9,673,819	-	-	28,580	587,470	240	20	4	11	12	9	13	18
அசர்பைஜான்	28,188	-	-	-	-	7,778,059	-	18	20	11	12	17	3	19
நெதர்லாந்து (கொலன்ட்)	1,632,425	7,548,443	1,085	-	10,800	226,302	-	3	6	7	12	12	16	19

மூலம்: இலங்கை சுங்கம்

3.4.4.1 கறுப்புத் தேயிலை ஏற்றுமதிகள்

மொத்த தேயிலை ஏற்றுமதியில் கறுப்புத் தேயிலையானது 97% (259 மில்லியன் கிலோகிராம்) ஆகப் பதியப்பட்டுள்ளதுடன், மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 94% (ரூபா 218 பில்லியன்) பங்களிப்புச் செலுத்துகின்றது. கறுப்புத் தேயிலை ஏற்றுமதி அனைத்து இடங்களிலும், முதல் இருபது இடங்களிலுள்ள நாடுகள் அளவுகள் மற்றும் பெறுமதிகளின் அடிப்படையில் முறையே 86% மற்றும் 83% பங்குகளைக் கொண்டுள்ளன. இலங்கை தேயிலையின் பிரதான இறக்குமதியாளராக 2013 ஆம் ஆண்டு வரைக்கும் ரஷ்யா திகழ்த்ததுடன், கடந்த 2014 ஆம் ஆண்டில் துருக்கி, அதியுயர் கறுப்புத் தேயிலை இறக்குமதிகளுடன் முதலாம் இடத்தைப் பிடித்தது. பின்னர், கடந்த 2015 ஆம் ஆண்டில், 35.74 மில்லியன் கிலோகிராம் தேயிலைகளை இறக்குமதி செய்ததன் மூலமாக, இலங்கையின் கறுப்புத் தேயிலையை இறக்குமதியாளராக (11.9%) ரஷ்யா மீண்டும் முதலிடத்துக்கு வந்தது. எவ்வாறாயினும், கடந்த 2016 ஆம் ஆண்டில், 33.90 மில்லியன் கிலோகிராம் (12%) கறுப்புத் தேயிலைகளை இறக்குமதி செய்வதன் ஊடாக ஈரான் முதலிடத்தைப் பிடித்தது. பின்னர், 2017 ஆம் ஆண்டில், கறுப்புத் தேயிலைகளை இறக்குமதியில் 13.41% மான கொள்ளளவுப் பங்குகளுடன் துருக்கி முதலிடத்தைப் பிடித்தது. மேலும், கடந்த 2019 ஆம் ஆண்டு 39.05 மில்லியன் கிலோகிராம் கறுப்புத் தேயிலையை இறக்குமதி செய்ததனூடாக மீண்டும் துருக்கி முதலிடத்துக்கு வந்தது. எவ்வாறாயினும், மீளாய்வு வருடத்தில், கறுப்புத் தேயிலை இறக்குமதியில் 38.8 மில்லியன் கிலோகிராம்களுடன் துருக்கி தொடர்ந்தும் முதலிடத்திலுள்ளது.

அட்டவணை 3.10: முதன்மையான 20 கறுப்புத்தேயிலை ஏற்றுமதி இடங்கள் மற்றும் சந்தைப்பங்குகள் 2020 (மீள்ஏற்றுமதியுடன்)

நாடு	அளவு (மில்.கி.கி)	பெறுமதி (ரூபா.பில்)	FOB (ரூபா/ கி.கி)	அளவு பங்கு (%)	பெறுமதி பங்கு (%)	அளவு வளர்ச்சி (%)
துருக்கி	38.83	30.91	796.02	15.01	14.20	(0.58)
ஈராக்	33.36	19.18	574.87	12.90	8.81	(13.08)
ரஷ்யா	29.03	23.51	809.90	11.23	10.80	2.60
ஈரான்	15.12	13.83	914.45	5.85	6.35	(32.05)
சீனா	13.72	10.16	740.62	5.31	4.67	19.74
அசர்பைஜான்	10.29	9.35	908.58	3.98	4.30	(12.17)
சிரியா	9.53	8.39	879.65	3.69	3.85	(13.20)
சிலி	9.36	6.60	705.07	3.62	3.03	30.71
ஐக்கிய அரபு எமிரேட்ஸ்	8.50	6.81	800.39	3.29	3.13	(9.82)
லிபியா	7.58	5.26	694.36	2.93	2.42	(38.05)
சவூதி அரேபியா	6.59	8.27	1,254.79	2.55	3.80	(1.59)
ஜேர்மனி	6.24	5.80	930.00	2.41	2.67	(12.07)
ஜப்பான்	5.60	5.59	999.18	2.16	2.57	(25.67)
அமெரிக்கா	5.20	4.68	901.27	2.01	2.15	(18.87)
ஜோர்தான்	4.66	4.67	1,002.22	1.80	2.15	(9.54)
தாய்வான்	4.39	3.48	792.00	1.70	1.60	(9.18)
உக்ரைன்	4.14	3.88	935.71	1.60	1.78	(9.10)
கொங்கொங்	3.76	2.79	741.69	1.45	1.28	0.51
போலந்து	2.84	3.46	1,215.53	1.10	1.59	(14.75)
நெதர்லாந்து (கொலன்ட்)	2.60	3.14	1,207.15	1.01	1.44	(14.65)
முதல் 20 மொத்தம்	221.34	179.75	812.08	85.59	82.58	(9.04)

மூலம்: இலங்கை சுங்கம்

கறுப்புத் தேயிலை ஏற்றுமதியில் ஈடுபடும் முதல் பத்து நாடுகள் தங்களது அளவுப்பங்கினை 5% - 15% க்கிகிடையில் பேணுகின்றன.

3.4.4.2 பச்சைத் தேயிலை ஏற்றுமதிகள்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் 2% (4.1 மில்லியன் கிலோகிராம்) பச்சைத் தேயிலையைக் கொண்டுள்ளதுடன், இது ஏற்றுமதி வருமானத்தில் 4 % (ரூபா 8.4 பில்லியன்) ஆக அமைந்துள்ளது. அனைத்து பச்சைத் தேயிலை ஏற்றுமதி இடங்களில், முதல் இருபது இடங்களிலுள்ள அமைவிடங்களில் அளவுகள் மற்றும் பெறுமதிகள் முறையே 82% மற்றும் 79% பங்களிப்பினை செலுத்துகின்றன. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், பச்சைத் தேயிலையின் முதன்மை நிலைகளிலுள்ள இருபது இறக்குமதியாளர்களைத் தவிர, ரஷ்யா 0.6 மில்லியன் கிலோகிராம்களாக குறிப்பிடத்தக்க அளவினைக் கொண்டுள்ளதுடன், ஐக்கிய இராட்சியம், அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து ஆகியன அதிக FOB விலைகளைக் கொண்டுள்ளன. இல்லாவிடில், லிபியா மாத்திரம் குறைவான FOB விலைகளைக் கொண்டிருக்கையில் ஏனைய அனைத்து இருபது நாடுகளிலும் அதிக விலைகளை கொண்டுள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாய்வு வருடத்தில் அனைத்து முதல் 20 இடங்கலுக்குமான பச்சைத் தேயிலை ஏற்றுமதிகளில் வீழ்ச்சிகள் பதிவாகியுள்ளன.

அட்டவணை 3.11 : 2020 இல் பச்சைத் தேயிலை ஏற்றுமதிக்கான முதன்மையான 20 இடங்கள்

நாடு	அளவு (மில். கி.கி)	பெறுமதி (ரூபா.பில்)	FOB (ரூபா/கி.கி)	அளவு பங்கு (%)	பெறுமதி பங்கு (%)	அளவு வளர்ச்சி (%) (19VS20)
ரஷ்யா	579,853	921,349,174	1,588.94	14.05	10.98	(25.31)
அமெரிக்கா	483,073	1,247,504,246	2,582.44	11.71	14.86	(15.70)
உக்கிரேன்	414,345	563,234,866	1,359.34	10.04	6.71	4.77
நெதர்லாந்து (கொலன்ட்)	289,978	842,111,613	2,904.05	7.03	10.03	(0.57)
லிபியா	231,184	143,656,990	621.40	5.60	1.71	125.74
சவூதி அரேபியா	213,010	421,575,591	1,979.13	5.16	5.02	41.00
ஐ.அ.இராட்சியம்	167,137	173,343,056	1,037.13	4.05	2.07	(64.44)
போலந்து	134,477	293,727,646	2,184.22	3.26	3.50	(13.73)
நைஜீரியா	104,091	236,408,947	2,271.17	2.52	2.82	18.14
பிரான்ஸ்	101,327	275,279,620	2,716.76	2.46	3.28	(6.32)
தாய்வான்	91,056	108,360,147	1,190.04	2.21	1.29	(11.07)
அவுஸ்திரேலியா	88,462	273,246,885	3,088.87	2.14	3.26	(23.36)
ஐ.இராட்சியம்	84,877	398,103,513	4,690.37	2.06	4.74	(24.99)
ஜேர்மனி	68,564	111,219,517	1,622.13	1.66	1.33	(21.21)
சிலி	59,711	125,430,995	2,100.65	1.45	1.49	(15.42)
பெலாருஸ்	57,106	85,009,165	1,488.61	1.38	1.01	(14.28)
கனடா	56,897	133,648,368	2,348.94	1.38	1.59	53.08
சீனா	51,137	111,242,507	2,175.38	1.24	1.33	(22.90)
உஸ்பெகிஸ்தான்	46,475	60,999,467	1,312.53	1.13	0.73	(32.91)
நியுசிலாந்து	42,098	115,438,284	2,742.12	1.02	1.38	(6.90)
முதல் 20 மொத்தம்	3,364,858	6,640,890,597	1,973.60	81.55	79.12	(13.40)

மூலம்: இலங்கை சுங்கம்

3.4.4.3 உடனடித் தேயிலை ஏற்றுமதிகள்

இலங்கையிலிருந்து உடனடித் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளில் அயர்லாந்து பிரதான பங்கினை வகிப்பதுடன், 2.4 மில்லியன் கிலோகிராம் (78%) உடனடித் தேயிலையை இறக்குமதிக்கு பொறுப்பாக செயற்படுகின்றது. அதனையடுத்து, உடனடித் தேயிலை இறக்குமதியில், முறையே சீனா, ஜேர்மனி பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. மீளாய்வு வருடத்தில், மொத்தமாக 2.8 மில்லியன் கிலோகிராம் உடனடி தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், இதன் பெறுமதி 4.1 பில்லியன் ரூபாய்களாகும்.

3.4.4.4 பருகுவதற்கு தயார் நிலையிலுள்ள (RTD) தேநீர் ஏற்றுமதிகள்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், 1,809 மில்லியன் லீற்றர் RTD தேநீரை ஏற்றுமதி செய்வதனூடாக 4.3 மில்லியன் ரூபா ஏற்றமதி வருமானமாக ஈட்டப்பட்டது. மாலைதீவு 1,054 மில்லியன் லீற்றர்கள் RTD தேநீரை இறக்குமதி செய்வதனூடாக ரூபா 3.5 மில்லியனை வருமானமாக ஈட்டுவதன் மூலமாக பாரிய பங்கினை வகிக்கிறது. சிலோன் RTD தேநீருக்கான ஏனைய பிரதான சந்தைகளாக அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் விளங்கின. எவ்வாறாயினும், கடந்த இரண்டு வருட காலமாக இலங்கை RTD தேநீர் சந்தையில் பாரிய வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

3.5 சர்வதேச தேயிலைத் தொழிற்துறையின் பின்னணி

சர்வதேச ரீதியில் மிகவும் அதிகளவில் நுகரப்படும் பிரபல்யமானதொரு சூடான பானமாக தேநீர் விளங்குகின்றது. தேநீர், நீருக்கு அடுத்தபடியான பானமாகத் திகழ்கின்றது. சர்வதேச ரீதியில் அனைத்து இன மக்களிடையே, சகல வயதுப் பிரிவினரையும் கவரும் பானமாகவும் தேநீர் விளங்குகின்றது. தேயிலையானது, விசேடமாக, தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியில் பிரதான பங்கினை வகிப்பதை, புராதன வரலாற்றுச் சான்றுகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. பண்டங்களை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகள், இலங்கை தேயிலை ஏற்றுமதிகளில் பிரதான பங்காளர்களாக ஊடுருவியுள்ளதுடன், நாட்டிலுள்ள மிகப்பெரிய தொழில் தரருணர்களில் ஒரு பகுதியாகவும் விளங்குகின்றது.

தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகளில், சீனா, இந்தியா, கென்னியா, துருக்கி மற்றும் இலங்கை ஆகியன பிரதான இடத்தை வகுக்கின்றன. மீளாய்வு ஆண்டில், இலங்கையை பின்தள்ளி, துருக்கி நான்காம் இடத்துக்கு முன்னேறியது. அதேவேளையில், பிரதான உற்பத்தியாளர்களின் பட்டியலில் வியட்நாம் ஐந்தாம் இடத்தைப்பிடித்தது. இவ் ஐந்து நாடுகளும், சர்வதேச உற்பத்தில் 85 % மும், சர்வதேச ஏற்றுமதியில் 80 % மும் பங்களிப்புச் செலுத்துகின்றன. மேலும், சீனா, சர்வதேச தேயிலை பயிர்ச்செய்கை எழுச்சிக்கான மிகமுக்கியமான கருவியாக விளங்குவதுடன், ஆபிரிக்க நாடுகளில் கென்னியா, மிகப்பெரிய அறுவடையைப் பதிவு செய்துள்ளது. சர்வதேச தொழிற்பேட்டையில், இலங்கையின் நிலையைக் கவனத்திற்கொள்ளும்போது, ஏனைய சர்வதேச தேயிலை உற்பத்தியாளர்களுடன் ஒப்பிடுகையில், ஏற்றுமதிகள், உற்பத்தி, ஏலவிற்பனை விலைகள் மற்றும் வருமான செயற்பாடுகள் (ஏற்றுமதிகள்) ஆகியவற்றின் பிரதான செயற்திறன் சுட்டிக்காட்டிகளின் பிரகாரம், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், இலங்கை ஏனைய தேயிலை உற்பத்தி உறுப்பினர்களுடன் ஒப்பிடுகையில் மத்திமமாக செயற்பட்டுள்ளதாக காட்டப்பட்டுள்ளது.

3.5.1 சர்வதேச தேயிலைப் பயிர்ச்செய்கை

2020 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில், சர்வதேச ரீதியில் தேயிலைப் பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படும் மொத்தப் பரப்பானது 4.8 மில்லியன் ஹெக்டயர்களாக அமையுமென கணிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.12: அதியுயர் தேயிலை பரப்புக்களின் பதிவுகள்

நாடு	2015 (ஹெக்.)	2016 (ஹெக்.)	2017 (ஹெக்.)	2018 (ஹெக்.)	2019 (ஹெக்.)	2020 (ஹெக்.)
சீனா	2,810,000	2,920,000	3,059,000	2,985,800	3,065,500	3,165,130
இந்தியா	566,660	577,480	590,000	636,560	636,560	636,560
இலங்கை*	188,000	202,839	202,540	202,540	202,540	202,540
கென்னியா	209,426	218,538	232,742	234,300	269,430	269,430
வியட்நாம்	125,000	134,000	134,000	130,000	130,000	130,000
இந்தோனேசியா	119,361	118,100	116,500	115,300	114,300	113,500
மியன்மார்	79,000	80,000	80,000	81,000	81,400	81,400
துருக்கி	77,500	77,000	77,000	83,000	83,000	83,000
பங்களாதேஷ்	53,500	59,000	59,000	59,300	61,000	65,429
ஜப்பான்	39,300	43,100	42,400	41,600	40,600	39,100

மூலம்: வருடாந்த ITC புள்ளிவிபரவியலுக்கான கையேடு – 2021

*கணிக்கப்பட்ட பகுதியானது பயிரிடப்பட்டுள்ள பகுதியாக பதியப்பட்டுள்ளது.

சர்வதேச தேயிலைக் குழுவின் ITC தகவல்களுக்கு ஏற்ப, சீனாவில் மிக அதிகமான பரப்பில் (62.5%) தேயிலைப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன், வருடாவருடம் அவர்களது தேயிலைப் பயிர்ச்செய்கைப் பரப்பானது அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. மேலும், கென்னியாவில், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் அதியுயர் அதியுயர் பரப்பில் தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியிலான தேயிலை பயிர்செய் பரப்புக்களில், தேயிலை உற்பத்தி செய்யும் முதல் பத்து நாடுகள் 94% மான பயிர்செய் பரப்புக்களைக் கொண்டுள்ளன.

3.5.2 சர்வதேச தேயிலை நுகர்வு

கடந்த 2018 - 2020 வரையான மூன்று வருட காலப்பகுதியில், வருடாந்த தேயிலை நுகர்வு மற்றும் தனிநபருக்குரிய மூன்று வருடத்துக்கான சராசரி தேயிலை நுகர்வானது சீனாவில் 2,152.67 மில்லியன் கிலோகிராம்களாக மிக அதிகளவில் பதியப்பட்டுள்ளது. இருந்தும் தனிநபருக்கான தேயிலை நுகர்வு 1.64 கிலோகிராம்களாக பதியப்பட்டது. துருக்கி 3.2 கிலோகிராம் அதியுயர் தனிநபர் நுகர்வுடன், வருடாந்தம் 263.27 மில்லியன் கிலோகிராம்கள் தேயிலை நுகர்வினைக் கொண்டிருந்தது. லிபியாவில் தனிநபர் தேயிலை நுகர்வானது 2.64 கிலோகிராம்களாகக் காணப்பட்டது.

அட்டவணை 3.13: சர்வதேச தேயிலை உற்பத்தி புள்ளிவிபரவியல்

நாடு	2016-18		2017-19		2018-20	
	மொத்தம்	தனி நபருக்கு	மொத்தம்	தனி நபருக்கு	மொத்தம்	தனி நபருக்கு
லிபியா	17.07	2.80	17.83	3.02	15.33	2.64
ஆப்கானிஸ்தான்	38.77	1.37	30.77	1.02	27.87	0.91
துருக்கி	251.00	3.09	252.30	3.04	263.27	3.2
ஐ.இராட்சியம் (□)	107.81	1.62	106.77	1.59	107.6	1.61
மொராக்கோ	70.95	2.04	73.05	2.07	74.23	2.09
அயர்லாந்து குடியரசு	8.66	1.79	9.76	2.00	10.38	2.1
தாய்வான்	36.14	1.29	36.67	1.31	36.55	1.3
கத்தார்	4.00	1.45	4.19	1.51	4.28	1.53
இலங்கை*	28.96	1.35	29.16	1.35	29.53	1.36
கொங்கொங்	11.26	1.52	11.85	1.59	12.37	1.65
சிலி	20.66	1.11	20.25	1.09	21.45	1.12
சிரியா	11.10	0.65	10.70	0.60	9.85	0.64
எகிப்து	93.02	0.96	99.86	1.00	98.85	1
ஈராக்	42.30	1.12	43.50	1.13	43.23	1.11
ஈரான்	76.83	0.94	81.87	1.00	78.23	0.94
சீனா	2,050.33	1.48	2,152.67	1.55	2289	1.64
இந்தியா	1,036.00	0.82	1,083.33	0.84	1091	0.83
CIS	248.90	0.85	245.33	0.83	239.23	0.82
பாகிஸ்தான்	180.18	0.85	190.81	0.89	216.34	1.01
USA	125.61	0.39	120.96	0.37	114.09	0.35
ஜப்பான்	103.87	0.82	104.21	0.82	100.05	0.79
இந்தோனேசியா	94.00	0.36	94.33	0.35	95.33	0.36
பங்களாதேஷ்	82.33	0.51	82.83	0.50	85.17	0.51
போலந்து	36.59	0.96	37.37	0.98	38.78	1.02
ஜெர்மனி	29.69	0.36	28.07	0.34	24.93	0.3

மூலம்: வருடாந்த ITC புள்ளிவிபரவியலுக்கான கையேடு – 2020
மொத்தம்: மில்லியன் கிலோகிராம்
நபருக்கு (பி எச்டி): கி.கிராம்


3.5.3 சர்வதேச தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், சர்வதேச தேயிலை உற்பத்தியானது 6 பில்லியன் கிலோகிராம்களை எட்டுயுள்ளதுடன், இது கடந்த 2019 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2% னால் வீழ்ச்சியடைந்துள்ளது. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், சீனா, இந்தியா, கென்னியா, இலங்கை, துருக்கி, வியட்நாம் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் சர்வதேச தேயிலை உற்பத்தியில் 90% மான பங்களிப்பைச் செலுத்துகின்றன. அத்துடன், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தேயிலை உற்பத்தியில் முன்னிலையில் திகழ்வதுடன், இந்நாடுகளின் உள்நாட்டு நுகர்வுகளில் வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளதுடன், கென்னியா பெரிய சர்வதேச ஏற்றுமதியாளராகவும் திகழ்கின்றது. சர்வதேச ரீதியில் ஐந்தாவது பெரிய தேயிலை உற்பத்தியாளராக இலங்கை திகழ்வதுடன், துருக்கி இலங்கையைப் பின்தள்ளி நான்காம் இடத்தைப் பிடித்துள்ளது. மீளாய்வு ஆண்டில் சிலோன் தேயிலை உற்பத்தி வீழ்ச்சிக்கான பல்வேறு காரணங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, சர்வதேச தேயிலை உற்பத்தியில் 4.63% மான பங்கினைக் கொண்டுள்ளது.

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு, சீனா 2,740 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்திகளுடன் சர்வதேச ரீதியில் 45.5 % மான பங்குகளுடன் முதலிடத்திலும், இந்தியா 1,256 மில்லியன் கிலோகிராம் உற்பத்தியுடன் 21% மான பங்குகளுடன் இரண்டாவது

இடத்திலும் திகழ்கின்றன. அதனையடுத்து, கென்னியா 570 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தியுடன், 9 % மான பங்குகளுடன் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது. உலகில் நான்காவது பெரிய பங்களிப்பாளரான துருக்கி மில்லியன் கிலோகிராம் தேயிலையை உற்பத்தி செய்வதுடன், 4.66 % மான பங்குகளைக் கொண்டுள்ளன.

அட்டவணை 3.6: சர்வதேச தேயிலை உற்பத்தி புள்ளிவிபரவியல்



மூலம்: இலங்கை சுங்கம்

3.5.4 சர்வதேச தேயிலை விற்பனைகள்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், கொழும்பு ஏலத்தில் கிலோகிராமுக்கான சராசரி விலை 3.39 அமெரிக்க டொலர்களுடன், 268 மில்லியன் கிலோகிராம் தேயிலை கையாளப்பட்டது. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் மொம்பாசா ஏலங்கள் மற்றும் கொல்கத்தா ஏலங்களில் முறையே 500 மில்லியன் கிலோகிராம் மற்றும் 128 மில்லியன் கிலோகிராம் தேயிலைகள் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியிலான பாரிய ஏலங்களை கவனத்திற்கொள்கையில், கடந்த பலவருட காலங்களாக கொழும்பு தேயிலை ஏலத்தில் அதியுயர் சராசரி தேயிலை விலைகள் காணப்பட்டதாக பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 3.14: பிரதான தேயிலை ஏலங்களின் புள்ளிவிபரவியல் (அளவு - மில்லியன் கி.கிராம், அலகுக்குரிய விலை – அமெ.டொலர்/கி.கி)


ஏல நிலையங்கள்	2018		2019		2020	
	அளவு	விலை	அளவு	விலை	அளவு	விலை
சிட்டாகொங்	79	3.12	85	2.31	82.99	2.05
கொச்சின்	48	1.81	42	1.66	41.52	1.92
கொழும்பு	288	3.60	298	3.07	268.24	3.39
குவாஹாட்டி	177	2.13	150	2.09	162.52	2.69
ஜகார்த்தா	-	-	-	-	-	-
கொல்கத்தா	159	2.46	168	2.43	132.60	2.91
லிம்பே	9	1.84	9	1.46	5.98	1.44
மொம்பாசா	458	2.43	454	2.04	516.80	1.93

மூலம்: ஐதிசி இணையத்தளத்தில் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் கிலோகிராமுக்கான சராசரி ஏல விற்பனை விலையாக 3.00 அமெரிக்க டொலர்களுக்கு அதிகமான பெறுமதியைக் கொண்ட ஒரேயொரு ஏலமாக கொழும்பு ஏலம் காணப்படுகின்றது. சிட்டாகொங், கொல்கத்தா, மற்றும் குவாஹாட்டி ஆகிய ஒவ்வொரு ஏல நிலையங்களிலும் கிலோகிராமுக்கு இரண்டு அமெரிக்க டொலர்கள் காணப்பட்டதாக மீளாய்வுக் காலத்தில் அறியமுடிந்தது. கொல்கத்தா மற்றும் சிட்டாகொங் ஆகிய ஏலங்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது அதியுயர் சராசரி ஏல விலையையும் கொண்டதாக அமையப்பெற்றுள்ளன.

3.5.5 சர்வதேச தேயிலை ஏற்றுமதிகள்

அட்டவணை 3.7: பிரதான தேயிலை ஏற்றுமதியாளர்கள்




மூலம்: 2021 ஆம் ஆண்டுக்குரிய புள்ளிவிபரவியலின் வருடாந்த ஐதிசி நாளேட்டின் பிற்சேர்க்கை

குறிப்பு: மீள் ஏற்றுமதி தவிர்ந்த இலங்கை புள்ளிகள்

நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சர்வதேச தேயிலை ஏற்றுமதிகள் 80 மில்லியன் கிலோகிராம்களினால் (4%) வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தேயிலை ஏற்றுமதியில் முறையே 5% மற்றும் 17% எனும் எதிரான வளர்ச்சிகளைக் கொண்டுள்ளன. கென்னியா ஏற்றுமதி அளவினை அதிகரித்துள்ளதுடன், கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 % மான வளர்ச்சியைக் காட்டுகின்றது. கென்னியா, சீனா மற்றும் இலங்கை ஆகிய மூன்று மிகப்பெரிய ஏற்றுமதி நாடுகள், சர்வதேச தேயிலை ஏற்றுமதியில் 62% க்கும் அதிகமான ஏற்றுமதிப்பங்குகளைக் கொண்டுள்ளன. நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில், முதன்மையான தேயிலை ஏற்றுமதி நாடுகள் மற்றும் அவற்றின் ஏற்றுமதி வருமானங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. தேயிலை ஏற்றுமதியில் அதிகளவு வருமானம் ஈட்டும் நாடாக சீனா திகழ்வதுடன், கென்னியா மூன்றாம் இடத்திலுள்ளது. இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதியாளராக விளங்கும் இலங்கை, தூய இலங்கை தேயிலை ஏற்றுமதிகளினூடாக தொடர்ச்சியாக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டக்கூடிய நிலையிலுள்ளது.

வரைபு 3.8 : அதியுயர் ஏற்றுமதிகளுக்கான வருமானம்



மூலம்: புள்ளிவிபரங்களின் வருடாந்த ஐதிசி வெளியீடு - 2021

3.6. சிலோன் தேயிலைச் சந்தைகள்

3.6.1 ரஷ்யா மற்றும் சிஐஎஸ் பிராந்தியங்கள்

ரஷ்யா

அடிப்படை பொருளாதார காட்டிகள்

மக்கள்தொகை	146.2 மில்லியன்
GDP	US$1.47 ரில்லியன்
GDP வளர்ச்சி வீதம்	-3.0%
நபருக்கான தலா வருமானம்	US$ 10068.5
அதிகரிப்பு வீதம்	(4.9%)வருடாந்தம்
நாணயமாற்று வீதம்	USD: 1 = RUB 73.88
தேயிலைச் சந்தையின் அளவு	140,000 MT - 180,000 MT

ரஷ்யா நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு 412 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 151,624 மெற்றிக்தொன் தேயிலைகளை இயக்குமதி செய்தது. கடந்த 2019 ஆம் ஆண்டு, இறக்குமதி செய்யப்பட்ட மொத்த தேயிலையின் அளவு 150,326 மெற்றிக்தொன்களாக அமைந்ததுடன், இது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 0.8% ஆல் குறைவடைந்துள்ளது.

அட்டவணை 3.6.1 ரஷ்ய இராச்சியத்துக்கு நாடுகளின் அடிப்படையிலான தேயிலை இறக்குமதிகள் – 2020

நாடு	கொள்ளளவு (மெற்.தொன்)	பெறுமதி (மில்.அமெ. டொலர்)	சந்தைப்பங்கு -கொள்ளளவு	சந்தைப் பங்கு - பெறுமதி
இலங்கை	31,780	124	21	30
இந்தியா	32,488	92	21	22
கென்னியா	23,755	53	16	13
சீனா	21,381	39	14	9
ஐ.அ.இராட்சியம்	4,514	22.89	3	6
வியட்நாம்	15,471	24.85	10	6
இந்தோனேசியா	7,649	13.58	5	3
கசகஸ்தான்	3,186	14	2	3
ஜேர்மனி	490	6	0.3	1.5
சிம்பாப்வே	1540	2.8	1.02	0.7
ஈரான்	0	0	0	0
அஷபர்ஜான்	294	1.5	0.2	0.4
தன்சானியா	1765	3.33	1.2	0.8
ஆர்ஜன்டீனா	2,885	4	1.9	0.97
ஏனையவை	4,426	11.05	2.9	2.7
மொத்தம்	151,624	412		

கொள்ளளவுகள் மெற்றிக்தொன்களிலும் (MT), பெறுமதிகள் மில்லியன் அமெரிக்க டொலர்களிலும் (USD Mln) தரப்பட்டுள்ளன.
மூலம்: ரஷ்ய சுங்க தகவல்கள் நிறுவனம்

உக்கிரேன்

அடிப்படை பொருளாதார காட்டிகள்

மக்கள்தொகை	41 மில்லியன்
GDP	US$ 154.8 பில்லியன் (2020)
GDP வளர்ச்சி வீதம்	US$ 3756 (2020)
நபருக்கான தலா வருமானம்	-4.2 %
அதிகரிப்பு வீதம்	3.1 %
தேயிலை இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்	26,511,424.00	24,583,203.50
இறக்குமதி விண்ணப்பப்படிவங்களை விற்பனை செய்தல்	12,480.00	18,500.00
தொழிற்சாலையைப் பதிவுசெய்தல்	1,000,000.00	-
களஞ்சியசாலைகளைப் பதிவுசெய்தல்	450,000.00	805,000.00
உள்ளூர் பொதியாளர்களைப் புதுப்பித்தல்	-	20,000.00
களஞ்சியசாலைகளைப் புதுப்பித்தல்	2,475,000.00	2,715,000.00
தேயிலை உற்பத்தியாளர்களைப் பதிவுசெய்தல்	340,000.00	1,280,000.00
நிராகரிக்கப்பட்ட தேயிலைக் கொள்வனவுக்கான அனுமதிப்பத்திரம்	42,085,164.59	48,676,904.47
தேயிலை இறக்குமதியாளர்களைப் பதிவுசெய்தல்	435,000.00	320,000.00
வங்கிப் பிணையை விடுவிப்பதற்கான அனுமதிப்பத்திரம்	362,500.00	445,000.00
தேயிலை மாதிரிகளை சுவைத்தலினூடாக ஈட்டும் வருமானம்	767,000.00	829,500.00
தேயிலைப் பொதிகள் / ஏனைய தேயிலை மூலங்களைப் பதிவு செய்தல்	356,000.00	766,000.00
தேயிலைத் தொழிற்சாலை பதிவுகளைப் புதுப்பித்தல்	4,290,000.00	3,934,810.00
தேயிலை இறக்குமதியளர்களைப் புதுப்பித்தல்	145,000.00	245,000.00
உள்ளூர்ப் பொதியாளர்களை பதிவுசெய்தல்	1,515,800.00	990,000.00
GMP சான்றுதழ் கட்டணம்	765,000.00	1,437,394.39
தேயிலை மாதிரிகளை பரிசோதிக்கும் கட்டணம்	54,905.00	387,092.20
	153,106,639.00	158,958,440.56

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

	2020 (ரூபா)	2019 (ரூபா)
03. வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தான தேறிய வருமானம்		
ஏற்றுமதியாளர் பொதி விற்பனைத் தரகு	5,175,927.33	10,727,228.50
ஏகபோக வாடகை	1,179,166.67	1,799,999.99
துணிப்பை விற்பனைகள்	55,520.00	158,560.00
தேயிலை விற்பனைகள்	8,530,125.62	18,329,081.68
நாணய மாற்றிலான வித்தியாசம்	11,996.70	-
வெளிநாட்டு நாணய விற்பனையிலான வருமானம்	155.00	(65.66)
	14,952,891.32	31,014,804.51
தேயிலைக்கான செலவு	(6,737,381.32)	(13,604,355.72)
வெற்றுப்பெட்டிகளுக்கான செலவு	(298,298.27)	(2,386,045.43)
கொண்டுசெல்லும் பொதிகளுக்கான செலவு	(563,612.15)	(4,043,263.00)
ஊழியர் பணிக்கொடை	(628,060.09)	(1,625,491.18)
கடனட்டைக்கான தரகு	(225,604.98)	(874,680.03)
வர்த்தக நடவடிக்கைகளினாலான தேறிய இலாபம்	6,499,934.51	8,480,969.15
04. நுவெரேலியா விற்பனை நிலையம் மற்றும் உல்லாச விடுதி		
விற்பனை நிலையம் – வாடகை வருமானம் மற்றும் விற்பனைத் தரகு	1,224,302.00	758,675.00
உல்லாச விடுதி	118,000.00	156,575.00
	1,342,302.00	915,250.00
05. ஏனைய வருமானம்		
ஊழியர் கடன்களுக்கான வட்டி	1,435,900.37	1,631,230.39
பல்வேறு வருமானம்	4,098,502.93	1,986,395.82
விற்பனைப் புள்ளிவிபரவியலின் சாரம்சம்	94,247.08	101,595.60
வருடாந்த அறிக்கை விற்பனை	-	750.00
வழங்குனர்களைப் பதிவுசெய்தல்	291,300.00	232,500.00
செய்தி மடல்	342,000.00	360,000.00
விளம்பரங்கள், குறிப்பேடுகள் மற்றும் ஏனையவற்றை விற்பனை செய்தல்	223,260.00	42,415.00
JEDB தற்காலிக கடனுக்காக மோசமான கடனை மாற்றியமைத்தல்	-	25,000,000.00
நிலையான சொத்துக்களின் வெளியகற்றல் வருமானம்	340.66	2,377,637.84
பகுப்பாய்வுச் செலவீனங்கள்	-	141,000.00
பரீட்சைக் கட்டணங்கள்	117,150.00	40,500.00
	6,602,701.04	31,914,024.65

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

	2020 (ரூபா)	2019 (ரூபா)
06. நிர்வாகச் செலவீனங்கள்		
6.1 தனிப்பட்ட ஊதியங்கள்		
சம்பளங்கள்	134,269,976.10	120,707,656.77
ஏனைய கொடுப்பனவுகள் (இடைக்கால/ஏனைய)	4,653,225.34	5,420,779.82
மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலக் கொடுப்பனவுகள்	9,380,206.01	10,667,654.09
தினசரி ஊதியக் கொடுப்பனவுகள்	3,065,365.00	2,744,150.00
COL கொடுப்பனவுகள்	25,193,892.45	25,239,592.27
அலுவலகத்துக்குப் பின்னரான செலவீனங்கள் – ஏற்றுமதிகள்	297,518.21	1,022,995.28
ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கள்	23,948,061.84	23,307,662.92
ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கள்	4,788,966.30	4,429,061.35
ஊழியர் பணிக்கொடை	18,461,431.13	17,741,359.04
	224,058,642.38	211,280,911.54
6.2 ஏனைய நிர்வாகச் செலவீனங்கள்		
அங்கத்தவர் சந்தாக்கட்டணம் (தொழில்முறை)	16,000.00	125,500.00
ஊழியர் வெகுமதிகள்	4,000,000.00	4,350,000.00
மருத்துவ நன்மைகள்/ தனிநபர் விபத்துக் காப்புறுதி	22,731,833.07	22,751,012.45
ஊழியர்களுக்கான திரவநிலை தேநீர்	1,765,281.70	2,143,512.00
ஊழியர்களுக்கான பொதியிடப்பட்ட தேயிலை வழங்கல்	6,066,360.00	4,633,427.49
ஊழியர்களுக்கான பொதுநலம்	1,696,386.60	1,836,946.06
இறப்பு நன்கொடைகள்	750,000.00	500,000.00
விளையாட்டுக்கள்/ பொழுதுபோக்கு வசதிகள்	250,000.00	250,000.00
ஊழியர் சொத்துக் கடன்களுக்கான வட்டி	752,800.92	790,001.10
ஊழியர்களுக்கான பயிற்சிகள்/ கருத்தரங்குகள்/ செயலமர்வுகள்	1,127,020.00	10,719,182.23
வாரிய/குழு உறுப்பினர்களுக்கான கட்டணங்கள்	1,135,920.00	1,856,980.00
வாரியகுழுக் கூட்டங்களுக்கான செலவுகள்	73,660.00	66,060.00
பகுப்பாய்வு ஆய்வுகூடம்/ நுகரக்கூடியவை	2,271,923.26	3,168,588.55
பரீட்சைக் கட்டணங்கள்	464,847.00	664,710.00
விநியோகிஸ்தர் வைப்புப்பணத்தை மீள்செலுத்தல்	30,000.00	15,000.00
உசாத்துணைக் கட்டணங்கள்	1,417,975.00	-
நேர்முகப்பரீட்சை வாரியக் கட்டணம்	12,825.00	43,400.00
	44,562,832.55	53,914,319.88
07. பிரயாணச் செலவீனங்கள்		
பிரயாணச் செலவீனங்கள் (உள்ளூர்)	16,931,533.04	13,020,407.15
	16,931,533.04	13,020,407.15

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

	2020 (ரூபா)	2019 (ரூபா)
08 வழங்கல்கள் மற்றும் தேவைகள்		
அலுவலக உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தேவைகளை அச்சிடுதல்	5,110,732.36	8,297,635.96
எரிபொருள் மற்றும் எண்ணெய்கள்	4,071,517.44	4,451,925.46
பொறியியல், மின்னியல் மற்றும் பொதுப் பண்டங்கள்	262,287.50	297,286.00
புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்கள்	3,373,714.90	819,621.00
சீருடைகள்	1,718,939.50	1,518,222.25
தேயிலை சுவைத்தலுக்குரிய அறைக்கான தேவைகள்	-	16,550.00
தேயிலை ஏற்றுமதி அலகுக்குரிய அறைக்கான தேவைகள்	-	11,040.00
	14,537,191.70	**15,412,280.67**
09 மூலதன சொத்துக்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்		
வாகனங்களை பழுதுபார்த்தல்/ பராமரித்தல்	1,784,217.37	2,685,051.07
ஆலை மற்றும் இயந்திரங்களை பழுதுபார்த்தல்/ பராமரித்தல்	1,949,136.07	3,239,877.36
கட்டடங்களை பழுதுபார்த்தல்/ பராமரித்தல்	1,057,697.96	1,979,112.14
அலுவலக உபகரணங்களை பழுதுபார்த்தல்/ பராமரித்தல்	6,828,726.96	12,898,800.62
தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகளை பழுதுபார்த்தல்/ பராமரித்தல்	33,348.00	150,079.10
ஏனைய பயன்பாட்டு சேவைகள்	60,366.00	88,030.96
சுத்திகரிப்பு சேவைகள்	6,240,473.50	6,657,861.84
ஆய்வுகூட அங்கீகாரம் மற்றும் கருவிகள் பராமரிப்பு	723,305.39	351,432.30
	18,677,271.25	**28,050,245.39**
10. பொதுவசதிகள் மற்றும் ஏனைய செலவீனங்கள்		
செய்தி அறிவிப்புகள்	1,349,338.50	5,222,242.00
தொலைபேசி, தொலைநகல் மற்றும் இணையத்தளம்	9,029,381.76	8,258,671.62
அஞ்சல்	1,067,683.94	1,363,960.60
மின்சாரம்	10,926,319.58	11,687,325.80
விகிதங்கள் மற்றும் வரிகள்	1,688,463.07	1,465,186.24
வாடகை	8,208,570.00	7,056,600.00
காப்புறுதி- கட்டடம், வாகனங்கள், மேலும் பல	1,556,617.45	1,019,038.74
பாதுகாப்பு சேவைகள்	9,730,584.10	11,709,293.55
தணிக்கைக் கட்டணங்கள்	1,200,000.00	1,200,000.00
சட்டக் கட்டணங்கள்	572,155.00	1,658,086.00
ஏனைய கட்டணங்கள்	770,307.07	185,061.00
தேயிலை மாதிரி பகுப்பாய்வுக் கட்டணம்	1,726,063.21	3,605,596.36
நீர் வழங்கல் மற்றும் வெப்பமாக்கல்	678,806.48	1,131,777.91
தேயிலை சுவைத்தல் வாரியத்துக்கான கட்டணம்	2,352,100.00	2,769,300.00
சில்லறை செலவுகள்	426,187.13	702,999.69
பிரயாண மற்றும் வாகன வாடகைக் கட்டணங்கள்	107,500.00	-
வாகனங்களுக்கான குத்தகை வாடகை	19,259,556.21	20,764,293.27
காணிகளுக்கான குத்தகை வாடகை	1,513,500.00	330,000.00
கொவிட் - 19 னாலான செலவீனங்கள்	6,575,470.42	-
நுவெலிரேயா செலவீனங்கள்	34,040.00	2,201,688.55
	78,772,643.92	**82,331,121.33**

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

	2020 (ரூபா)	2019 (ரூபா)
11. பங்குகள்		
11.1 ஆய்வுகூடம்		
ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள்	7,268,252.51	6,450,193.05
	7,268,252.51	**6,450,193.05**
11.2 நுகர்வுப்பொருட்கள்		
அலுவலக உபகரணங்கள்	8,628,347.99	4,699,661.82
ஊக்குவித்தல் பொருட்கள்	6,026,463.88	156,010.00
	14,654,811.87	**4,855,671.82**
11.3 தேயிலை மற்றும் ஏனைய பங்குகள்		
தேயிலை – பிரதான விற்பனைக்கூடம்	4,088,745.93	3,987,288.64
தேயிலை – விற்பனை நிலையம்	354,148.48	269,973.29
ஊழியர் தேயிலை	805,185.00	186,365.00
வெறுமையான பெட்டிகள்	3,553,486.71	3,101,236.77
எடுத்துச்செல்லும் பைகள்	89,241.85	3,500.00
கழுத்துப் பட்டிகள்	33,400.00	33,400.00
	8,924,207.97	**7,581,763.70**
11.4 கொண்டுசெல்லுதற்குரிய பொருட்கள்	5,128,250.37	2,655,431.61
	5,128,250.37	2,655,431.61
	35,975,522.72	**21,543,060.18**
12. பெறத்தக்கவைகள்		
பலதரப்பட்ட பெறத்தக்கவைகள்	39,754,875.30	4,172,789.48
கடனாளிகள் – கிரிக்கெட் மேலங்கி	679,123.30	690,503.02
கடனாளிகள் கட்டுப்பாடு	937,733.65	4,052,128.70
கடனாளிகள் – கிடைக்கத்தக்க வருமானம்	1,227,497.16	262,497.16
பொதியிடப்பட்ட தேயிலை விற்பனைகள்	448,176.28	227,560.81
குறைபாடுகள்	1,313,986.03	1,327,371.41
	44,361,391.72	**10,732,850.58**
12.1 தூதரகக் கணக்கு		
சீனா	84,764.07	84,764.07
பேங்கோக்	-	473,803.46
ஐக்கிய இராட்சியம்	368,447.03	345,421.01
ஜேர்மனி	-	479,914.95
ஜப்பான்	19,089.91	17,649.80
பிரான்ஸ்	513,985.35	456,283.57
போலந்து	422,294.06	417,864.32
அவுஸ்திரேலியா	27,965.78	24,771.03
	1,436,546.20	**2,300,472.21**

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

	2020 (ரூபா)	2019 (ரூபா)
12.2 தேயிலை ஊக்குவித்தல் அலகு - நடைமுறைக் கணக்கு		
ஐக்கிய அரபு இராட்சியம்	790,450.15	750,185.40
மொஸ்கோ	706,093.59	2,420,122.12
சீனா	352,681.17	315,948.10
	1,849,224.91	**3,486,255.62**
13. கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்		
ஒருங்கிணைந்த கடன்கள் - TCD	6,847,852.57	8,118,502.77
ஒருங்கிணைந்த கடன்கள் - HO	31,486,862.54	31,040,547.56
முற்பணம் – விழா	649,400.00	496,900.00
ஊழியர் தேயிலை மீட்டெடுப்புக்கள்	202,625.00	490,980.00
ஊழியர் கடனாளிகள்	10,000.00	11,850.00
கடன்கள் – வெள்ள நிவாரணம்	-	114,629.00
முற்கொடுப்பனவுகள்	23,138.85	26,554.71
கடன்கள் மற்றும் முற்பணம் - மொஸ்கோ	11,459.33	11,459.33
ஏனைய முற்பணம் – பிராந்திய அலுவலகம்	100,000.00	-
	39,331,338.29	**40,311,423.37**
14. வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்		
வைப்புக்கள்	5,204,386.19	4,735,211.19
முத்திரை வைப்பு	160,000.00	160,000.00
பொதி அஞ்சல் வைப்பு	44,940.00	44,940.00
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் – ஐ.அ.இராட்சியம்	1,025,373.59	32,948,364.03
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் – மொஸ்கோ	277,824.75	4,228,541.53
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் – சீனா	652,781.00	913,570.60
முற்கொடுப்பனவுகள்	5,858,440.98	20,616,554.15
முன்கூட்டியே செலுத்தல் – சீனா	-	91,702.97
முன்கூட்டியே செலுத்தல் – ஐ.அ.இராட்சியம்	-	61,551.55
அணிதிரட்டலுக்கான முற்பணம்	32,400,171.68	30,238,442.45
	45,623,918.19	**94,038,878.47**
15. மூலதனங்கள்		
நிலையான வைப்பு – இ.தே.சபை	454,409,000.00	539,409,000.00
பெறத்தக்க நிலையான வைப்பு – இ.தே.சபை	8,658,603.97	16,973,669.02
நிலையான வைப்பு – ஊக்கு. மற்றும் பரா. வரி	6,956,839,407.93	6,507,471,909.63
பெறத்தக்க நிலையான வைப்பு வட்டி – ஊக்கு. மற்றும் பரா. வரி	198,683,436.01	228,409,137.71
நம்பிக்கை நிதி மிகை - இ.தே.சபை	-	61,612,252.97
நம்பிக்கை நிதி மிகை - ஊக்கு. மற்றும் பரா. வரி	-	423,621,371.84
வீட்டுக் கடன் வைப்புக்கள் – எஸ்.எம்.ஐ.பீ	2,699,283.34	2,699,283.34
	7,621,289,731.25	**7,780,196,624.51**

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

	2020 (ரூபா)	2019 (ரூபா)
16. காசு மற்றும் காசுக்குச் சமனானவை		
16.1 காசு		
நாளந்த செலவுப் பண ஈர்ப்பு – முத்திரை	10,000.00	10,000.00
கையிலுள்ள விற்பனைகளின் சேகரிப்பு	564,111.29	396,111.72
	574,111.29	**406,111.72**
16.2 வங்கி மிகுதிகள்		
இலங்கை வங்கி – கொள்ளுப்பிட்டி, 2வது கிளை	17,443,958.19	10,752,105.22
இலங்கை வங்கி – பெருநிறுவன (தலைமைக் காரியாலயம்)	7,360,716.77	10,819,674.38
இலங்கை வங்கி – பம்பலப்பிட்டி	53,890,207.06	142,593,305.33
இலங்கை வங்கி – பெருநிறுவன (TCD)	14,771,515.46	13,953,472.02
இலங்கை வங்கி – சுதந்தர சதுர்க்கம்	719,225.00	380,925.00
இலங்கை வங்கி – தேயிலை மானியம்	37,899,557.29	21,938,330.41
மக்கள் வங்கி	11,927,139.89	25,048,172.04
	144,012,319.66	**225,485,984.40**
16.3 இலங்கை வங்கி பிராந்திய அலுவலக நடைமுறைக் கணக்குகள்		
காலி	668,134.62	236,065.50
மாத்தறை	416,354.34	95,443.09
இரத்தினபுரி	702,144.92	933,772.55
மத்துகம	352,980.50	218,283.40
பண்டாரவளை	425,693.30	90,389.47
கம்பளை	390,947.15	511,142.47
நுவரெலியா	161,477.50	1,147.38
	3,117,732.33	**2,086,243.86**
16.4 இலங்கை வங்கி பிராந்திய அலுவலக சேகரிப்புக் கணக்குகள்		
காலி	401,251.74	14,014.70
இரத்தினபுரி	-	16,228.54
மத்துகம	2,817,634.50	1,560,460.60
பண்டாரவளை	379,374.20	638,996.40
நுவரெலியா	-	11,615.40
	3,598,260.44	2,241,315.64
	151,302,423.72	**230,219,655.62**

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

	2020 (ரூபா)	2019 (ரூபா)
17. கடன் வழங்குனர்கள் மற்றும் விதிகள்		
17.1 கணக்குகள் மூலம் செலுத்தத்தக்கவை		
செலுத்தத்தக்கவை	9,207,524.78	14,891,056.14
கடன் வழங்குனர் கட்டுப்பாடு	447,839.75	-
கடனுக்கான தேயிலை முற்பதிவு வழங்குனர்கள்	24,641.88	26,724.88
கடன் வழங்குனர்கள் மற்றும் விதிகள் – ஐ.அ.இ	76,316.82	2,829,334.15
கடன் வழங்குனர்கள் மற்றும் விதிகள் – சீனா	44,710.80	113,858.71
கடன் வழங்குனர்கள் – தேயிலைக் காணி பதிவிடல்	84,455.00	88,565.00
கடன் வழங்குனர்கள் மற்றும் விதிகள் - மொஸ்கோ	3,057.37	1,230,130.89
பற்பல கடனாளிகள்	24,808,058.70	40,034,757.77
செலுத்தத்தக்க பச்சை இலை மானியம்	912,229.53	912,229.53
	35,608,834.63	**60,126,657.07**
17.2 ஏனைய செலுத்தத்தக்கவை		
பொதுவான வைப்புக்கள்	220,515,162.50	220,156,672.62
மீள்செலுத்தக்கூடிய ஒப்பந்த வைப்புக்கள்	9,000.00	9,000.00
தக்கவைப்பு பண வைப்புக்கள்	22,687,433.42	25,135,125.07
இலங்கை தே.சபையின் உத்தியோகபூர்வ பொதியாளர்	14,505,079.99	18,931,386.08
ஊழியர் கடன் வழங்குனர்கள்	4,697,094.30	4,631,452.39
நிலுவைகள் – பச்சை இலை வைப்பு	10,597,266.91	10,928,763.61
ஊழியர் சேமலாப நிதியம் - செலுத்தத்தக்கவைகள்	3,217,320.96	4,340,579.66
கஸ்டெக் வைப்பு	161,400.00	161,400.00
தக்கவைப்பு ஊக்கத்தொகை – விற்பனை நிலையம்	41,930.42	162,683.88
மாதிரி தேயிலைத்தோட்ட மானியத்திட்டம்	12,079,356.50	17,312,606.50
செலுத்தத்தக்க VAT	2,263,561.90	7,391.62
	290,774,606.90	**301,777,061.43**
17.3 முன்கூட்டிய ரசீதுகள்		
முன்கூட்டிய ரசீதுகள்	200,142.00	142,798.70
நுவரேலியா – விற்பனை நிலையம்	1,620,000.00	1,620,000.00
வர்த்தகக் கண்காட்சி	2,350,000.00	34,900,000.00
அனுமதிப்பத்திரக் கட்டணம்	8,167,900.00	7,603,365.00
நிராகரிக்கப்பட்ட தேயிலை	510,000.00	2,070,000.00
களஞ்சியசாலைகளைப் புதுப்பித்தல்	1,920,000.00	1,905,000.00
தரகர்களை நியமிப்பதற்கான அனுமதிக்கட்டணம்	1,750,000.00	1,750,000.00
சிங்க இலட்சணை மற்றும் தேயிலை இறக்குமதியாளர்களைப் பதிவுசெய்தல்	-	15,000.00
தேயிலைத் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்	1,210,000.00	-
தேயிலைப் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்	50,000.00	30,000.00
தேயிலை ஏற்றுமதியாளர்களைப் புதுப்பித்தல்	34,480,000.00	34,600,000.00
தேயிலைப் பொதியாளர்களைப் புதுப்பித்தல்	2,460,000.00	2,510,000.00

	2020 (ரூபா)	2019 (ரூபா)
தேயிலைக் களஞ்சியசாலைகளை பதிவுசெய்தல்	75,000.00	25,000.00
உள்ளூர் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்	-	30,000.00
தேயிலை ஏற்றுமதியாளர்களை புதுப்பித்தல்	50,000.00	25,000.00
தேயிலை இறக்குமதியளர்களை புதுப்பித்தல்	415,000.00	405,000.00
இ.தே.சபை ஊழியர்களுக்கான மருத்துவக்காப்புறுதி வைப்பு	366,834.00	230,142.00
மொனபோல் வாடகை	108,333.34	754,166.67
விற்பனை நிலையம் – வாடகை வைப்பு	1,235,000.00	1,195,000.00
வைப்பு - BMF	174,643.00	52,443.00
	57,142,852.34	**89,862,915.37**
17.4 திரட்டப்பட்ட செலவுகள்		
திரட்டப்பட்ட செலவுகள்	11,639,019.48	25,737,868.20
திரட்டப்பட்ட செலவுகள் - தி. மற்றும் பரா. வரி	267,125,405.06	20,084,132.63
செலுத்தத்தக்க வட்டி - வங்கிக்கடன்	-	1,072,874.34
	278,764,424.54	**46,894,875.17**
17.5 ஏனைய ஒதுக்கீடுகள்		
ஊழியர் பிரயாணம்	-	689,273.28
பிரயாணம்	5,588,982.27	2,850,683.46
வருடாந்த அறிக்கையை அச்சிடுதல்	-	652,320.00
தணிக்கைக் கட்டணம்	2,400,000.00	1,687,856.00
கருவிகள் மற்றும் அலுவகலத் தேவைகளை அச்சிடுதல்	138,056.71	2,852,163.39
எரிபொருள் மற்றும் மசகு எண்ணைகள்	403,074.00	221,114.50
பத்திரிகைகள் மற்றும் நாளிதழ்கள்	13,010.00	13,580.00
பராமரிப்பு செலவுகள்	513,810.13	653,031.74
அஞ்சல் மற்றும் தொடர்பாடல்	999,488.94	618,039.98
மின்சாரம் மற்றும் நீர்	1,602,642.79	926,871.95
வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	107,500.00	-
சுத்திகரிப்பு சேவைகள்	590,664.62	519,898.20
பாதுகாப்பு சேவைகள்	449,172.00	952,169.34
சட்ட மற்றும் ஏனைய கட்டணங்கள்	54,150.00	123,500.00
மருத்துவ நன்மைகள்	1,648,868.00	1,314,977.00
கொவிட் 19 செலவுகள்	1,464,024.00	-
மேலதிக நேர வேலை மற்றும் நாள் வேதனம்	53,917.47	1,449,778.72
	16,027,360.93	**15,525,257.56**

நிதிக்கூற்றுக்களுக்கான விரிவான அட்டவணைகள்

திசம்பர் 31, 2020 இல் முடிவுற்ற ஆண்டுக்குரியது

18. RPC கடன் மீதிகள்

	RPC விழா முற்பணக்கடன்	இடர்க்கடன்	ஊதிய அதிகரிப்புக் கடன்
ஹொரண பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	11,591,800.00	1,400,846.58	3,666,666.56
ஹஹவத்தை பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	2,004,200.00	-	-
ஹப்புகஸ்தென்ன பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	6,368,560.00	-	972,222.30
உடப்புசல்லாவ பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	4,140,400.00	-	750,000.00
மதுல்சிமா பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	8,453,280.00	-	2,303,057.12
கொட்டக்கலை பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	27,449,465.60	18,056,365.12	19,986,661.90
அக்கரப்பத்தன பிளாண்டேசன்ஸ் லிமிட்டட்	39,607,200.00	33,449,814.86	11,150,423.61
எல்கடுவ பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	8,760,400.00	-	-
பொகொவந்தலாவை தீ எஸ்டேட் பிஎல்சி	-	6,867.47	-
கேகாலை பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	-	3,997.64	-
புசல்லாவை பிளாண்டேசன்ஸ் பிஎல்சி	-	6,380.87	-
தலவாக்கலை தேயிலை எஸ்டேட்	-	6,552.97	-
மத்துரட்ட பிளாண்டேசன்ஸ் லிமிட்டட்	-	-	611,111.15
	108,375,305.60	**52,930,825.51**	**39,440,142.64**

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை - 2020

(ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையின் தமிழ் வடிவம்)

தலைவர்,

இலங்கை தேயிலை சபை.

தேசிய கணக்காய்வுச் சட்ட இலக்கம் 19, 2018, பிரிவு 12 இன் பிரகாரம், இலங்கை தேயிலை சபையின் நிறைவுற்ற 2020 ஆம், திசம்பர் 31, திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான, நிதியியல் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபரின் அறிக்கை மற்றும் ஏனைய சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்

1. நிதியியல் கூற்றுக்கள்

1.1. தகுதிவாய்ந்த கருத்துக்கள்

இலங்கை தேயிலை சபையின் 2020 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானம் மற்றும் செலவுகளுக்கான கூற்று, உரிமை மாற்றங்களுக்கான கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கிட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களில் பொளிப்பினை உள்ளடக்கிய 2020 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் இலக்க உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு சேர்த்து வாசிக்கப்படும். எனது அறிக்கையானது, அரசியலமைப்பின் 154(6) ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் பாராளுமண்டத்தின் அட்டவணைப்படுத்தப்படும்.

எனது அறிக்கையில், "தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை" எனும் தலைப்பின் கீழே விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளைத் தவிர, 2020 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான, இலங்கை தேயிலை சபையின் நிதியியல் நிலைமை மற்றும் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் வருடத்துக்கான காசுப்பாய்ச்சல், ஆகியன இலங்கை கணக்காய்வு தரங்களுக்கமைய உண்மையானதும், நியாயமானதுமாக விளங்குகின்றது.

1.2 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கியல் தரநியமம் 7 இல் காசுப்பாய்ச்சல் தயாரித்தலின் பிரகாரம், மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடத்தில், தொழிற்பாட்டு இழப்புக்களில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிய தேவை காணப்பட்டிருந்தும், தகுதியான மிகையில் மாற்றங்களை ஏற்படுத்திய பின்னரான வருமானத்தில் சபையினால் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மேலும், கடந்த வருடத்தினை விட, இவ்வருடத்தில் தொழிற்பாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள் காரணமாக ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிதிக்குரிய வருமான வரிகளாக ரூபா 144,758,895, நிலையான சொத்து மாற்றங்களுக்காக ரூபா 14,521,855, கடந்த 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய நூலக புத்தகத் தேய்மான செலவுகளாக ரூபா 53,350 மற்றும் இவ்வருடத்துக்கான மாற்றங்களுக்காக ரூபா 653,262 ஒதுக்கப்பட்டதுடன், இது காசுப்பாய்ச்சல் கூற்றின் நிதியியல் போக்கில் பாதிப்பினை ஏற்படுத்தாது.

(ஆ) ஆதனங்களான, ஆய்வுகூட உபகரணங்கள், தளபாடங்கள், பொருத்துகைகள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள், நீர், மின்சாரம் மற்றும் அலங்காரக் கருவிகள் மற்றும் நூலகப் புத்தகங்கள் ஆகியன ரூபா 119,194,204 பெறுமதியுடையவையாக அமைவதுடன், வருடத்தின் இறுதியில் முழுமையாக தேய்மானமடைந்த நிலையில் காணப்படுவதுடன், மேற்குறிப்பிட்ட கருவிகளின் வினைத்திறனான வாழ்வுக்காலம் மீளக்கணிக்கப்படவில்லை என்பதுடன், இலங்கை கணக்கியல் தரநிர்ணயத்தில் 16 இன் 51 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

.

(இ) இலங்கை கணக்கியல் தரநிர்ணய இல 16 இன் 36 ஆம் பந்தியில், சொத்துக்கள், ஆலைகள் மற்றும் கருவிகள் மீள்மதிப்பீடு செய்யப்படும் நேரத்தில், சொத்துக்கள், ஆலைகள் மற்றும் கருவிகளின் அனைத்து வகைகளும் மீள்மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுதல் அவசியமென குறிப்பிடப்பட்டிருந்தும், வருடத்தின் மீளாய்வுக்காலத்தில் தலைமைக் காரியாலயத்தில் அலுவலக் கருவிகள், இயந்திரங்கள் மற்றும் ஏனைய கருவிகள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ஆகியன சபையினால் மீள்மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில் மேற்குறிப்பிடப்பட்ட நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவில்லை.

(ஈ) இவ்வருடத்துக்கான மீளாய்வில், ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்திலிருந்து மொத்தமாக ரூபா 1000 மில்லியன் மற்றும் நிறைவுற்ற ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட நிதியத்திலிருந்து மேலும் ரூபா 509.62 மில்லியன், இலங்கை தேயிலை சபையினால் திறைசேரிக்கு வழங்கப்பட்டது. இத்தொகையானது மீளப்பெறவேண்டிய கடன் தொகையாக நிதியியல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இம் மிகுதிகள் இலங்கை தேயிலை சபைக்கு செலுத்தப்படவேண்டியவையென பொது திறைசேரியின் நிதியியல் கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. மேலும், வருட முடிவின் போதான மீளாய்வின் போது குறிப்பிடப்பட்ட மிகுதிகள் முறையாக சரிபார்க்கப்படவில்லை.

(உ) அமெரிக்காவில் ஜூன் மாதம் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ள சர்வதேச தேயிலைக் வர்த்தக கண்காட்சியில் சிலோன் தேயிலைக்கான காட்சி இடத்தினை ஒதுக்குவதற்காக 2020 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் திகதி அமெரிக்காவின் சிக்காக்கோ நிறுவனத்தின் வங்கிக்கணக்கு இல 811104744 க்கு ரூபா 4,474,728 (USD 24,395) மாற்றப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சர்வதேச ரீதியிலான கொரோனா நோய்த்தொற்றுக் காரணமாக இவ் வர்த்தகக்கண்காட்சியை தற்காலிகாமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், இந்நிகழ்வானது 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடாத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளமையினால், சர்வதேச தேயிலைக் வர்த்தக கண்காட்சியில் சிலோன் தேயிலைக்கான காட்சி இடத்தினை ஒதுக்குவதற்கான பணத்தினை மேற்குறிப்பிட்ட நிறுவனத்தின் கணக்குக்கு மாற்றுமாறு அமைச்சரவை அமைச்சர்களுக்கு 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வின் கீழ் இம் முற்பணமானது, இவ்வருடத்துக்கான செலவாக குறிப்பிட்டப்பட்டுள்ளது. மேலும், இச்செலவினைக் காட்டுவதற்கான பற்றுச்சீட்டு தணிக்கைக்குழுவுக்கு சமர்பிக்கப்படவில்லை.

(ஊ) பயிற்சிகளை வழங்கும் செயற்பாடுகளுக்காக, 2019 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதி மொத்தமாக ரூபா 2,280,165 செலவுசெய்யப்பட்டதுடன், அத்தொகை இலாபக் கணக்கிலிருந்து கழிக்கப்படாமல் செலவுக் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மேற்குறிப்பிடப்பட்ட மேலதிக தொகையானது, செலவுக் கணக்கு மற்றும் இலாபக் கணக்கில் கணக்கிடப்படும்.

(எ) வங்கி சரிபார்ப்பு கடிதத்தின் பிரகாரம், அரச அடமான மற்றும் முதலீட்டு வீட்டுக்கடன் வைப்பிலிருந்து ஈட்டப்பட்ட இலாபத் தொகையான ரூபா 103,877 கணக்கில் காட்டப்படவில்லை.

(ஏ) இலங்கை தேயிலை சபையின் தலைமைக் காரியாலயத்திலுள்ள தேயிலை விற்பனை நிலையத்தில் விற்கப்பட தயார்நிலையிலுள்ள, தனியார் நிறுவனத்திடமிருந்து 2018 ஆம் ஆண்டு கட்டளை இல 18829 இன் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட தேயிலைக்களுக்கான ரூபா 3,645,000 பெறுமதியான சிறிய மற்றும் பெரிய தேயிலை பொதி கடதாசி உறைகளுக்குரிய முறையான ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 1,404,640 பெறுமதியான பாதிக்கப்பட்ட மற்றும் முறையற்ற உறைகள் வழங்குனருக்கு திருப்பியளிக்கப்பட்டதுடன், இது 2020 ஆம் ஆண்டு திசம்பர் 31 இல் திகதியில் செலவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ) நிலையான வைப்புக்குரிய வருடத்துக்கான வருமானமான ரூபா 207,342,040 அசையும் சொத்துக்களின் கீழ் காட்டப்படாமல் நிலையான வைப்பு முதலீட்டின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) மாதிரி தேயிலைக் காணிகள் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு, இலங்கை வங்கியினால் காசோலை இல 562353 மூலமாக ஒருவருக்கு மானியமாக செலுத்தப்பட்ட ரூபா 300,000 ஆனது, அத்திட்டத்தில் பங்குபெற குறிப்பிட்ட நபருக்கு விருப்பமின்மைனால் மீள் அறவிடப்பட்ட ரூபா 300,000 நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு திசம்பர் 31 இல் திகதியில், செலவுக்கணக்கில் வருமானமாக சேர்க்கப்படுவதற்குப் பதிலாக மானிய உரிமையாளருக்கு செலுத்தப்படவேண்டிய தொகையாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
(ஓ) ஆய்வுகூடங்கள், அலுவலக உபகரணங்களின் தொகை மதிப்பீடுகள் மற்றும் வெற்றுப்பெட்டிகளினால் கிடைக்கப்பெற்ற வருமானங்கள் முறையே, ரூபா 2,461,600 ரூபா 8,628,347 மற்றும் ரூபா 3,553,486 ஆக இருந்தும், சரிபார்ப்பு அறிக்கையின் பிரகாரம், ஆய்வு அறிக்கைகளினாலான ஆய்வுகூட வருமானம், அலுவலக உபகரணங்களின் தொகை மற்றும் வெற்றுப்பெட்டிகளினால் கிடைக்கப்பெற்ற வருமானங்கள் முறையே, ரூபா 7,050,200 ரூபா 6,912,816 மற்றும் ரூபா 4,674,398 ஆகக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே, இவற்றுக்கிடையேயான வித்தியாசம் ரூபா 7,425,043 ஆக அவதானிக்கப்பட்டது.

நான், இக்கணக்காய்வினை, இலங்கை கணக்கியல் தரநியமங்களுக்கமைவாக நிறைவேற்றியுள்ளேன். நிதியியல் கூற்றுக்குரிய கணக்காய்வுகளுடன் தொடர்புடையதாக, "கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்" எனும் தலைப்பின்கீழ் மேலும் விபரிக்கப்படுவது, கணக்கியல் தரநியமங்களுக்குக் கீழேயான எனது கடமைப்பாடாகும். கணக்காய்வு நடவடிக்கைக்காகப் பெற்றுக்கொண்ட ஆதராரங்கள், எனது தரமான கருத்துக்களை முன்வைக்கப் போதுமானதாகவும், பொருத்தமானதாகவும் அமைந்தது என நம்புகின்றேன்.

1.3 இலங்கை தேயிலை சபையின் வருடாந்த அறிக்கை 2020 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள்

இதில், இக்கணக்காய்வு அறிக்கையின் நிறைவில், 2020 ஆம் ஆண்டு இலங்கை தேயிலை சபையின் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, நிதியியல் கூற்றுக்களில் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத, இக்கணக்காய்வின் நிறைவில் என்னிடம் ஒப்படைக்கப்படவுள்ள ஆவணங்கள் உள்ளடங்குகின்றன. முகாமைத்துவமானது ஏனைய தரவுகளுக்குப் பொறுப்பாக தொழிற்படும்.

நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களில் ஏனைய விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பவில்லை என்பதுடன், அவை தொடர்பில் எந்தவிதமான சான்றுதழ்களோ, கருத்துக்களோ தெரிவிக்கப்படவில்லை.

நான், எனது கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடங்கள், அவ்விடயங்கள் நிதியியல் கூற்றுக்களுடன் அளவியல் ரீதியாக பொருந்தும் தன்மை அல்லது கணக்காய்வு செயற்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்களினால் பெறப்பட்ட அறிவு தொடர்பில் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நான், இலங்கை தேயிலை சபையின், 2020 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கையினை வாசிக்கையில், அளவுகள் தொடர்பில் பிழையான கருத்துக்கள் கண்டறியப்படுகையில், அவற்றினைத் திருத்தும்வகையில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுதல் அவசியமாகும். இன்னும், அப்பிழைகள் திருத்தப்படாவிடின், சட்டத்தின் பிரிவு 154 (6) இன் பிரகாரம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் அட்டவணைப்படுத்தப்படும்.

1.4 நிதியியல் கூற்றுக்களில் நிர்வாகம் மற்றும் ஆளும் தரப்பினரின் பொறுப்புகள்

இலங்கை கணக்கியல் தரநியமங்களுக்கு ஏற்ப, நிதிநிலை அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் வெளிப்படுத்தல் மற்றும் மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவு தவறான அறிக்கைகளிலிருந்து விடுபட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உட்கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் ஆகியன மேலாண்மை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இலங்கை தேயிலை சபையின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதில், தொடர்ச்சியான செயற்பாட்டின் சாத்தியத்தன்மையை தீர்மானிப்பது தலைமை நிர்வாகத்தின் பொறுப்பாகும். மாற்றுவழிகள் எதுவும் கிடைக்காத நிலையில், சபையைக் கலைக்க அல்லது அதன் தொழிற்பாடுகளை நிறுத்த நிர்வாகம் முடிவுசெய்யும் சூழ்நிலைகளைத் தவிர, தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைப்பதும் மற்றும் சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான விவரங்களை வெளியிடுவதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிதி கூற்றுக்களின் அறிக்கையிடல் செயற்பாடுகளின் பொறுப்பானது ஆளும் தரப்பினருடையதாகும்.

தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பகுதிப்பிரிவு 16 (1) க்கமைய, சபையின் வருடாந்த நிதியியல் கூற்றுக்களை சரியான நேரத்தில் தயாரிக்க, சொந்த வருமானம், செலவீனங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பொருத்தமான முறையில் பராமரிப்பது அவசியமாகும்.

1.5 நிதியியல் கூற்றுக்களில் நிர்வாகம் மற்றும் ஆளும் தரப்பினரின் பொறுப்புகள்

ஒட்டுமொத்தமான நிதியியல் கூற்றுக்களும், மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக, தவறான கூற்றாக அமைவதைத் தவிர்த்து, எனது கருத்துக்களை உள்ளடக்கிய தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதற்கான நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதமானது ஒரு குறிப்பிடத்தக்க சான்றிதழாக அமைந்தாலும், இலங்கை கணக்கியல் தரநியமங்களின் பிரகாரம் தணிக்கை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது, எப்பொழுதும் அளவுசார் தவறான கூற்றுக்கள் வெளிப்படுத்தப்படும் என உறுதியளிக்கவில்லை. மோசடிகள் மற்றும் பிழைகள், தனித்தனியாக அல்லது கூட்டாக ஏற்படும் விளைவுகளால் அளவுசார் தவறான கூற்றுக்கள் ஏற்படலாம். அத்துடன், இவ் நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு, பொருளாதார முடிவுகளை எடுக்கும் பயனாளிகளுக்கு தாக்கங்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை கணக்கியல் தரநியமங்களுடன் தணிக்கையின் ஒரு பகுதியாக, தொழிற்திறனுள்ள தீர்மானங்கள் மற்றும் தொழிலிலான கேள்வித் திறனுடன், இக் கணக்காய்வினை நடத்தியுள்ளேன். மேலுமாக;

- மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக உருவாகக்கூடிய, நிதியியல் கூற்றுக்களின் பிழையான அளவுடைய கருத்துக்களினால் ஏற்படும் அபாயத்தினை அடையாளங்கண்டு, ஆராயும் போது, அந்நிலைமைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம், மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய அபாயங்களைத் தவிர்ப்பதற்காக, போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதன் அடிப்படையில் எனது கருத்து உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரு மோசடியால் ஏற்படும் விளைவானது, ஒரு தவறான அறிக்கை, மற்றும் உள்கூட்டுகள், போலியான கையொப்பம், திட்டமிட்டு தவிர்ப்பது அல்லது உட்கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பது போன்றவற்றினால் ஏற்படும் மோசடியின் விளைவைக் காட்டிலும் கடுமையானதாகும்.

• நிலைமைகளுக்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு செயற்பாடுகளை திட்டமிடுவதற்கு, சபையின் உட்கட்டுப்பாடுகள் குறித்து புரிந்துணர்வுகள் பெறப்பட்டாலும், உட்கட்டுப்பாட்டின் செயல்திறன் தொடர்பான கருத்தை வெளிப்படுத்துவது இதன் நோக்கமாக அமையாது.

• கணக்கியல் கொள்கைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் நிர்வாகத்தினால் உருவாக்கப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளின் பொருத்தமானதன்மை ஆகியன மதிப்பீடு செய்யப்பட்டன.

• நிகழ்வுகள் மற்றும் பதவிநிலைகள் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பில் நிலவும் நிச்சயமற்ற தன்மையின் அளவில் தொடர்பில், முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வு முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு, கணக்கியல் நடவடிக்கைகளுக்காக, நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையைப் பயன்படுத்துவதற்கான சரியான தன்மை குறித்து முடிவு எடுக்கப்பட்டன. இதில் அளவிடக்கூடிய நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதிக்கூற்றுக்களினால் உருவாக்கப்பட்ட வெளிப்பாடுகள் தொடர்பில், எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக அமையாத பட்சத்தில், எனது கருத்து மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிகழ்வுகள் மற்றும் பதவி நிலைகளினால், தொடர்ச்சியான இருப்பினை நீக்க முடியும்.

• வெளிப்பாடுகளுடன் கூடிய நிதியியல் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்துகை, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன், அதற்கான அடிப்படையான பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகள் நிதியியல் கூற்றுக்களில் சரியான மற்றும் நியாயமான முறையில் சேர்க்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிய மதிப்பீடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

எனது கணக்காய்வின் போது அடையாளங்காணப்பட்ட, குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள், உள் கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் ஏனைய தரவுகளினூடாக ஆளும் கட்சிகளுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பிரகாரம், பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் சிறப்பு சட்டப்பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 12 (a) இன் தேவைப்பாடுகளுக்கமைய "தகுதியுடைய கருத்துக்கான அடிப்படைகள்" எனும் தலைப்பின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள விபரங்களின் விளைவுகள் தவிர்ந்த, கணக்காய்வு செயற்பாடுகளுக்குத் தேவையான அனைத்து தரவுகள் மற்றும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், பொருத்தமான நிதியியல் அறிக்கைகள், எனது தேர்வில் வெளிப்படுத்தப்பட்டது போன்று, சபையினால் பராமரிக்கப்படும்.

2.1.2. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 6 (1) (d) (III) க்கமைய, சபையின் நிதியியல் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் பொருந்துவதாக அமைந்துள்ளன.

2.1.3. வெளிப்படுத்தப்பட்ட நிதியியல் கூற்றுக்களில், 1.2 (ஆ), (இ) மற்றும் (ஈ) மற்றும் 2.2.2 (அ), (இ) மற்றும் (ஈ) மற்றும் 3 (அ), (ஆ), (ஈ) லான அவதானிப்புகள் தவிர்ந்த ஏனையவை , கடந்த வருடத்தில், தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 6 (1) (d) (IV) இன் தேவைப்பாடுகளுக்கமைய, என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள், வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. இது பின்பற்றப்பட்ட செயற்பாட்டு முறைமைகள், பெறப்பட்ட ஆதாரங்கள் மற்றும் அளவுசார் உண்மைகள் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்தமையினால், பின்வரும் கருத்துக்களை முன்வைப்பதற்கு, எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை;

2.2.1. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018, பிரிவு 12 (d) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, இலங்கைத் தேயிலை சபையின், நிர்வாகக்குழுவின் எந்தவொரு உறுப்பினரும், நேரடியாகவோ அல்லது இலங்கை தேயிலை சபையின் ஈடுபாட்டுடன் எந்தவொரு ஒப்பந்தத்தினூடாகவோ, வழக்கமான வணிக அமைப்பிற்கு வெளியே, ஒப்பந்தமொன்றினைப் பேணுதல்.

2.2.2. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 12 (f) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த, இலங்கை தேயிலை சபையின், ஆளும் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒரு குறிப்பிட்ட எழுதப்பட்ட சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது சிறப்பு உத்தரவுகளுக்கு மாறாக இது தொடர்ந்தது.

சட்டங்கள், விதிகள் / உத்தரவுகள் பற்றிய குறிப்பு	அவதானிப்புக்கள்
(அ) இலங்கை தேயிலை சபைச் சட்டம் இல 14, 1975 இன், 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள்	சட்டப்பிரிவுகளுக்கமைய, செஸ் வரிவிதிப்பு தேயிலை நிதியில் வரவு வைக்கப்பட வேண்டும். இருப்பினும், அது பொது திறைசேரியில் வரவு வைக்கப்பட்டுள்ளது
(ஆ) இலங்கை ஜனஜானய சோசலிசக் குடியரசின் நிதியியல் விதிமுறைகள் 751	நிதியியல் விதிமுறைகளுக்கமைய, தொகைகளுக்குரிய ஆவணங்கள் தலைமைக்காரியாலத்திலுள்ள களஞ்சியசாலையில் பராமரிக்கப்படும்.
(இ) நிதிச் சட்டம் இல 38, 1971 பிரிவு 11	சபையினால் 2020 ஆம் ஆண்டு திசம்பர் 31 இல், மொத்தம் ரூபா 7,411,278,407 நிலையான மற்றும் குறுகியகால அடிப்படையில் வைப்பிலிடப்பட்டிருந்தும், இதற்குரிய ஒப்பந்தங்கள், அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரிடமிருந்து பெறப்படவில்லை.
(ஈ) செப்டம்பர் 21, 2018 அன்று நடைபெற்ற பொது நிறுவனங்களுக்கான குழுவில் அமைக்கப்பட்ட விதிகள்.	கடந்த 2019 ஆம் ஆண்டில், களைநாசினி இரசாயனக்கலவை ஆய்வு இயந்திரம் ரூபா 32,132,088 செலவில் கொள்வனவு செய்யப்பட்டது. இது சபையினால் எதிர்பார்க்கப்பட்ட விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப அமையாததினால், பயன்படுத்தப்படவில்லை. இருந்தும், 11 வருடங்கள் கடந்தும் இதற்குரிய உள்ளக ஒழுக்காற்று விசாரணைகள் இன்னும் நடைபெறவில்லை.

2.2.3. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பிரிவு 12 (g) இன் தேவைகளுக்கமைய, சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளுக்கு பொருந்தாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.4. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பிரிவு 12 (h) இன் தேவைகளுக்கமைய, சபையின் வளங்கள் சிக்கனமாகவும், திறமையாகவும், திறம்படவும் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர, கொள்வனவுகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேயிலையிலுள்ள கிருமிநாசினி எச்சங்களை பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வுகூடத்தில் பொருத்தப்பட்டுள்ள GCMS/MS இயந்திரம் தொழிற்படாமையினால் அகற்றப்பட்டுள்ளதுடன், புதிய இயத்திரத்தினைப் பொருத்துவதற்காக 2018 மற்றும் 2019 நிதிகளிலிருந்து ரூபா 50,000,000 ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்தும், இந்நடவடிக்கைக்காக 2020 ஆம் ஆண்டு கொள்முதல் திட்டத்தில் ரூபா 60,000,000 கணிக்கப்பட்டிருந்தும், இக்கொள்முதல் நடவடிக்கை 2021 ஆம் ஆண்டு ஏப்பிரல் 30 ஆம் திகதி வரை நிறைவுசெய்யப்படவில்லை.

(ஆ) இலங்கை தேயிலை சபையின் நுவெரெலியா பிராந்திய அலுவலகத்தின் தேயிலை விற்பனை நிலையத்தின் தொழிற்பாடுகள் மீளச் செலுத்தக்கூடிய திறன் தொடர்பிலான பாரிசீலனையை மேற்கொள்ளாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு, ஆறு மாதங்களுக்கு ரூபா 8,162,296 க்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம், மே 27, 2019 லிருந்து மே 26, 2020 வரையான காலத்துக்குரிய குத்தகைத்தொகை ரூபா 100,000 மற்றும் மே 27, 2020 லிருந்து மே 26, 2021 வரையான காலத்துக்குரிய குத்தகைத்தொகை ரூபா 105,000 அறவிடப்படவில்லை. எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டின் மூன்று மாதத்துக்குரிய வாடகை மாத்திரம் கிடைக்கப்பெற்றதுடன், 2021 ஆம் ஆண்டின் இத் தணிக்கை ஆய்வு மேற்கொள்ளப்பட்ட திகதிவரை எந்தவிதமான வாடகைப்பணமும் கிடைக்கப்பெறவில்லை. இவ்வாண்டுக்குரிய நிதியியல் கூற்றின் பிரகாரம், மொத்தமாக ரூபா 900,000 குத்தகைத்தொகையிலிருந்து கழிக்கப்படவேண்டிய தொகையாக காட்டப்பட்டுள்ளது. அத்துடன், செலுத்தப்படவேண்டிய தவணைக்கட்டணம் ரூபா 35,000 மற்றும் 1% தண்டப்பணம், கடையின் மின்சார மற்றும் குடிநீர்த் நுகர்வுக்காக மொத்தமாக ரூபா 99,267 அறவிடப்பட்டது. மேலும், வருடாந்த விற்பனையின் 02% இலங்கை தேயிலை சபைக்கு செலுத்தப்பட வேண்டுமென்பதுடன், இப்பெறுமதி கணக்காய்வில் குறைவாகக்காட்டப்பட்டுள்ளது.

3. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(a) கந்தானையில் அமையப்பெற்றுள்ள ஜனத்தா எஸ்டேட் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான சிலோன் தனிலை அருங்காட்சியகத்தின் உரிமையை, இலங்கை தேயிலை சபைக்கு மாற்றுவதற்கான கலந்துரையாடல்கள் நிறைவுபெற்று, தீர்மானங்கள் எடுக்கப்பட்ட நிலையில் 2012 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி நடந்தேறிய பொது நிறுவனங்களுக்குரிய குழுவின் கட்டளைப்படி, ஜனத்தா எஸ்டேட் அபிவிருத்தி சபையிடமிருந்து ரூபா 25,000,000 கிடைக்கப்பெறவேண்டிய தொகையாகக் காணப்படுவதுடன், தணிக்கை தினமான 2021 ஆம் ஆண்டு ஏப்பிரல் 30 ஆம் திகதி வரை இறுதித்தீர்மானங்கள் எட்டப்படவில்லை. எவ்வாறாயினும், இத்துடன் எட்டு ஆண்டுகள் நிறைவேறியுள்ளன. அருங்காட்சியகத்தின் உரிமையை மாற்றுதல் மற்றும் கடன் தொகையினை வழங்குதல் தொடர்பில் இரு தரப்பினருக்குமிடையே எந்தவிதமான ஒப்பந்தகளும் கைச்சாத்திடப்படவில்லை. மேலும், நிர்வாக சபை தீர்மான இல 2020/492/65 இன் படி ஜனத்தா எஸ்டேட் அபிவிருத்தி சபையிலுள்ள ஊழியர்களுக்கான சம்பளத்தினை வழங்கும் வகையில், இலங்கை தேயிலை சபையினால் 27.02.2020 ஆம் திகதியன்று கடன் தொகையாக ரூபா 10,000,000 கடனாக வழங்கப்பட்டது.

(b) முன்னைநாள் அமைச்சர், அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஏனைய அதிகாரிகள் உட்பட குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப்பயணத்துக்காக மொத்தமாக ரூபா 975,257 செலவுசெய்யப்பட்டுள்ளதுடன், இது 03 தொடக்கம் 04 வருடங்களில் கிடைக்கப்பெறப்படவேண்டிய மிகுதியாகக் காட்டப்பட்டுள்ளதுடன், இதனை மீள அறவிட தணிக்கை தினமான 30.04.2021 அன்று வரை தோட்டத்தொழிற்துறை அமைச்சினால் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

(c) தேயிலை ஹோல்டிங்க்ஸ் அபிவிருத்தி அதிகாரசபை, கலுபோவிட்டியாய தேயிலைத் தொழிற்சாலை மற்றும் தோட்டத்தொழிற்துறை அமைச்சின் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப்பயணங்களுக்காக மொத்தமாக ரூபா 631,061 செலவு செய்யப்பட்டுள்ளதுடன், இது கடந்த இரண்டு, மூன்று வருடகாலமாக பெறத்தக்க தொகையாக நிதியியல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இத் தணிக்கை செயற்பாடு மேற்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் இத்தொகையினை மீள அறவிடுவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

(d) சர்வதேச தேயிலை விருந்துபசார நடவடிக்கைகளுக்காக கடந்த 2017 ஆம் ஆண்டு, 15 நாடுகளின் தூதரகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 51,604,457 இன் மிகுதிப்பணம் ரூபா 1,810,840 இவ்வாண்டின் இறுதிவரை மீள்அறவிடப்படவில்லை.

(e) நுவரெலியா தேயிலை வீட்டின் மிகுதி மொத்தம் ரூபா 261,060 கிடைக்கத்தக்க வருமான மிகுதியாக கடந்த ஆறு வருடங்களாக முன்னோக்கி நகர்த்தப்படுவதுடன், தணிக்கை தினமான 30.04.2021 அன்று இத்தொகையினை மீள் அறவிடுவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(f) தனியார் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தின் பிரிவு 4.3 இன் பிரகாரம், வெறுமையான பெட்டிகளின் மீளாய்வின் கீழ், மொத்தத் தொகையான ரூபா 1,313,986 வருடத்தின் இறுதித் திகதியில் மீள் அறவிடப்படுவது அவசியமாக இருந்தும், அத்தொகை மீள அறவிடப்படவில்லை. கடந்த 2019 ஆம் ஆண்டுக்குள், குறிப்பிட்ட மிகுதித் தொகையிலிருந்து ரூபா 1,312,231 அறவிடப்படவிருந்தது.

(g) கடந்த 2018 ஆம் ஆண்டிலிருந்து, மீளாய்வுக்காலம் வரையான தொடரும் வரி மிகுதி ரூபா 771,552 மாற்றீட்டுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

(h) கடந்த 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பிரயாணச்செலவுகள், அலுவலகக் கருவிகள், எரிபொருட்கள் மற்றும் மேலதிக வேலை நேரக்கொடுப்பனவுகளுக்கான மொத்தச் செலவு ரூபா 595,816 நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டு திசம்பர் 31 வரை முழுமையாக செலுத்தப்படவில்லை.

(i) கடந்த 2012 ஆம் ஆண்டு சிரியாவில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த "பூட்எக்ஸ் சிரியா" கண்காட்சியில் கலந்துகொள்வதற்காக, கடந்த 2011 ஆண்டு இலங்கை தேயிலை சபையினால் சர்வதேச தனியார் நிறுவனமொன்றுக்கு முற்பணமாக ரூபா 629,261 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், யுத்த சூழ்நிலை காரணமாக கண்காட்சி நிறுத்தப்பட்டதுடன், இவ்வாண்டின் மீளாய்விலும் அத்தொகை மீள அறவிடப்படவில்லை.

(j) கடந்த 2015 ஆண்டிலிருந்து 2018 வரையான ஒப்பந்தக்காலம் நிறைவுற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியான நிலையிலும், ஒப்பந்தக்காலத்தில் தக்கவைப்புத் தொகையான ரூபா 9,550,530 ஐ மீளச்செலுத்துவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(k) தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் பச்சைத் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும்பொருட்டு, தேயிலை சபையில் 2000 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான 18 வருட காலத்துக்கு வைப்புச் செய்யப்பட்டுள்ள ரூபா 7,061,339 பணத்தினை மீளச்செலுத்துவதற்குரிய எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இது முழு வைப்புத் தொகையான ரூபா 10,597,267 இன் 67% ஆகும்.

(l) கடந்த 2015 ஆம் ஆண்டு காலப்பகுதில் பச்சைத் தேயிலைக் கொழுந்துக்கான அதிகுறைந்த விலையாக ரூபா 80 ஐ பேணும் வகையில், பச்சைத் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும்பொருட்டு, நிறைவுற்ற திசம்பர் 31, 2015 இல் ஒதுக்கப்பட்ட மானியத்தொகை ரூபா 6,738,000,000 இல், பொது திறைசேரிக்குக் கழிக்கப்படாத மிகுதித் தொகையான ரூபா 912,229 தேயிலை சபைக்குக் கிடைக்கப்பெற்றது.

(m) கடந்த 2017 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் மொஸ்கோ ஆகிய நாடுகளின் வெளிநாட்டு தூதரகங்களிலிருந்து, கிடைக்கத்தக்க தொகையான முறையே ரூபா 249,130 மற்றும் ரூபா 203,847 களுக்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

(n) பத்து ஏக்கர்களுக்கு மேற்பட்ட நடுத்தர மற்றும் பெரியளவிலான எஸ்ரேட்டுக்களில், ஒரு இலட்சம் மரக்கன்றுகளைக் கொண்ட 138 நாற்றுப்பண்ணைகள் மற்றும் 500 சிறியளவான நாற்றுப்பண்ணைகளை நிறுவுவதற்கு, தேயிலை சிறுதொழில் அதிகாரசபையின் ரூபா 250 மில்லியன் உள்ளடங்களாக ரூபா 450 இலங்கை தேயிலை சபையின் ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிதிலிருந்து ஒதுக்கப்படுவதற்கான தீர்மானமானது பணிப்பாளர் வாரியத்தினால் தீர்மான இல 2020/491/45 மற்றும் 2020/498/238 இன் ஊடாக நிறைவேற்றப்பட்டது. தேயிலை ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மூலோபாயத்துக்கான வரி சேகரிப்புக்குரிய ஒக்டோபர் 27, 2010 யிலான வர்த்தமானிக் கட்டளை இல 1677/14 இன் பிரகாரம், ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிதியத்திலிருந்தான பணமானது, இலங்கைக்குள் மற்றும் இலங்கைக்கு வெளியேயான ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். ஆகவே, இச்செலவினூடாக மேற்குறிப்பிட்ட விதி மீறப்பட்டுள்ளது.

அத்துடன், பணிப்பாளர் வாரியத்தின் தீர்மானத்துக்கமைவாக இக்குறிப்பிட்ட தொகையானது வட்டியில்லாத கடனாக வழங்கப்பட தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பினும், ஆகஸ்ட் 31, 2020 அன்று தேயிலை சிறுதொழில் அதிகாரசபைக்கு ரூபா 75 மில்லியன் வழங்கப்பட்டது, இவ்வாண்டுக்கான மீளாய்வில் செலவாகக் கருதப்பட்டிருப்பினும், இன்னும் இரு தரப்பினருக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை.

(o) செயற்பாட்டினை அடிப்படையாகக்கொண்ட செலவுக் கட்டமைப்பினை நிறுவுவதற்காக பட்ஜெட் ஆவணத்தில் கொள்முதல் செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், நிபுணத்துவ சேவைக்காக ரூபா 850,000 வழங்கப்பட்டது செலவுக்கணக்கில் பதியப்பட்டது அவதானிக்கப்பட்டது.

(p) இலங்கை தேயிலை சபைக்குச் சொந்தமான முறையே ரூபா 1,900,000 மற்றும் ரூபா 1,800,000 பெறுமதியான இரண்டு கப் வாகனங்கள், 2017 நவம்பர் 28 ஆம் திகதியன்று தோட்டத்தொழிற்துறை முகாமைத்துவ தேசிய நிறுவகத்தின் பாவனைக்காக வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், குறிப்பிட்ட தொகையினை மீள அறவிடவோ அல்லது வாகனங்களின் உரிமைத்தன்மையினை சட்டரீதியாக மாற்றவோ, தணிக்கை தினமான 2021 ஏப்பிரல் 30 வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. மீளாய்வு வருடத்தில், இலங்கை தேயிலை சபையினால் வாகன வாடகைக்காக ரூபா 2,665,121 செலவு செய்யப்பட்டுள்ளது.

(q) மாதிரி தேயிலைத் தோட்டத்திட்டம் – 2019 இன் கீழ் நான்கு பிரதான அவத்தைகளின் கீழ் மானியத்தொகையினை வழங்கத் திட்டமிடப்பட்டதுடன், இதில் முதலாம் அவத்தையான "தேயிலைக் காணிகளின் நிலவமைப்பியலை ஏற்படுத்தலுக்கான மானியத்தொகையாக ரூபா 2,100,000, நிறைவுற்ற 2020 திசம்பர் 31 ஆம் திகதியன்று ஒப்புதலளிக்கப்பட்ட 07 நபர்களுக்கு வழங்கப்படவில்லையென்பதுடன், முதலாம் அவத்தையின் கீழ் தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக நிலத்தினைத் தயார்செய்யும் பொருட்டு 07 நபர்களுக்கு தலா ரூபா 300,000 வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கான இரண்டாம் அவத்தைக்குரிய மானியம் நிறைவுற்ற 2020 திசம்பர் 31 ஆம் திகதியன்றும் வழங்கப்படவில்லை.

(r) உள்ளூர் நுகர்வுக்காக அல்லது ஏற்றுமதிகளுக்காக தேயிலை பொதியிடல் செயற்பாடுகளில் ஈடுபடும் பொதியாளர்களுக்குமான கட்டளைகள் 1986 ஆம் ஆண்டு ஜனவரி 28 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி இல 386/13 ஊடாக ஒப்புதலளிக்கப்பட்டன. இவ் வர்த்தமானியின் பிரிவுகள் 04 மற்றும் 06 களின் பிரகாரம் பதிவுக்கட்டணம் ரூபா 1000 மற்றும் பதிவு புதுப்பித்தல் கட்டணம் ரூபா 500 ஆகியன முறையாக புதுப்பிக்கப்படாதபோதிலும், பதிவுக்கட்டணத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவும், பதிவு புதுப்பித்தல் கட்டணத்தில் எந்தவிதமான மாற்றங்களையும் ஏற்படுத்தாமலும் இருப்பதற்கான நடவடிக்கைகள் இலங்கை தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே, தேயிலை சபையானது கடந்த 2015 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூர் பொதியாளர்களின் பதிவுகளை புதுப்பித்தலினூடாக கிடைக்கப்பெறும் வருமானத்தை இழந்ததுடன், நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டில் முறையான அனுமதியின்றி அறவிடப்பட்ட மொத்த பதிவுக்கட்டணம் ரூபா 1,303,800 ஆக அமைந்தது.

(s) நிறைவுற்ற 2020 ஆம் ஆண்டின் இறுதியில், தேயிலை சபையில் பதியப்பட்ட தேயிலைப் பொதியாளர்களின் எண்ணிக்கை 758 ஆக அமைந்ததுடன், இதில் 2020 ஆம் ஆண்டில் புதிதாக பதியப்பட்ட தேயிலைப் பொதியாளர்கள் தவிர்ந்த ஏனையோரின் எண்ணிக்கை 538 ஆகவும் அமைந்தது. மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையை விட, ஏறக்குறைய 212 நபர்கள் தங்களது பதிவுகளைப் புதுப்பித்ததுடன், இது முழுப்பெறுமதியில் 28% ஆகும். ஆகவே, பதிவுகளைப் புதுப்பிப்பதில் சபையின் கண்காணிப்பானது திருப்திகரமானதாக அமையப்பெறவில்லை.

(t) மேலே (r) இல் குறிப்பிடப்பட்ட விசேட வர்த்தமானியில் பிரிவு 06 இன் பிரகாரம், பொதியிடல் செயற்பாடுகளுக்கான அனைத்துப் பதிவு நடவடிக்கைகளும் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்யப்படுதல் வேண்டும். அத்துடன், பிரிவு 08 இன் பிரகாரம், ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட தேயிலைப் பொதியாளரும் உள்ளூர் விற்பனைக்குரிய தேயிலைப் பொதிகளுடன், அவற்றின் தேயிலை மாதிரிகளை சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும், ஏற்கனவே சபையில் பதியப்பட்ட தேயிலைப் பொதியாளர்கள், இத்தேவைப்பாடுகள் எதுவுமின்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மேலும், பணிப்பாளர் வாரியப்பத்திர இல 2013/420 இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, உள்ளூர் நுகர்வுக்குப் பொருத்தமான தேயிலை தொடர்பான ஏதாவது கண்காணிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதாயின், அவை மூன்று மாதத்துக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்படுவது அவசியமாக அமைவதுடன், அது தணிக்கை செயற்பாடுகளின்போது சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே, தணிக்கை செயற்பாடுகளின் போது, உள்ளூர் நுகர்வுக்குப் பொருத்தமல்லாத தேயிலைகள் சந்தையில் விற்பனையாவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

(u) கடந்த 2020 மே மாதம் 15 ஆம் திகதி, முன்னாள் பணிப்பாளரின் (ஊக்குவித்தல்) சேவையானது, விளம்பரத்துக்கான விசேட தொழிற்திறன் நிபுணராக, அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலின்றி பணிப்பாளர் வாரியத்தினால் நீடிக்கப்பட்டதுடன், அனுமதியளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு முறைமைகள் அல்லது நிபுணர்களை பணிக்கமரத்துவதற்கான சுற்றுநிருபங்கள் எதுவும் இல்லாமையினால் கொடுப்பனவாக ரூபா 1,829,930 செலுத்தப்பட்டது.

(v) இலங்கை தேயிலை சபையின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம், கடந்த 2011 ஆம் ஆண்டு சிலோன் தேயிலையின் சர்வதேச உற்பத்திப்பங்கு 18% ஆக அமைந்த தருணத்தில், சிலோன் தேயிலையின் ஊக்குவித்தலுக்கான ஐந்துவருட மூலோபாயத்திட்டமானது கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது 2020 திசம்பரில் எதிர்பார்த்த அளவில் அமையப்பெறவில்லை. சர்வதேச தேயிலைக் குழாமின் 2020 ஆம் ஆண்டுக்குரிய நாளிதழின் படி, சிலோன் தேயிலையின் சர்வதேச உற்பத்திப்பங்கு 14.6% குறைவடைந்துள்ளது.

கையொப்பமிட்டவர்

டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் நாயகம்

இலங்கை தேயிலை சபையின் அலுவலகங்கள்

தலைமை அலுவலகம்

இலங்கை தேயிலை வாரியம்
574, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை
பி.ஒ. பெட்டி: 1750, கொழும்பு, இலங்கை
தொலைபேசி: 011 2582121 / 011 2583687
அவசர தொலைபேசி எண்: 011 2587814
தொலைநகல்: 011 2582122
மின்னஞ்சல்: teaboard@pureceylonte.com
இணையதளம்: www.pureceylontea.com

தலைவர்
தொலைபேசி: 011 2587814/2590968
தொலைநகல்: 011 2585701
மின்னஞ்சல்: *chairman@pureceylontea.com*

பொது இயக்குனர்
தொலைபேசி: 011 2587814/2508991
தொலைநகல்: 011 2582122
மின்னஞ்சல்: dgsltb@pureceylontea.com

தேயிலை ஆணையர் பிரிவு
தேயிலை ஆணையர்
தொலைபேசி: 0112580182/2580152/2502485/2584845/2587814/2587773
தொலைநகல்: 011 2580161
மின்னஞ்சல்: tcd@pureceylontea.com

தேயிலை ஊக்குவிப்பு பிரிவு
இயக்குனர் (தேயிலை ஊக்குவிப்பு)
தொலைபேசி: 0112583343/2587814/2581418/2580169
தொலைநகல்: 011 2587341
மின்னஞ்சல்: promotion@pureceylontea.com

தேயிலை ஏற்றுமதி பிரிவு
துணை தேயிலை ஆணையர் (ஏற்றுமதி)
தொலைபேசி: 011 2502485/2584845/2587814/2504090/2587773
தொலைநகல்: 011 2584844
மின்னஞ்சல்: exports@pureceylontea.com

பகுப்பாய்வு ஆய்வகம்
இயக்குனர் (ஆய்வகம்)
தொலைபேசி: 011 2587814/2581576
தொலைநகல்: 011 2581576
மின்னஞ்சல்:lab@pureceylontea.com

பிராந்திய அலுவலகங்கள்

கம்பளை

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
140, அம்பகமுவ வீதி, கம்பொல
தொ.பேசி/ தொ.நகல்: 081-2352279
ஈ-மெயில்: atcgampola@pureceylonte.com

மாத்தறை

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
23, அழுத்மாவத்தை,
உயன்வத்தை,மாத்தறை
தொ.பேசி/ தொ.நகல்: 041-2222636
ஈ-மெயில்: atcmatara@pureceylonte.com

பதுரலிய

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
281, வத்துறன வீதி, பதுரலிய
தொ.பேசி/ தொ.நகல்: 034-2247444
ஈ-மெயில்: atcmathugama@pureceylonte.com

இரத்தினபுரி

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
61/1, புதிய நகரம், இரத்தினபுரி,
தொ.பேசி/ தொ.நகல்: 045-2222136
ஈ-மெயில்: atcrathnapura@pureceylonte.com

பண்டாரவளை

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
விசாக்கா மாவத்தை, புதிய பதுளை வீதி,
பண்டாரவளை
தொ.பேசி/ தொ.நகல்: 057-2222812
ஈ-மெயில்: atcbandarawela@pureceylonte.com

காலி

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
59/A, உயர் டிக்ஸன் வீதி,
தொ.பேசி/ தொ.நகல்: 091-2232052
ஈ-மெயில்: atcgalle@pureceylontea.com

சர்வதேசக் கிளைகள்

அமைச்சர் (தேயிலை ஊக்குவிப்பு) - M.E./Gulf/N.A

சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் அலகு
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் துணைத் தூதரகம்
த.பெ.இலக்கம்: 51528,
துபாய், ஐக்கிய அரபு இராட்சியம்
தொ.பேசி: 00971 4 3987871
தொ.பேசி (நேரடி): 00971 4 3989349
தொலைநகல்: 00971 4 3987872
ஈ-மெயில்: ctbureau@emirates.net.ae
ceylonteadubai@gmail.com
ceylonte@eim.ae

சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் பிரிவு - ரஷ்யா/சிஐஎஸ்

மூன்றாவது செயலாளர் (ஊக்குவித்தல் உத்தியோகத்தர்)
சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் அலகு
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தூதரகம்
24, ஸ்கெப்கினா வீதி,
மொஸ்கோ *129090* ரஷ்யா
தொ.பேசி: 007 495-688-1620
495-68811651/495-688-1463
தொலைநகல்: 007-495-688-1757
ஈ-மயில்: tea@srilankaembassy.ru

சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் பிரிவு - சீனா

மூன்றாவது செயலாளர் (தேயிலை ஊக்குவித்தல்)
சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் அலகு
இலங்கையின் தூதரகம்,
இல 3, ஜெலான் ஹுவ லு,
பீஜின்க் - 100600
மக்களின் ஜனநாயக சோஷலிசக் குடியரசு

தொ.பேசி : 00-86-10-65322919
தொலைநகல்: 00-86-10-65325426
ஈ-மெயில்: ceylontea@slemb.com

இலங்கை தேயிலை சபை,
574, காலி வீதி,
கொழும்பு 03,
இலங்கை.

தொலைபேசி : +94 112 582121, +94 112 587773
தொலைநகல் : +94 11 2587341
ஈ மெயில் : teaboard@pureceylontea.com
வலையமைப்பு : www.srilankateaboard.lk

